

ம்,
ல்
ளார்ச்சி
படும்.
படும்;
களாகத்
தொடங்
சிறப்பாக






# காஞ்சியில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா (10-3-1979)









# தமிழ்நாடு அரசின் 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

## நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் உரை

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

1979–80 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தையும், 1978-79 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளையும் அவை முன் வைக்க விழைகின்றேன்.

வேலைவாய்ப்பு வசதிகளை, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் எளியோர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதும், கல்வி, மருத்துவ வசதிகளை அதிகப்படுத்தி அவற்றைப் பரவலாக்குவதும் வரும் ஆண்டில் அரசு மேற்கொள்ள இருக்கும் பணிகளின் முக்கிய குறிக்கோள்களாகும். தொழில் வளர்ச்சிக்கு தக்க உதவிகள் தந்து, பிற்பட்ட பகுதிகளில் தொழில்கள் அமைவதற்காக ஊக்கமளிப்பதும், கைத்தறித் துறையைத் தரமான துணிகளை உற்பத்தி செய்வதற்கேற்ற முறையில் வலுப்படுத்துவதும், அடுத்த ஆண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள சிறந்த அம்சங்களாகும். வேளாண்மை, அதனுடன் இணைந்த பிற துறைகள், மின் உற்பத்தி இவற்றின் வளர்ச்சியில் தக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நலிந்தோர் நலன், குழந்தைகள் நலன் பற்றிய நிதி ஒதுக்கங்களும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாகும்.

### வேளாண்மை உற்பத்தி

வரும் ஆண்டில் மொத்தம் 88·73 இலட்சம் டன் உணவு தானியங்களும், 36·45 இலட்சம் டன் பணப் பயிர்களும் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை வேளாண்மைத் துறை வகுத்து செயல்படுத்தும். மேலும் பழத் தோட்டங்கள், தோட்டப் பயிர்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்காக தனி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும். தரமான விதைகள், வேளாண்மை உற்பத்தித் திறன் பெருகுவதற்கு இன்றியமையாதவையாகும். உணவுத் தானிய வகைகளிலும் பணப்பயிர்களிலும் நல்ல விதைகளை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு சிறப்பான பங்கு வகிக்கின்றது. மாநில அரசின் விதைப்பண்ணைகளும், தனிப்பட்ட சீரிய உழவர்களும் உற்பத்தி செய்யும் விதைகளை, தரமானவை என்று சான்றளிக்கும் அமைப்பு தற்போது ஒரு தனிப் பிரிவாக வேளாண்மை இயக்குநரது தலைமையின்கீழ் இயங்கி வருகின்றது. அதனை முற்றிலும் தனித் தன்மை பெற்ற ஒரு அமைப்பாக ஆக்கி, விதை உற்பத்திச் சான்றளிப்புத் துறை ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும், வேளாண்மை பொருட்களுக்கு தரச் சான்று தருவதற்கென 15 'அக்மார்க்' ஆய்வுக் கூடங்களையும், 35 வேளாண்மை விளை




பொருள் தரம் பிரிக்கும் மையங்களையும் (Commercial Grading Centres) நிறுவுவதற்கு வரும் ஆண்டில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கால்நடை வளர்ப்பு

சிறு விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழைகளுக்கும் கால்நடை வளர்ப்பும், பால் பண்ணையும் பெரும் பயனளிக்கும் திட்டங்கள் என்ற காரணத்தால் இவற்றில் தனிக் கவனம் செலுத்தியுள்ளோம். கால்நடைகளின்



தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்கள் வரும், ஆண்டிலும் விரிவுபடுத்தப்படும். இவற்றின்கீழ் 16 கால்நடை கிராம வட்டாரங்கள், 2 கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டங்கள் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும். புதிதாக 10 கால்நடை மருந்தகங்கள் நிறுவப்படும்; 5 கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்படும். சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட அரசூர் கோழி வளர்ப்பிடம் சிறப்பாக

தமிழரசு மலர் 9 இதழ் 18 16.3.1979

செயல்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து பெரும் வரவேற்பு இருப்ப தால், கப்பலூரில் தற்போதுள்ள வசதிகளைப் பயன் படுத்தி, இதேபோன்று, கோழி வளர்ப்பிடம் ஒன்று நிறுவ வேண்டிய ஒதுக்கீட்டைச் செய்துள்ளோம். 2·25 கோடி ரூபாய் செலவில் நவீன ஆட்டு இறைச்சிக் கொட்டில் ஒன்று ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நவீன, சுகாதார முறையில் ஆட்டு இறைச்சி கொட்டில்கள் நிறுவுவதற்கும், இறைச்சியை பதப் படுத்துவதற்கும், விற்பனை வசதிகளைப் பெருக்கு வதற்கும் இறைச்சி அபிவிருத்தி நிறுவனம் ஒன்று அமைக்க முடிவு எடுத்துள்ளோம் என்பதை உறுப்பினர் களுக்கு மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

### பால் பண்ணைத் திட்டங்கள்

பால் பெருக்குத் திட்டத்தின் முதல் கட்டத்தில் தமிழகத்தின் சாதனை, இந்திய நாடு முழுவதிலும் பாராட்டைப் பெற்றுள்ளது. பால் பெருக்குத் திட்டம் இரண்டாம் கட்டத்தை அடுத்த ஆண்டு செயலுக்குக் கொண்டு வர மைய அரசு எண்ணியுள்ளது. இதன் கீழ், வரும் ஐந்து ஆண்டுகளில் 40 கோடி ரூபாய் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் 9·5 இலட்சம் கால்நடைகள் கொண்டு வரப்பட்டு, 8 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்




என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தை செயல் படுத்துவதையொட்டி, கூட்டுறவு அமைப்பை விரிவு படுத்த வேண்டிய நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளோம்.

### வன வளம்

காடுகள் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள இந்த அரசு, அடுத்த ஆண்டு 30,700 ஹெக்டேர் பகுதியில் 263 இலட்சம் ரூபாய் செலவில் மரங்கள் வளர்க்க வகை செய்துள்ளது. நடப்பாண்டில் 23,300 ஹெக்டேர் பகுதியில் மரங்கள் வளர்க்க ரூபாய் 239 இலட்சம் செலவிடப்படும். 35 இலட்சம் ரூபாய்ச் செலவில், கட்டி ரப்பர் செய்யும் தொழிற்சாலை ஒன்றும் உருவாக்கப்பட்டு வருகின்றது.




கோடைக்கானல் மலைப் பகுதியில் 400 ஹெக் டேர் நிலப் பரப்பில் சின்கோனா பயிரிடும் திட்டத்தை யும், 160 ஹெக்டேரில் ஜெரேனியம் பயிரிடும் திட்டத் தையும் சின்கோனாத் துறை செயல்படுத்தத் தொடங்கி யுள்ளது. மேலும் 400 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் டயஸ்கோரியா பயிரிட்டு, மருந்துப் பொருளான டயஸ்ஜெனின் தயாரிக்கும் திட்டம் ஒன்று, 80 இலட்சம் ரூபாய்ச் செலவில் செயல்படுத்தப்படுகிறது; இதன் மூலம் அன்னியச் செலாவணியும் மிச்சமாகும். இத் துறைக்கென அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 255 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் விரிவு படுத்தப்படுவதையொட்டி, அதனை அடுத்துள்ள மிருகக் காட்சிசாலை வண்டலூர் பகுதிக்கு மாற்றப் படும். இயற்கைச் சூழலில் மிருகங்கள் இருக்கும் வண்ணம், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் உருவாக்கப்பட இருக்கும் இக் காட்சிசாலை அமைக்க,




முதற் கட்டத்தில் மொத்தம் 105 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். வனத் துறையின் பொறுப்பின் கீழ் இந்த மிருகக் காட்சிசாலை செயல்படும்.

### மீனளம்

மீனளத் துறை வளர்ச்சிக்கென அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2·76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 160 விசைப் படகுகள் வினியோகிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. தமிழக மீனள வளர்ச்சி நிறுவனம் நேரடியாக இறால் ஏற்றுமதி செய்யும் முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டும் ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும்.




### கிராம வளர்ச்சி

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் 161 ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் இந்த ஆண்டு பலனடைகின்றன. புதிதாக உருவாக்கப் பட்ட இந்தத் திட்டத்தின்கீழ், கிராம பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான வேளாண்மை உற்பத்தி, நில மேம்பாடு, கறவையின வளர்ச்சி, ஆடு, கோழி வளர்த்தல் ஆகியவற்றுடன், பட்டுப்பூச்சி வளர்த்தல், கிராமப்புறத்தில் தொழில் வளர்ச்சி ஆகியவற்றிற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, அதில் குறிப்பாக நிலமற்ற விவசாயிகள், சிறு உழவர்கள், தாழ்த்தப்பட்டோர்

#### வரவு செலவுத் திட்டம் அல்லது பட்ஜெட்

நமது அரசியலமைப்பில் எந்த இடத்தி லும் 'பட்ஜெட்' என்னும் சொல் பயன்படுத்தப் படவில்லை. முன்பு இங்கிலாந்தின் நிதி அமைச்சர், ஆண்டு நிதி நிலை பற்றிய திட்டங்களை ஒரு தோற்பையில் வைத்து எடுத்துக் கொண்டு, 'காமன்ஸ் சபை'க்குப் போவார். அத் தோல் பைக்குத்தான் 'பட்ஜெட்' என்று பெயர். நாளடைவில் பழக் கம் காரணமாக அந்தப் பையின் பெயர் அதன் உள்ளே இருந்த பத்திரங்களின் பெயராக மாறி விட்டது. இந்திய அரசியலமைப்பில் இதற்கு 'ஆண்டு நிதி நிலை அறிக்கை' என்னும் பெயரே கொடுக்கப்பட்டுள்ளது.



ஆகியோர் சிறப்பாக பலன் பெற்று அவர் தம் வாழ்க்கை நிலை உயரும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மொத்தம் 7·12 கோடி ரூபாய் அரசு உதவி தருவதுடன், வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கணிசமாகக் கூடுதல் நிதி வசதி பெற்று கிராம மக்களுக்கு வழங்கப்படும். வரும் ஆண்டில் 30 ஊராட்சி ஒன்றியங்கள் மேலும் சேர்க்கப்பட்டு, சுமார்




10 கோடி ரூபாய்க்கு மேல் அரசு இதற்கென செலவிட எண்ணியுள்ளது. இத் திட்டம், அரசின் வளர்ச்சித் திட்டங்களின் பலன் சமுதாயத்தின் அடித் தளத்தில் உள்ளவர்களுக்கும் போய்ச் சேர்வதற்கு நக்க உதவி செய்யும். மேலும், கிராமப்புறங்களில் நிலவும் வேலையின்மையை ஒழிப்பதற்கான பெரு முயற்சியிலும் இத் திட்டம் சிறப்பான பங்கு வகிக்கும்.




கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கட்கு குறுகிய காலக் கைத்தொழில் பயிற்சி அளிப்பதற்கான புதிய திட்டமொன்றையும் அடுத்த ஆண்டு அரசு செயல் படுத்தும். சுமார் 10,000 பேர்களுக்கு கைத்தொழில் பயிற்சி அளிப்பதற்கும், கருவிகள் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதென்பது ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்பு (Small Farmers Development Agency), வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டு திட்டம் (Drought Prone Area Programme), ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme) ஆகியவற்றின் மூலம் பலர் பயனடைந்துள்ளனர். ஆயினும், இவற்றினால் நேரடியாக பயன் எய்தாத, வேலை வாய்ப்பு ஏதும் கிடைக்காத, படித்த, படிக்காத, வேலையில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு ''உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்'' செயலாக்கப்படும். இத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருக்கும், 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும்




வேலை கோரி தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தக் காரர் (Contractor) இல்லாமல், அரசுத் துறைகளின் நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப் படும். இத்திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்களின் ஊதியம், அன்றாடம் நிறைவேற்றப் பட்ட பணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். இதன்படி நாளொன்றுக்குச் சுமார் ரூபாய் மூன்றும், அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும். இப்புதிய திட்டத்திற்கென நிர்வாகஅலுவலர்களுக்கு தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பாசன வசதி

இவ்வாண்டு பி.டி. ராஜன் கால்வாய்த் திட்டம், மருதா நதி நீர்த் தேக்கத் திட்டம் ஆகிய இரண்டு நடுத்தரப் பாசன திட்டங்கள் முடிக்கப்பட உள்ளன. இத்திட்டங்களினாலும், பிற பாசனத் திட்டங்களினாலும் இவ்வாண்டு கூடுதலாக 3,000 ஹெக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்க முடியுமென எதிர்பார்க்கப் படுகிறது. பாசனத் துறைக்காக வரும் ஆண்டுத் திட்டத்தில் 25·17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டு உள்ளது. புதிய பாசனத் திட்டங்களுக்காக ஒரு கோடி ரூபாயும் வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்பு தடுப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு கோடி ரூபாயும் குறிப்பிடத்தக்கவையாகும். வரும் ஆண்டில்




சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்காகவும் ஏரி குளங்களைத் தூர் வாரி சீரமைக்கவும் வரவு-செலவுத் திட்டத்தில் 2·75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிருதமால் நதி–பரலையாறு பகுதியில் 183 இலட்ச ரூபாய்ச் செலவில் 100 குழாய்க் கிணறுகள் அமைத்து 12,500 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்ட வேலை வரும் ஆண்டில் தொடங்கப்படும்.

### மின் உற்பத்தி

மின்சார உற்பத்தியிலும், மின் வழங்குவதிலும் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வந்ததன் விளைவாக மின்சார விநியோகம் ஒரே ஆண்டு காலத்தில் 17 சத விகிதம் உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 9,448 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரத்திற்கு எதிராக இந்த ஆண்டு 11,000 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மொத்தம் உள்ள 25,526 அரிசன குடியிருப்புகளில் 25,305 குடியிருப்புகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள குடியிருப்புகளும் ஓரிரு மாதங்களில் மின்னொளி பெற்றுவிடும். இந்த ஆண்டு மின்வசதிப் பணிகளுக்காக 114 கோடி ரூபாய் செலவிட ஆண்டுத் திட்டம் வகை செய்கின்றது. சேர்வலாறு நீர் மின் திட்டம், மேட்டூர் அணைக்குக் கீழ் நீர் மின் உற்பத்தி செய்யும் புதிய திட்டம், தூத்துக்குடி அனல் மின்

நிலையப் பணி இவற்றுக்கு ஏற்ற நிதி ஒதுக்கங்கள் செய்துள்ளதன் காரணமாக அடுத்த ஆண்டு மின் திட்டப் பணிகளுக்கு 152 கோடி ரூபாய் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றின் பயனாக தமிழ்நாடு மின்கட்டமைப்பின் (Tamilnadu Grid) நிறுவப்பட்ட




திறன் 2509 மெகாவாட்டிலிருந்து, அடுத்த ஆண்டு 2929 மெகாவாட்டாக உயரும் என்று எதிர்பார்க்கலாம். மேலும் குடிசைப்பகுதியில் வாழும் எளியோரும் மின்சார இணைப்பு பெற்று பயனடைவதற்காக, மின்சார மீட்டர்கள் இன்றி, மாதாந்திரத்தொகை மட்டும் செலுத்தும் திட்டமொன்று, அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்

### தொழில் வளர்ச்சி

சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் வ்ளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்துவதும், அதன் மூலம் வேலை வாய்ப்புகளை கிராமப் பகுதிகளில் பெருமளவில் பரவலாக உருவாக்க முயற்சிகள் எடுப்பதும், அரசின் தொழிற் கொள்கையின் முக்கிய அம்சங்களாகும். இதனடிப்படையில் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, பட்டுத் தொழில் வளர்ச்சி, தீப்பெட்டித் தொழில் பெருக்கம், தேயிலைத் தொழில் கூட்டுறவுகள் விரிவாக்கம், சிறு தொழில்கள் இவற்றில் ஒரு ஆண்டுக் காலத்தில் 1,30,000 நபருக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டத் தொழில் மையங்கள் சிறப்பான பணியாற்றியுள்ளன. புதிய சிறு தொழில்கள் தொடங்குவதற்கான திட்டங்களைத் திட்டுதல், பொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் பற்றிய ஆய்வுகள் செய்தல், தொழில் முனைவர்களுக்கு (Entrepreneurs) தொழில் நுட்ப உதவி அளித்தல், நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்றுத் தருதல் போன்ற தேவையான பல்வேறு உதவிகளை ஒருங்கிணைந்த முறையில் இந்த மையங்கள் அளித்து வருகின்றன. தற்போது 8 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் இத் திட்டம், ஒரு சில மாதங்




களுக்குள் மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படும். இதற்கென மொத்தம் 153 இலட்சம் ரூபாய் அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு நியமிக்கப்பட்ட டாக்டர் நாயுடம்மா அவர்கள் தலைமையிலான குழு, கிராமப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி பரவலாக சிறு தொழில்களை ஏற்படுத்தவும், கைவினைஞர்கள் தத்தம் தொழில்களை நவீனப்படுத்தவும் பல்வேறு பரிந்துரைகளைக் கொண்ட தனது அறிக்கையை சில நாட்களுக்கு முன் அரசுக்கு அளித்துள்ளது. பல்லாயிரக் கணக்கானோர்க்கு வேலை வாய்ப்புகளைத் தருவதற்கேற்ப, 300-க்கு மேற்பட்ட சிறு தொழில்கள் தொடங்க அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகளை அரசு பரிசீலித்து விரைவில் செயல்படுத்த உறுதி கொண்டுள்ளது. சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், கதர்-கிராமத் தொழில் வாரியம் போன்ற நிறுவனங்களும் இம் முயற்சியில் பெரும் பங்கு வகிக்கும். இதனைச் செயல்படுத்துவதைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கு இந்தக் குழு, கிராமத் தொழில் வளர்ச்சிக் குழு என்ற பெயரில் அரசுக்கு தொடர்ந்து உதவி அளித்து வரும்.

இந்த ஆண்டு பட்டுப்பூச்சி வளர்ப்பதற்குத் தேவையான முசுக்கொட்டை புதிதாக சுமார் 4,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது; 1979–80ஆம் ஆண்டில் கூடுதலாக 8,000 ஏக்கரில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பட்டுப்பூச்சி வளர்ப்பதில் உழவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், பட்டு நூல் பிரித்தெடுப்பதற்கான கருவிகளை வழங்குவதற்கும், பட்டுக் கூடு, பட்டு நூல் விற்பதற்கான வசதிகளை உருவாக்குதல் போன்ற புதிய திட்டங்களுக்காகவும் அடுத்த ஆண்டு மொத்தம் 1·23 கோடி ரூபாய் செல




விடப்படும். இந்த ஆண்டில் சுமார் 20,000 கூடுதல் வேலை வாய்ப்புகளும், அடுத்த ஆண்டில் சுமார் 40,000 கூடுதல் வேலை வாய்ப்புகளும் இதன் மூலம் உருவாக்கப்படும். இத் தொழிலின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதற்கென தனித் துறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில் மூன்று புதிய தீப்பெட்டி பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும்; மேலும் 20 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்படும். தற்போதுள்ள பணிக் கூட்டுறவுச் சங்கங்களில், கூடுதல் உற்பத்தியாளர்களைச் சேர்க்கவும் திட்டமிட்டுள்ளோம். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மெழுகு, பொட்டாசியம் குளோரேட் போன்ற அடிப்படை மூலப் பொருட்கள் வினியோகத்தில் சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றது. இவற்றின் விளைவாக இந்தத் தொழிலில் வரும் ஆண்டில் சுமார் 30,000 கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நாட்டின் மற்ற பகுதிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. கடந்த ஆண்டில் சுமார் 5,500 சிறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 11 தேயிலைத் தொழிற்சாலைகள் மொத்தம் 53 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்துள்ளன. தமிழ்நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் 10 சதவீதம் இத் தொழிற்சாலைகள் வாயிலாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நடப்பு ஆண்டில் 6 தொழிற்சாலைகளை விரிவுபடுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. அடுத்த ஆண்டில் மற்றுமொரு தொழிற்சாலை தொடங்கப்படும். இம்

முயற்சிகளினுல் கூடுதலாக 3,500 ஏக்கரில் தேயிலை பயிரிடப்படுவதுடன் 10,000 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்படும்.



கிராம கைத்தொழில்கள் வளர்ச்சியிலும், கதர் வளர்ச்சியிலும் அரசு தொடர்ந்து தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. 1976—77-ல் 4 கோடி ரூபாய் அளவில் இருந்த கதர் விற்பனை இந்த ஆண்டில் 6¼ கோடி ரூபாய் அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. கதர் வாரியத்தின் ஆதரவில் உள்ள கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை இந்த ஆண்டு 27·3 கோடி ரூபாயை எட்டும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. வரும் ஆண்டில் கதர் விற்பனை 6½ கோடி ரூபாயாகவும், கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை 32 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த ஆண்டு புதிதாக தொடங்கப்பட்ட, சின்னஞ்சிறு தொழில்கள் நடத்த 900 தொழிற்கூடங்கள் கட்டும் புதிய திட்டத்தின்கீழ், இதுவரை 310 தொழிற் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 590 தொழிற்கூடங்களும் இவ்வாண்டுக்குள் கட்டி முடிக்கப் படும். வணிக வங்கிகள் இந்த தொழிற் கூடங்களை தொழில் முனைவர்கள் (Entrepreneurs) நேரடியாக வாங்க உதவ முன்வந்து, இந்த திட்டத்திற்குப் பெரிய ஆதரவை அளித்துள்ளன. இதன் விளைவாக அடுத்த ஆண்டு சுமார் 200 இடங்களில் மொத்தம் சுமார் 2,000 சின்னஞ் சிறு தொழிற் கூடங்களை, 1·5 கோடி ரூபாய் செலவில் கட்டி சிறு தொழில் முயற்சிக்கு ஊக்கம் அளிக்க சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் திட்டம் வகுத்துள்ளது. மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டத் தின் கீழ் மூலதன உதவித்தொகை தற்போது 33 தாலூகாக்களில் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்துடன்




மேலும் பல பின்தங்கிய தாலூகாக்களில் மாநில அரசு தனது பொறுப்பிலிருந்து சிறு தொழில் நடத்த முனைவர்களுக்கு மூலதன மானியம் அளிக்க முடிவு செய்துள்ளது. இதன்கீழ், சிறு தொழில் முதலீட்டில் மொத்தத்தில் 15 சத வீதத்திற்கு மேற்படாமல் அரசு மானியம் வழங்கும். புதிய சிறு தொழில்களை ஏற் படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் அதே நேரத்தில், முன்பே ஏற்படுத்தப்பட்ட சிறு தொழில்கள் நலிவு அடைவதைத் தடுப்பதும், நலிந்துள்ள சிறு தொழில்கள் இருப்பின், நலிந்துள்ளதன் காரணத்தை அறிந்து மீண்டும் அச் சிறு தொழில்கள் வளர வசதி செய்து கொடுப்பதும் இந்த அரசின் கொள்கையாகும். இதன் அடிப்படையில் நலிவுற்ற சிறு தொழில்கள் புத்துயிர் பெறுவதற்கு அரசு புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. தற்போது நலிவுற்ற சிறு தொழில்களை சீரமைப்பது பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப் பதற்காக தொழிற் துறைச் செயலாளர் தலைமையில், வணிக வங்கிகள், மத்திய அரசின் சிறு தொழில் உதவி நிலையம், தொழில் வணிகத்துறை போன்றோர் அடங் கிய குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. சிறு தொழில் முனைவர்களில் பலர், தொழில் விரிவடையும்போது, மூலதனத்தை ஏற்ற அளவு அதிகரிக்க முடியாமல் துய ருறுவதை இக் குழு கண்டறிந்தது. நலிந்த சிறு தொழில்கள் புத்துயிர் பெற வணிக வங்கிகள் தக்க உதவி செய்யும் முறையில், மூலதனத்துக்கான நிதி உதவி (Margin Money) வழங்கும் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. சிட்கோ (SIDCO) நிறுவனம் இதற்காக அடுத்த ஆண்டு முதற்கட்டமாக 25 இலட்சம் ரூபாய் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.




தமிழக அரசு 29 கோடி ரூபாய்ச் செலவில் அரியலூரில் நிறுவி வரும் சிமென்ட் ஆலை மே மாதம் செயல்படத் தொடங்கும். அசோக் லேலண்ட் நிறுவனம் கூடுதலாக 5,000 பேருந்துகள் உற்பத்தி செய்வதற்கான முயற்சிக்கும் சிம்ப்ஸன்ஸ் நிறுவனம் புதியதாக 12,000 பேருந்துகள் உற்பத்தி செய்வதற்கான முயற்சிக்கும் மாநில அரசு தக்க உதவிகள் செய்து ஊக்கமளித்து வருகின்றது.



## கைத்தறி

கைத்தறித் துணிகளின் உற்பத்தியைப் பெருக்கி துணித் ...க்கத்தை தவிர்க்கும் வகையில் புது வண்ணம், புது வடிவமைப்பு, புது ரகங்களில் துணி உற்பத்தி செய் யப்பட்டது. பாலியஸ்டர் துணிகள், கேம்பிரிக் ரகங்கள், அச்சிட்ட வாயில் சேலைகள், அச்சிட்ட பட்டுச் சேலைகள் போன்றவை புதிதாக உற்பத்தி செய்யப்பட்டன. கவர்ச்சிகரமான வண்ணங்களில் துணி உற்பத்தி செய்ய உதவும் வகையில் இரண்டு நவீன சாயச்சாலைகளும் ஒரு வடிவமைப்பு நிலையமும் (Design Centre) இயங்கி வருகின்றன. வரும் ஆண்டில் மேலும் இரண்டு வடிவமைப்பு நிலையங்களும், அய்ந்து நவீன சாயச்சாலை களும் தொடங்கப்படும். கைத்தறித் துணிகளுக்கு பதனிடும் வசதி அளிக்க நிறுவப்பட்ட ஈரோடு கூட்டுறவு பதனிடும்சாலை, 22·50 இலட்சம் ரூபாய்ச் செலவில்




விரிவாக்கப்பட்டு வருகிறது. மேலும் பாலியஸ்டர் ரக துணிகளைப் பதனிடுவதற்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற்று, 31 இலட்சம் ரூபாய்ச் செலவில் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத் திட்டங்களின் பயனாக தொடக்கச் சங்கங்களின் உற்பத்தி 1976—77இல் 35 கோடி ரூபாயி லிருந்து 1978—79இல் 45 கோடி ரூபாயாகவும், கோ-ஆப்டெக்ஸின் விற்பனை 1976—77இல் 18 கோடி ரூபாயாக இருந்தது, 1978—79இல் 30 கோடி ரூபாயாகவும் உயரும்.

தமிழ் நாட்டில் செயல்படும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் விரிவாக்க வேலை 12 கோடி ரூபாய்ச் செலவில் முடிக்கப்பட்டு அவற்றின் மொத்த கதிர்கள் 2 இலட்சத்திலிருந்து 2·94 இலட்சம் ஆக உயர்த்தப் பட்டுள்ளன. 1977-ம் ஆண்டு நூல் உற்பத்தியில் 114 இலட்சம் ரூபாய் மொத்தம் நஷ்டமடைந்த இந்த ஆலைகள், 1978இல் மொத்தம் 200 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இயங்கின.

தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நிர்வாகத்தில் உள்ள இரண்டு நூற்பாலைகளிலும், உத்தரவாதம் அளித்துள்ள தனியார் துறை நூற்பாலைகளிலும் உற்பத்தி, உற்பத்தித் திறன், வேலைவாய்ப்பு முதலியவை அதிகரித்துள்ளன. அரசின் உத்தரவாதம் திரும்பப் பெற்று, ஒரு ஆலை மீண்டும் முந்தைய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் கைத்தறித் துறைக்கென மொத்தம் 866 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்து

தமிழக அரசின் போக்குவரத்து நிறுவனங்கள், பயணிகளுக்கு நல்ல வசதிகளைத் தருவதற்கேற்ப பேருந்துகளை 7 அல்லது 8 ஆண்டுகட்குள்ளேயே மாற்றி, புதிய பேருந்துகள் விடும் கொள்கையைப் பின்பற்றி வருகின்றன. இதற்கென மொத்தம் 15·2 கோடி ரூபாய் செலவில் 950 பேருந்துகள் அடுத்த ஆண்டில் வாங்கப்படும். மேலும் போக்குவரத்து வசதிகளற்ற பகுதிகளுக்கு வசதி அளிக்கவும், மற்ற பகுதிகளில் தேவைக்கேற்ப வசதிகளைப் பெருக்குவதற்குமாக மொத்தம் சுமார் 520 சிற்றுந்துகள் (Minibuses), பேருந்துகள் 8·32 கோடி ரூபாய்ச் செலவில் அடுத்த ஆண்டு வாங்கப்படும்.




போக்குவரத்துக் கழகங்களில் ஒன்றைத் தவிர மற்ற நிறுவனங்களனைத்தும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. அவை, ஈட்டும் ஆதாயத்தின் ஒரு பகுதியை சாலை மேம்பாட்டு வசதிக்காக செலவிடத் திட்டமிட்டுள்ளன. சாலைகளைச் செம்மையாகப் பேணவேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அரசு, வருவாய்க் கணக்கில், இந்த ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மொத்தம் 12·12 கோடி ரூபாயும் அடுத்த ஆண்டு மொத்தம் 19·07 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. அடுத்த ஆண்டு மூலதனக் கணக்கின்கீழ் சாலைகள் அமைக்க 10·14 கோடி ரூபாய் செலவிடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

## கல்வி

அடுத்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டம், ஆரம்பக் கல்விக்கென புதிதாக 1,000 கூடுதல் ஆசிரியர்களை நியமிப்பதற்கும் 200 உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிப்பதற்கும் வகை செய்கிறது. 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்கள் வழங்கவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்தை நன் முறையில் செயல்படுத்துவதற்கு ஏற்ற முறையில் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மையச் சமையற் கூடங்களை கேர் (CARE) நிறுவன உதவியுடன் அடுத்த ஆண்டில் அரசு நிறுவும். பள்ளியில் தொடர்ந்து படிக்க வசதியற்று, இடையில் படிப்பை நிறுத்தி விடுபவர்கள் பலர்; இவர்களில் ஆர்வமுள்ளவர்கள் 14 வயது நிரம்பிய பின், நேரடியாக எழுதித் தேர்ச்சி பெற வாய்ப்பு தரும் வகையில் எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு ஒன்றை அரசு நடத்தும். இதே




நோக்கத்துடன், பள்ளியிறுதித் தேர்விலும், பகுதி முறைத் தேர்வுக்கு (Compartmentalisation) அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த ஆண்டு தொடங்கப்பட்ட உயர்நிலைக் கல்விக்கு மேற்பட்ட இரண்டாண்டுப் படிப்புக்கான திட்டங்கள் நன்முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுமார் 78,000 மாணவர்கள் புகுமுக வகுப்பில் படிப்பதற்கு எதிராக, இந்த ஆண்டு புதிய 11வது வகுப்பில் 1,14,000 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் 187 கல்லூரிகளில் மட்டுமே மேல்படிப்பிற்காக இருந்து வந்த வாய்ப்பு, இவ்வாண்டு முதல் 912 உயர்நிலைப் பள்ளிகளில் உருவாக்கப்பட்டதன் மூலம் உயர் கல்வி பெறுவதற்கான வசதிகள் பரவலாக்கப்பட்டுள்ளன என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் புதிதாக அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்கான முயற்சிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டு, வரும் கல்வி ஆண்டு தொடக்கத்தில் அவை கட்டி முடிக்கப்படும். இவற்றிற்கு மொத்தம் 6·0 கோடி ரூபாய் செலவிடப்படும். நகராட்சி, தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கூடங்கள் கட்டுவதற்கும், கூடுதல் இட வசதியை உருவாக்கும் பொருட்டும் ஈட்டு மானியம் அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது. இதன்படி, அறிவியல் ஆய்வுக் கூடம், விஞ்ஞானக் கருவிகள், கூடுதல் இட வசதி ஆகியவற்றிற்காக பள்ளி ஒன்றுக்கு மொத்தம் $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் வரை செலவிட அனுமதித்து, அதில் 40 சதவிகிதம் வரை 1 இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் அரசு ஈட்டு மானியமாக வழங்கும்.

இதற்கென வரும் ஆண்டில் மொத்தம் 1.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் அத்தகைய பள்ளி ஒவ்வொன்றின் நூலகத்திற்கும் சுமார் 6 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் வாங்குவதற்கும் அவ்வாறே ஈட்டு மானியம் வழங்கப் படும். அரசுப் பள்ளிகள், பிற பள்ளிகள் இவற்றில்




புத்தகங்கள் வாங்குவதற்காக மொத்தம் 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் படிப்பு முறைக்கென 1,740 பட்ட மேற்படிப்பு பெற்ற ஆசிரியர்களை வரும் ஆண்டில் கூடுதலாக நியமிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இப் புதிய கல்வித் திட்டத்தின்கீழ் தொழில் பயிற்சி தர மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியடைந் துள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தம் 709 பள்ளிகளில் 1,153 பிரிவுகளில் 24,400 மாணவர்கள் தொழில் பயிற்சி தரும் பிரிவுகளில் சேர்ந்துள்ளார்கள் என்பதும், இந்திய நாடு முழுவதற்கும் நமது மாநிலம் இதில் வழிகாட்டியாகத் திகழ்கின்றது என்பதும் நாமனைவரும் பெருமிதம் அடைவதற்கு உரியதாகும்.

அடுத்த ஆண்டு கல்லூரிகளில் புகுமுக வகுப்பு இல்லாமல் போகும்போது கல்லூரிகளில் தொடர்ந்து பணியாற்றி வருபவர்கள், வேலை வாய்ப்பை இழந்து விடமாட்டார்கள் என்ற அரசின் உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பல்வேறு கல்லூரிகளில் புதிய பட்ட வகுப்புகள், பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கவும், மாலைநேர வகுப்புகள் தொடங்கவும் மொத்தம் 8 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை மேம் படுத்திக் கொள்வதற்காக, அவர்களை மேற்




படிப்புக்கு அனுப்பவும் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. தற்போது சென்னையிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரையிலும் சட்டக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன, சட்டக் கல்லூரி வசதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கோவை, திருச்சி ஆகிய பகுதிகளில் சட்டக் கல்லூரிகள் அடுத்த ஆண்டு துவக்கப்படும்.

அடுத்த ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் புதிய பாலிடெக்னிக் ஒன்று நிறுவப்படும். சென்னையில் கப்பற் கட்டுமானத் தொழில் பற்றியும், பிளாஸ்டிக் தொழில் பற்றியும், திருச்சியிலும், கோவையிலும் எலெக்ட்ரானிக் தொழில் பற்றியும் புதிய பாடத் திட்டங்கள் அடுத்த ஆண்டு முதல் கற்பிக்கப்படும்.

## தமிழ் வளர்ச்சி

தமிழ்க் கலை, பண்பாடு இவற்றின் வளர்ச் சிக்கான முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாமல்லபுரத்திலுள்ள சிற்பப் பள்ளி, வசதிகள் கூடுதலாகப் பெற்று, உற்பத்திப் பிரிவுடன் செயல்படும். சென்னை அரும் பொருட்காட்சி யக மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கங்களும் செய்யப் பட்டுள்ளன. மாவட்டத் தலைமை டங்கள்



ஒவ்வொன்றிலும் அரும் பொருட் காட்சியகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு சேலத்தில் அரும் பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளையும் அரசு செய்யும்.

## மருத்துவ வசதி

"மாநிலத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள ஒவ்வொருவரும், நகரப்பகுதியில் உள்ளோர் பெறும் வசதிகளை அடையவேண்டும் என்பதே



இந்த அரசின் இலட்சியம்" என்று சென்ற வரவு-செலவுத் திட்ட உரையின்போது குறிப்பிட்டேன். கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளைப் பரவ லாக்கும் இந்த அரசின் புதிய திட்டத்தின்கீழ், வரும் ஆண்டில் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 62 இலட்சம் ரூபாய் செலவில் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்படும். இத்துடன் மொத்தம், மாநிலத்தில் 224 ஆரம்ப சுகாதார நிலையங்கள், நடமாடும் மருத்துவப் பிரிவுகள் கொண்டதாக அமையும். கிராமங்களில் வைத்திய வசதியைப் பரவலாக்கும் இந்த சீரிய முயற்சிக்கு, மத்திய அரசு தனது சிறப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கவேண்டும் என்று மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. கிராமப் புறங்களில் நல்ல வசதிகளை உருவாக்குவதில் பேரார்வம் கொண்டுள்ள இந்த அரசு, மற்றுமொரு புதிய திட்டத்தை வரும் ஆண்டிலிருந்து செயல் படுத்த முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர் களனைவரும் வரவேற்பர் என்பதில் எனக்கு அய்ய மில்லை. விபத்துக்கள் கிராமப்புறங்களில் ஏற்படும் போது, வேண்டிய மருத்துவ உதவிகளை விரைந்து

தருவதற்காக 50 மருத்துவ மனைகளில் விபத்து உதவிப் பிரிவுகள் 45 இலட்ச ரூபாய்ச் செலவில் ஏற்படுத்தப்படும். தக்க மருத்துவ வசதி அளிப் பதற்கு ஏற்ற கருவிகள் கொண்ட வண்டிகளுடன் இவை செயல்படும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதலுதவி அளிப்பதற்கும் மருத்துவ மனைகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கும் பயன்படுத்தப்படும். ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கும், மருத்துவர்களுக்கான வீடுகள் கட்டுவதற்கும் வரும் ஆண்டில் 43·75 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளோம், ஆரம்ப சுகாதார நிலையங்களையொட்டிய கிளை நிலையங்களில் மருந்துகள் வழங்கப்படுவதற்கும் கூடுதலாக வரும் ஆண்டிலிருந்து 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை அவையின்முன் வைத்தபோது தொண்டு நிறுவனங்கள் அமைக்கும் 50 சிறு சுகாதார நிலையங் களுக்கு உதவ திட்டமிட்டதை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த ஆண்டு 66 சிறு சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், இந்த அரசு இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 120 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க உதவியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். வரும் ஆண்டில் அரசு இத் திட்டத் திற்குத் தொடர்ந்து ஆதரவு தந்து, 60 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க உதவும்.

செவிலியர் பயிற்சிக்கான வசதி விரிவாக்கப் பட்டதன் விளைவாக இந்த ஆண்டு 300 பயிற்சி இடங்கள் உள்ளன; அடுத்த ஆண்டில் இதனை மேலும் விரிவுபடுத்தி 550 பயிற்சி இடங்களாக உயர்த்தப்படும். இதற்கென சேலத்திலும், திருச்சியிலும் புதிய பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்படும். கண் சிகிச்சை, காது-மூக்கு-தொண்டை மருத்துவம்,




இரத்த சேமிப்பு, மருத்துவப் பதிவேட்டுத் துறை போன்ற சிறப்புத் துறைகளின்கீழ், 10 மாவட்ட மருத்துவ மனைகளிலும், 14 மற்ற அரசு மருத்துவ மனைகளிலும் மொத்தம் 28 சிறப்புப் பிரிவுகள் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும். இரண்டு மாவட்ட மருத்துவ மனைகளிலும் 17 மற்ற மருத்துவ மனைகளிலும் கூடுதல் கட்டடங்கள் கட்ட மொத்தம் 53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.




மருத்துவக் கல்வி, மருத்துவ ஆராய்ச்சியின் மேம்பாட்டிற்காக சென்னை மருத்துவக் கல்லூரி ஒரு பட்ட மேற்படிப்பு நிலையமாக மாற்றப்படும். இதற்காக இக்கல்லூரியில் உள்ள எல்லாப் பிரிவுகளும் தரம் உயர்த்தப்பட்டு மாநில மட்டத்தில் சிறந்த மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இக் கல்லூரிக்கு நரம்பியல் பிரிவு போன்ற பிரிவுகளில் சிறப்பான கருவிகள் வாங்குவதற்காகவும் அரசு வரும் ஆண்டில் வகை செய்துள்ளது. மருத்துவக் கல்லூரிகள் மேம்பாட்டுக்கான புதிய பணிகளுக்காக 32·87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்




டுள்ளது. அடுத்த ஆண்டின் மருத்துவத் திட்டங்களின் விளைவாக 326 மருத்துவர் பதவிகளும், 489 செவிலியர் பதவிகளும், 690 துணை மருத்துவப் பணியாளர் பதவிகளும், மற்ற பதவிகள் 405-ம் உருவாக்கப்படும்.

இந்திய மருத்துவ முறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் இரண்டு மூலிகைப் பண்ணைகளை விரிவாக்கி புதிதாக அய்ந்து இடங்களில் மூலிகைப் பண்ணைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ முறையின்கீழ் 20 கிராம மருந்தகங்கள் தொடங்கவும், 15 மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இந்திய மருத்துவத் துறைக்கு 126 இலட்சம் ரூபாய் மொத்தம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### குடிநீர் வடிகால் வசதி

நடப்பு ஆண்டில் 2,317 முதல், இரண்டாம் பிரிவு கிராமங்களுக்கு, சுமார் 12 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் வழங்கி




இருக்கிறது. இதன் மூலம் ஏறக்குறைய 10 இலட்சம் மக்கள் பயனடைந்து இருக்கிறார்கள். மொத்தம் 5,420 குடிநீர் வசதி அற்ற முதல், இரண்டாம் பிரிவு கிராமங் களுக்கு ரூபாய் 25 கோடி செலவில் நீர் வழங்கும் பணி அடுத்த ஆண்டு நிறைவு பெறும். மூன்றாம் பிரிவு கிராமங்களுக்கு நீர் வழங்கும் பணியும் அடுத்த ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும். மேலும் மாநிலம் முழு வதிலும் 17,000 கைப் பம்புகளை பராமரிப்பதற்கு 230 பணியாளர்களைக் கொண்ட நடமாடும் குழுக்கள் வாரி யத்தின்கீழ் பணியாற்றி வருகின்றனர்; வாரியம் 2,730 மின் பம்புகளையும் பராமரித்து வருகிறது.

நடப்பு ஆண்டில் 39 நகராட்சி குடிநீர் திட்டங் கள், 68 நகர பஞ்சாயத்து குடிநீர் திட்டங்கள், 6 நகராட்சி வடிகால் திட்டங்கள் ஆகியவை மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டில் மேலும் 4 நகராட்சி, 41 நகர பஞ்சாயத்து குடிநீர் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டில் 18 நகர குடிநீர் திட்டங்கள் நிறைவு பெற்று நீர் வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டில் 24 குடிநீர் திட்டங்களும் 8 வடிகால் திட்டங்களும் நிறைவுபெறும். நகர குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் ஆண்டொன்றுக்கு சுமார் 7 கோடி ரூபாய் செலவிடப் படும்.

சுமார் 16·16 கோடி ரூபாய் செலவில் மேற் கொள்ளப்பட்டுள்ள சிறுவாணி நீர் திட்டத்திற்கு இந்த ஆண்டு சுமார் 3·46 கோடி ரூபாயும், வரும் ஆண்டு 4·87 கோடி ரூபாயும் செலவிடப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இத் திட்டமும் அடுத்த ஆண்டு நிறைவு பெறும்.

### குழந்தைகள் நலன்

1979ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாக கொண்டாடப்படுகின்றது. குழந்தைகள் அரும் பொருட்காட்சியகம் (Children's Museum) நிறுவ 6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக 250 புதிய குழந்தைகள் காப்பகங்கள் வரும் ஆண்டில் திறக்கப்படும். அடுத்த ஆண்டில் 400 குழந்தை காப்பகங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்படும். அடுத்த ஆண்டில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான இல்லம்




ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. வரும் ஆண்டில் எளிய குடும்பத்திலுள்ள 700 குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகளும், 1,000 ஊனமுற்ற குழந்தைகளுக்கு நடமாட உதவும் ஊன்று கோல்களும் அளிக்கப்படும். ஊனமுற்ற குழந்தைகள் அரசு நிறுவனப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய புதிய சலுகை தரவும் அரசு முடிவு செய்துள்ளது.




### சமூக நலன்

ஊனமுற்றோர்க்கு 1,000 மூன்று சக்கர வண்டிகள் அடுத்த ஆண்டில் வழங்கப்படும். அத்தகையோர் சொந்தமாகத் தொழில் செய்ய வசதியளிக்க 1,000 சிறு கடைகள் (Bunk Stall) அமைத்துத் தரப்படும். திக்கற்ற 1,000 விதவைகளுக்கு தையல் இயந்திரங்களை இலவசமாக வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது.




### தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலன்

தீண்டாமைக் குற்றங்களை இழைப்போர் மீது தீவிர நடவடிக்கை எடுப்பதற்காக 6 நடமாடும் பிரிவுகள் செயல்பட்டு வந்தன. நடப்பாண்டில் கூடுதலாக 7 பிரிவுகள் உருவாக்கப்பட்டு சென்னை, நீலகிரி தவிர்த்து




மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்த தனிப்பிரிவுகள் இயங்கும். அரிசன வீட்டு வசதிக்கென அடுத்த ஆண்டும் 2·20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் பச்சைமலைப் பகுதியில் பெரியபாக்கத்தில் பழங்குடி மாணவர் தங்கிப் படிக்கும் பள்ளி ஒன்றும், நீலகிரி மாவட்டத்தில் இரண்டு பள்ளிகளில் மாணவ மாணவியர் தங்கும் கூடங்களும் (Dormitories) அடுத்த ஆண்டு உருவாக்கப்படும். வரும் ஆண்டில் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். அடுத்த ஆண்டு அரிசன, பழங்குடி மக்கள் நல வளர்ச்சிக்கென மொத்தம் 18·3 கோடி ரூபாய் செலவிடப்படும். பிற்பட்ட வகுப்பினரது நலனுக்கு 7·07 கோடி ரூபாய் செலவிடப்படும்.

### தொழிலாளர் நலன்

தொழில் அமைதியைக் காப்பதிலும், தொழிலாளர் நலன்களைப் பேணுவதிலும் அரசு சிறப்பு கவனம் தொடர்ந்து செலுத்தி வருகின்றது. குறிப்பிட்ட சில தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் உடல் நலம் பரிசோதனை செய்யும் திட்டம் இவ்வாண்டு முதல் தொடங்கப் பட்டுள்ளது. தொழிலாளர் நல நிதி வாயிலாக தொழிலாளரின் குழந்தைகள் கல்வி வசதிக்கு உதவும் செயற் குறிப்புகளும் பரிசீலனையில் இருந்து வருகின்றன. அண்மையில் உருவாக்கப்பட்ட அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (Overseas Man-power Corporation) அயல் நாடுகளில் எந்தெந்தப்




பணிகளுக்கு தேவை இருந்து வருகிறது என்பதைப் பற்றிய விவரங்களையும் நம் மாநிலத்திலிருந்து வெளிநாடு செல்ல விரும்புவோர் தகுதி, அனுபவம் போன்ற விவரங்களையும் தொகுத்து வருகின்றது.

### வீட்டு வசதி

கிராமப் புறங்களில் வீட்டு வசதி அளிப்பதில் அரசு வரும் ஆண்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்தி வரும். கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின்




மூலம் ஒரு இலட்சம் வீடுகளை கட்டும் புதிய திட்டத்தை ஆளுநர் உரையில் அறிவித்துள்ளோம். வரும் ஆண்டில் மாநிலக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், கிராமப்புற வீட்டுவசதிக்காக 4 கோடி ரூபாய் கடனளிக்கத் திட்டமிட்டுள்ளது. அரசு அலுவலர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கான வீட்டு வசதிகளைப் பெருக்குவதற்காக இந்த ஆண்டு 2,00 இலட்சம் ரூபாய் அரசு செலவு செய்யும். வரும் ஆண்டில் கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் செலவு செய்து இத் திட்டம் பரவலாக்கப்படும். அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட கடன் உதவி அளிப்பதற்காக அடுத்த ஆண்டு 182·5 இலட்ச ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

## சென்னைப் பெருநகர வளர்ச்சி

உலக வங்கியின் உதவியுடன் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தை (Madras Urban Development Project) அரசு செயல்படுத்தி வருகிறது. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வீட்டு மனைகளை உருவாக்குவது, சாலைகள் அமைப்பது, போக்குவரத்து, குடிநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்துவது, சத்துணவு வழங்குவது, சிறு தொழில்களை வளர்ப்பது குறித்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை நகர வளர்ச்சித் திட்டங்களுக்காக வரும் ஆண்டு மொத்தம் 14·05 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் சென்னை நகரை அடுத்துள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கை யூர் ஆகிய இடங்களில் வீட்டுவசதி அமைப்புத் திட்டங் களை அரசு செயல்படுத்தி வருகிறது. அரும்பாக்கத்தில் பணிகள் முடிக்கப்பட்டு இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் மக்கள் குடியேறத் துவங்குவர். இதே திட்டத் தின்கீழ், சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் புதிதாக 285 பேருந்துகளை விடுவதன்




மூலம், போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கச் செய்துள்ளது. சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தில் நகரின் குடிநீர் வழங்கும் வசதிகளையும் கழிவுநீர் அகற்றும் வசதிகளையும் பெருக்கும் திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை நகரில் குடிநீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் ஆகிய பணிகளை விரிவுபடுத்தி சீராக்குவதற்கு, இந்த ஆண்டு, சென்னை பெருநகர் குடிநீர்-வடிகால் வாரியம் (Madras Metropolitan Water-Supply and Sewerage Board) புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 20 கோடி ரூபாய்ச் செலவில் குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றும் வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களைச் செயல் படுத்தும். வரும் ஆண்டில் இந்த வாரியம் 8·12 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

## நீதி மன்றங்கள்

வரும் ஆண்டில் 11 புதிய குற்றவியல் நீதி மன்றங்கள் அமைக்கவும் வரவு-செலவுத் திட்டம் வகை செய்கின்றது. இவற்றை அமைப்பதின் மூலம் புதிய நீதி மன்றங்கள் உருவாக்குவது பற்றி நீதிபதி வரதராசன் குழு பரிந்துரைத்த குற்றவியல் நீதி மன்றங்கள் முதல் பகுதி, அனைத்தும் அமைக்கப்பட்டுவிடும்.



## வருவாய்த் துறை

அன்றாடம் மக்களுடன் அரசு தொடர்பு கொள் வதில் கிராம அதிகாரிகள், வருவாய் ஆய்வாளர்கள் (Revenue Inspector) போன்ற வருவாய்த் துறை அலுவலர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட பிர்க்கா (Firka) எல்லைகளை பணிகள் செம்மையாக நடை பெறுவதற்கேற்ற வகையில் திருத்தியமைத்து, கூடுதல்




பிர்க்காக்களை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும் வருவாய் ஆய்வாளர்களுக்கு அந்தந்தப் பகுதி களில் வீடு கட்டித்தரும் புதிய திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. வீட்டுவசதி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் 500 இடங்களில் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 200 இடங்களில் வீடுகள் கட்டும் முயற்சி தொடங்கிவிட்டது. துணைத் தாலுக்காக்களை தாலுக்காக்களாக தரம் உயர்த்துவதன் வாயிலாக, வரும் ஆண்டில் புதியதாக 14 இடங்கள் தாலுக்கா தலைமை யிடங்களாக விளங்கும். இதற்கென 11·3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தாலுக்கா அலுவலகங்கள், கோட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் கட்டுவதற்கெனவும் ரூபாய் 13 இலட்சம் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.



புயல் கொடுமையிலிருந்து கடலோரப் பகுதியி லுள்ள மக்கள் பாதுகாப்புப் பெறுவதற்காக புதிதாக கட்டப்பட்ட இரண்டு புகலிடங்கள் (Cyclone Shelter) சென்ற பருவ மழையின்போது நன்கு பயன்படுத்தப் பட்டன. பிற நாட்டவரும், மற்ற பலரும் இத்திட் டத்தை வரவேற்று உதவ தாமாக முன்வந்துள்ளனர். 46 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 23 புகலிடங்கள் செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. செஞ்சிலுவைச் சங்கத்தின் பங்கு போக எஞ்சிய தொகை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து செலவிடப்படும்.

நீண்ட காலமாக மறு நிலவரித் திட்டம் (Resettlement) மேற்கொள்ளப்படாத காரணத்தால், இரயத்வாரி கிராமங்களிலுள்ள நிலப் பதிவேடுகள் பழமையானவையாகவும், தற்போதுள்ள நிலையை பிரதி



பலிக்காமலும் உள்ளன. இந் நிலமையை மாற்றி, நிலப் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டமொன்றை வரும் ஆண்டிலிருந்து செயல்படுத்த இவ்வரசு முடிவெடுத் துள்ளது. 1·48 கோடி ரூபாய்ச் செலவில் மேற்கொள்ள இருக்கும் இத் திட்டத்தின்படி, தமிழகத்தில் நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் மறு நில அளவை செய்யப்பட்ட பகுதிகள் நீங்கலாக, 30,000 சதுர மைல் பரப்புள்ள நிலங்கள் மீண்டும் அளக்கப்பட்டு, கூட்டுப் பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக பிரிக்கப்படுவதுடன், நிலவரைப் படங்கள், மற்றும் கிராமத்திலுள்ள பதிவேடு கள் அனைத்தும் தற்போதைய நிலையைப் பிரதிபலிக்கு மாறு திருத்தி அமைக்கப்படும். இத்திட்டம் விவசாயிகள் தங்கு தடையின்றி வங்கிகளில் கடன் உதவி பெற வாய்ப்பு ஏற்படுத்துவதுடன், அவர்கள் தங்கள் உரிமை யினை அறியவும் பயன்படும். இது அரசுக்குச் சொந்த மான நிலங்களின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றவும் உதவியாக இருக்கும்.

### காவல் துறை

அரசின் மதுவிலக்குக் கொள்கையை நன்முறையில் செயல்படுத்த பல்வேறு முனைகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சேலத்தில் புதியதாக மதுப்பொருள் ஆய்வுக் கூடம் ஒன்று அமைக்கப்படும். மேலும், தற்போதுள்ள ஆய்வுக் கூடங்களும் விரிவு படுத்தப்படும். பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ளவும், தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க உதவும் வகையிலும் தொலைபேசித் தொடர்பு இல்லாத எல்லாக் காவல் நிலையங்களிலும் இந்தத் தொடர்பு அமைக்க அனுமதி அளித்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. காவலர்க்கான குடியிருப்புகள் கட்டும் பணி விரைவுபடுத்தப்பட்டு, அடுத்த ஆண்டு இதற்கென 1·50 கோடி ரூபாய் செலவிடவும் வகை




செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், காவல் துறையைப் பொதுவாக பலப்படுத்தவும், புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்தவும் பல இடங்களில் மகளிர் காவல் பிரிவு அமைக்கவும், கைரேகைப் பிரிவுகளை வலுப்படுத்தவும், மற்ற தொடர்புடைய அலுவலகப் பணியாளர் நியமிப்பதற்குமாக மொத்தம் 1·37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மதுவிலக்குக் கொள்கையைச் சீரிய முறையில் செயல்படுத்துதல், சட்டம் ஒழுங்கை நன்முறையில் நிலை நாட்டல், குற்றப் புலனாய்வை திறம்படச் செய்தல் ஆகிய மூன்று பணிகளுக்கும் ஏற்ற முறையில் காவல் துறையைச் சீரமைத்து செம்மைப் படுத்துவதற்கான பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



கிராமப்பகுதிகளின் தேவைகளின் அடிப்படையில், அடுத்த ஆண்டு, 20 சிறு நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் புதியதாக அமைக்கப்படும். எந்த ஒரு ஆண்டிலும் இவ்வளவு அதிகப்படியான தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டதில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கிராமப்புற மக்களுக்கு தீயணைப்புப் பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றும் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்படும்.




சிறைச்சாலைகளில் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின் வசதி ஆகியவற்றை அளிப்பதற்கான திட்டங்களை வகுத்து, நடப்பாண்டிலும், அடுத்த ஆண்டிலுமாக மொத்தம் 57 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இது நிறைவேறும்போது, தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சிறைச்சாலைகளும் இந்த அடிப்படை வசதிகள் பெற்றவைகளாக அமையும். மேலும் சிறையிலுள்ள தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும், ஆழ் கிணறுகள் அமைக்கவும் 23·5 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். தென் மண்டலத்திற்கு சிறைச்சாலை நிர்வாகம் பற்றிய பயிற்சிப் பள்ளி வேலூரில் நிறுவப்பட்டு வருவது இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.




### அரசு அலுவலர் நலன்

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு முடிவெடுத்து, 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து புதிய ஊதிய விகிதங்களும், அவற்றையொட்டிய, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி, பயணப் படி, மலைவாழ் படி, குளிர்காலப் படி முதலிய பல நன்மைகளும் செயலாக்கப்பட்டுள்ளன. ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து அவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகளை மேலும் தாராளமாக்கியது. உடனடியாகக் கிட்டும் ஊதிய உயர்வின் குறைந்த அளவு, பரிந்துரை செய்யப்பட்ட ரூபாய் 15இலிருந்து, ரூபாய் 20ஆக உயர்த்தப்பட்டது. நடு நிலையிலும் அடி நிலையிலுமுள்ள பெரும்பான்மையான பதவிகளிலுள்ளோர், பத்து ஆண்டு பணிக்குப் பின்னர் உயர் பதவிக்கோ, தேர்வு நிலைக்கோ செல்ல சீரான வழி முறை வகுக்கப்பட்டுள்ளது. ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி கடை நிலை அலுவலர்களுக்கு இது பொருந்தாது. ஆனால் அவர்களுடைய நிலையை அரசு பரிவுடன் கவனித்து, அவர்களுக்கும் தேர்வு நிலை ஏற்படுத்தியுள்ளது. ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகளினால், அரசுக்கு உடனடியான அதிகச் செலவு ஆண்டொன்றுக்கு ரூபாய் 37 கோடியாகவும், நாளடைவில் ரூபாய் 67 கோடியாகவும் இருக்கும். அரசு அலுவலர்களின் நலம் கருதி, மேலும் பல நலன்கள் அவர்களுக்குக் கிட்டும் வகையில் முடிவுகளெடுக்கப் பட்டுள்ளன.




அரசு அலுவலர் வீடு கட்ட பெறும் கடன் வசதியின் பயன் மாநிலத்தின் பல பகுதிகளிலுமுள்ள அலுவலர்களுக்குப் பரவலாகவும், விரைவாகவும் கிடைக்கு வகை செய்யும் முறையில், இந்த ஒதுக்கீடு மாவட்ட ரீதியாகப் பங்கிடு செய்யப்பட்டு, கடன் வழங்கும் அதிகாரம், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்படும். பெரு நகரங்களில்லாத பகுதிகளில் அலுவலர்கள் வீடு கட்டுவதையும், வாங்குவதையும் ஊக்குவிக்கும் பொருட்டு மூன்றாவது ஊதியக் குழு செய்த பரிந்துரையை அரசு ஏற்று, நகர ஈட்டுப் படி இல்லாத ஊர்களில் வீடு வாங்கவோ, கட்டவோ அளிக்கப்படும் கடன் மீதான வட்டியில் ஒரு சத வீதம் தள்ளுபடி செய்ய முடிவு செய்துள்ளது. அவ்வாறே, கல்லூரிகளிலோ, பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிலோ கல்வி பயிலும் மக்களையுடைய அரசு அலுவலர்களுக்குக் கல்வி வசதி முன் பணம் வழங்குவது பற்றிய பரிந்துரையையும் அரசு ஏற்கிறது. இத் தகுதியுடைய அரசு அலுவலர்களுக்கு ஒரு மாத அடிப்படை ஊதியம் வட்டியில்லாத முன் பணமாக வழங்கப்படும். கல்லூரிகளில் கல்வி பயிலும் மக்களையுடைய அலுவலர்களுக்கு ரூபாய் ஆயிரத்துக்கு மேற்படாமலும், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் (Polytechnics) கல்வி




பயிலும் மக்களையுடைய அலுவலர்களுக்கு ரூபாய் அய்ந்நூறுக்கு மேற்படாமலும் அளிக்கப்படும் இம் முன் பணம், பத்து மாதத் தவணைகளில் திரும்பப் பெறப் படும். மக்கள் கல்வி , பயின்று வரும் காலத்தில், ஒவ்வொரு ஆண்டும் இம் முன்பணம் பெறலாம்.

சைக்கிள் வாங்குவதற்கு அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் முன் பணம் தற்போது 300 ரூபாய் ஆக உள்ளது. இது 400 ரூபாய் ஆக உயர்த்தப்படுகிறது. மாதமொன்றுக்கு 750 ரூபாய்க்கு மேற்படாமல் ஊதி யம் பெறும் அலுவலர்களுக்கு இம் முன் பணம் வழங்கப் படும் ; புதிய சைக்கிள் வாங்குவதற்கு மட்டுமே இது தரப்படும். புதிய ஸ்கூட்டர் வாங்குவதற்கான முன்




பணத்தின உச்ச வரம்பு, ரூபாய் 4,500இலிருந்து ரூபாய் 5,000 ஆக உயர்த்தப்படும். இனி மாதமொன்றுக்கு 750 ரூபாய்க்குக் குறையாமல் அடிப்படை ஊதியம் பெறும் அலுவலர்களனைவரும் இம் முன் பணம் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாவார்கள். பண்டிகை முன் பணம் 250 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. ஊதிய விகிதங்கள் மாற்றி யமைக்கப்பட்டதையடுத்து, மாதமொன்றுக்கு ரூபாய் 750-க்குக் கீழ் ஊதியம் பெறுவோர்க்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்த இம் முன் பணச் சலுகையை, ரூபாய் 1,000 வரை பெறுவோர்க்கு நீட்டித்து அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது.

புதிய ஊதிய விகிதங்கள் செயலாக்கப்படுவதற்கு முன்பாகவே ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியத்தை உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் பலன் 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து கிடைக்குமென ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெற்று வருபவர்களது வேண்டுகோளுக் கிணங்க, இதை 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்தே செயலாக்க அரசு முடிவு செய்துள்ளது.

**உதவித் தொகைகள்**

முதியோர் உதவித் தொகை பெறும் ஒவ்வொரு ஆணுக்கு ஒரு கைத்தறி வேட்டியும், ஒவ்வொரு பெண் ணுக்கு ஒரு கைத்தறிச் சேலையும், பொங்கலின் போதும், சுதந்திர தினத்தின் போதும், வரும் ஆண்டு முதல் வழங்கப்படும். மேலும் உதவித் தொகை மாத




மொன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாகவும் உயர்த்தப்படும். பார்வை இழந்து, ஆதரவற்ற நிலையிலுள்ளவர்களுக்கு வயது எல்லை பாராமல் உதவித் தொகை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அரசு எடுத்துள்ள இம் முடிவினை மன்ற உறுப்பினரனைவரும் வரவேற்பர் என நம்புகிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் தியாகிகள், இந்திய தேசிய இராணுவத்தினர் ஆகியோரில் மத்திய அரசு உதவித் தொகை பெறுவோர் மாதம் 200 ரூபாய் பெறுவதுடன் மாநில அரசின் உதவித் தொகையாக 75 ரூபாயும் பெற்று வருகின்ற னர். மாநில அரசின் உதவித் தொகை பெறுவோர் 75 ரூபாய் மட்டுமே பெற்று வருகின்றனர். அவ்வாறு மாநில அரசின் உதவித் தொகை மட்டும் பெற்று வருபவர்களுக்கு, வரும் நிதியாண்டு முதல், மாத உதவித்



தொகையை 75 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் இந்திய தேசிய இராணுவத்துடன் பணியாற்றிய பாலசேனாவிலிருந்து அதற்கென 1973 வரை உதவித் தொகை பெற்று பின் அது நிறுத்தப்பட்டவர்களுக்கு, வரும் ஆண்டு முதல் மீண்டும் உதவித் தொகை அளிக்க அரசு முடிவு செய் துள்ளது.




தமிழ் பேசும் பகுதிகள் தாயகத்துடன் சேர வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகவும், தாய் மொழிப் பற்று, அதன் பாதுகாப்பு இவற்றுக்காகவும் இன்னல் பல ஏற்ற தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்க வகை செய்யும் சட்ட வரைவு ஒன்று மன்ற ஒப்புதலுக்காக விரைவில் கொண்டுவரப்படும்.

**நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள்**

ஏழாவது நிதி ஆணைக்குழு தனது அறிக்கையை சில மாதங்களுக்கு முன் அளித்துள்ளது. இதன் அடிப் படையில் மத்திய அரசு எடுத்த முடிவுகளின் விளைவாக, பெரும்பாலான மாநிலங்களின் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை இருந்து வந்த நிலைமை மாறி, இனி வரும் ஆண்டுகளில் வருவாய்க் கணக்கில் ஓரளவு உபரி ஏற்பட வழி செய்யப்பட்டுள்ளது. மூலதன முதலீடு களின் அவசியங்களையும், கடன் வழங்க வேண்டிய தேவைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, வளர்ச்சிப் பணிகளுக்கான மொத்த நிதித் தேவை களின் அடிப்படையில் மாநில அரசு தனது நிதிக் கொள்கையை நிர்ணயிக்க வேண்டியிருக்கும்.

மாநில அரசு தனது அலுவலர்களுக்கு மூன்றாவது சம்பள ஆணைக் குழுவின் அடிப்படையில் அளித்த சம்பளம், படிகள் இவற்றுக்கான முழுச் செலவுகளை நிதி ஆணைக்குழு ஒப்புக்கொள்ளவில்லை. அய்ந்து ஆண்டுகளில் தமிழக அரசு செலவிட வேண்டிய தொகை 399 கோடி ரூபாயாக அதிகரிக்க இருக்கும்போது அய்ந்தாண்டுக் காலத்தில் 252 கோடி ரூபாய்க்கு மட்டுமே செலவினங்களில் நிதி ஆணைக்குழு கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது வருந்தத்தக்கதாகும்.

நிதி ஆணைக்குழு மத்திய மாநில நிதித் தொடர்புகள் பற்றிய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய பல இனங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளது.

* நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் கூட்டு நிறுவன வரி (Corporation Tax) மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கேற்ப அரசியல் சட்டத்தை திருத்துவது,

* சர்க்கரை, புகையிலை, துணி இவற்றின் மீதான மாநிலங்களின் விற்பனை வரிக்கு பதிலாக மத்திய அரசு விதிக்கும் கலால் வரிகளில் தக்க மாற்றங்கள் செய்வது,

* இரயில் பயணிகள் கட்டணங்களின் மீது மாநிலங்கள் விதித்து வந்த வரிகளுக்கு பதிலாக தரப்படும் ஈட்டுத் தொகையை உயர்த்துவது,

* தொடர்ந்து விதிக்கப்பட்டு வரும் வருமான வரி மேல்வரியை வருமான வரியுடன் இணைப்பதன் மூலம் அதனை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வது, போன்ற முக்கிய பரிந்துரைகள் மீது நல்ல முடிவு எடுப்பதற்கேற்ற நடவடிக்கைகள் மத்திய அரசு விரைந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## அய்ந்தாண்டுத் திட்டம்

அய்ந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களின் பங்கு 35,160 கோடி ரூபாய், மத்திய அரசின் பங்கு 34,220 கோடி ரூபாய் என்ற அடிப்படையில் ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. முதன் முறையாக மாநிலங்களின் பங்கு, மத்திய அரசின் பங்கைவிட அதிகமாக அமைய இருப்பதும், நாட்டு வளர்ச்சியில்




மாநில அரசுகள் ஏற்றுள்ள அதிகப்படியான பொறுப்புகளை மத்திய அரசும், மத்திய திட்டக் குழுவும் இவ்வாறு உணர்ந்து செயல்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும். 2,000 கோடி ரூபாய் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் பங்கிலிருந்து (Centrally Sponsored Schemes) மாநில அரசுத் திட்டங்களுக்கு (State Plans) மாற்றப்படுவதன் மூலம், அய்ந்தாண்டுக் காலத்தில் மாநிலத் திட்டங்களின் பங்கு 37,160 கோடி ரூபாயாகவும் மத்திய அரசின் பங்கு 32,220 கோடி ரூபாயாகவும் அமையும். இந்தப் போக்கு இனியும் தொடர்ந்து, மாநில அரசுகளின் பங்கு வருங்காலத்தில் இன்னும் வளர வேண்டும் என்பதே தமிழக அரசின் ஆவலாகும்.

## ஆண்டுத் திட்டம்

வரும் ஆண்டில் 363 கோடி ரூபாய்க்கான வரைவுத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய திட்டக் குழுவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. வரைவுத் திட்டத்தை ஆராய்ந்த பல்வேறு குழுக்கள், மொத்தம் 342 கோடி ரூபாய்க்கான திட்டம் தேவையானதெனக் குறிப்பிட்டன. மத்திய




திட்டக் குழுவுடன் இதுபற்றி முடிவான உடன்பாடு ஏற்படவில்லை. மதுவிலக்கின் காரணமாக தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இழப்பினைக் கருத்தில் கொண்டு, நியாயமான குறைந்த அளவுத் திட்டம் நிறைவேற்ற மத்திய திட்டக் குழு சிறப்பு நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோரி வருகின்றோம். சில நாட்களுக்கு முன் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தின்போது ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில், 2,000 கோடி ரூபாய், அத்தகைய திட்டங்களைக் குறைத்து, மாநிலத் திட்டங்களுக்காக 1979–80 முதல் 1982–83 ஆகிய நான்கு ஆண்டுகளில் மாநிலங்களுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. இதில் தமிழ் நாட்டின் பங்கு சுமார் 150 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டு இதன் மூலம் கிடைக்கும் கூடுதல் மத்திய நிதி உதவியையும், சிறப்பு நிதி பற்றிய நமது கோரிக்கையையும் கருத்தில் கொண்டு வரும் ஆண்டுத் திட்டத்தை 342·87 கோடி ரூபாய் அளவில் தயாரித்துள்ளோம்.

## நிதி நிலைமை

இந்த ஆண்டில் வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்தபோது வருவாய்க் கணக்கில் வரவுகள் 680·08 கோடி ரூபாயாகவும் செலவினங்கள் 726·76 கோடி ரூபாயாகவும், நிகரத் துண்டு விழும் தொகை 46·68 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்போதுள்ள திருத்த மதிப்பீடுகளின்படி வரவுகள் 733·49 கோடி ரூபாயாகவும், செலவினங்கள் 765·37 கோடி ரூபாயாகவும் துண்டு விழும் தொகை 31·88 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மூலதனக் கணக்கில் எதிர்பார்க்கப்பட்ட 63·45 கோடி ரூபாய் செலவுக்கு எதிராக, தற்போதுள்ள மதிப்பீட்டின்படி 67·62 கோடி ரூபாய் செலவு ஏற்படும். வருவாய்க் கணக்கு, மூலதனக் கடன் கணக்குகள், பொதுக் கணக்கு ஆகிய அனைத்தின் வரவு–செலவுகளின் விளைவாக 1978–79இல் 14·34 கோடி ரூபாய் நிகரச் செலவு இருக்கும் என்றும் எதிர்பார்த்தோம். தற்போதுள்ள மதிப்பீடுகளின்படி எல்லாக் கணக்குகளும் மொத்தமாகப் பார்க்கும்போது 32 இலட்ச ரூபாய் நிகரச் செலவு ஏற்பட்டு, 5·73 கோடி ரூபாய் பற்றாக் குறையுடன் இந்த ஆண்டு நிறைவு பெறும் என நம்புகிறோம்.

1978–79ஆம் ஆண்டுத் திட்டம் 305 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. இப்போதுள்ள மதிப்பீட்டின்படி, இந்த ஆண்டுக்கான திட்டம் 323·42 கோடி ரூபாயாக அமையும். புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக திட்ட முன் நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் 17·6 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள், இத் தொகைக்கு அப்பாற்பட்டவையாகும். இந்த ஆண்டு, அய்ந்தாவது அய்ந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டு. தேசிய வளர்ச்சி மன்றம் மேற்கொண்ட முடிவின்படி, ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டமும் 1978–79ஆம் ஆண்டிலிருந்து தொடங்குவதால், இந்த ஆண்டு செய்யப்பட்டுவரும் திட்டப் பணிகளில் கணிசமான பகுதி, வரும் ஆண்டில் அதாவது 1979–80இல், திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக (Committed Expenditure) மாறிவிடுகின்றது. எடுத்துக்காட்டாக, 1978–79ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஆசிரியர் சம்பளம் அந்த ஆண்டில் திட்டச் செலவாகவும்,

1979–80ஆம் ஆண்டில் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாகவும் மாறிவிடும். இத்தகைய செலவுகள் வரும் ஆண்டில் சுமார் 30 கோடி ரூபாய் அளவில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் பல்வேறு துறைகளில் அடுத்த ஆண்டுக்கான திட்டச் செலவை ஆராயும்போது, இதுபோன்ற செலவுகளையும் கருத்தில் கொண்டு ஆராய்வது அவசியமாகும். வரும் ஆண்டில் முன்பு கூறியவாறு, நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் விளைவாக வருவாய்க் கணக்கில் வரவுகள் அதிகரித்து மொத்தம் 849·83 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. செலவுகள் 849·25 கோடி ரூபாயாகவும், இதனடிப் படையில் நிகர உபரி 58 இலட்சம் ரூபாயாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மூலதனக் கணக்கின்கீழ் மொத்தச் செலவு 72·25 கோடி ரூபாயாக இருக்கும், 342·87 கோடி ரூபாய் அளவுள்ள பெரிய திட்டத்தை நிறைவேற்ற முற்படுவதன் காரணமாக, அனைத்துக் கணக்குகளில் மொத்தம் 4·25 கோடி ரூபாய் நிகரச் செலவு ஏற்பட்டு, 1979–80ஆம் ஆண்டின் இறுதிப் பற்றாக்குறை 9·98 கோடி ரூபாயாக அமையும் என்றும் கணக்கிடப் பட்டுள்ளது.

இந்தப் பற்றாக்குறையை ஓரளவு ஈடுகட்டுவதற் கான சில முயற்சிகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. தற்போது சென்னை நகரம், அதனைச் சுற்றி 32 கிலோமீட்டர் வரையிலுள்ள பகுதிகள், கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் விற்பனை வரி மீது 5 சதவீத மேல் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. மேல்வரி விதிக்கப்படும் பகுதியை விரிவு படுத்தி, சிறப்பு நிலை, தேர்வு நிலை, முதல் நிலை நகராட்சிப் பகுதிகளிலும், கோவை, மதுரை, சேலம், திருச்சி நகராட்சிப் பகுதிகளை சுற்றி 16 கிலோ மீட்டர் வரையிலுள்ள பகுதிகளிலும், 1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் இந்த மேல்வரியை விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் கொப்பரை மீது, தற்போது 2 சதவீதம் ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகின்றது; தேங்காய் மீது வரி இல்லை. தேங்காய்க்கான வரி விதிப்பு விலக்கு வாயிலாக கொப்பரை மீதான வரி பெருமளவுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதால், தேங்காய் மீதும் 2 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி நாளை முதல் (1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4ஆம் நாள் முதல்) விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. சிறிய வியாபாரிகளுக்கு சலுகை தரும்முறையில், ஆண்டுக்கு 25,000 ரூபாய் வரை தேங்காய் விற்பனை செய்பவர் களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.




தீப்பெட்டி உற்பத்தியில் தமிழ் நாடு நமது நாட்டில் தலையாய இடத்தை வகிக்கின்றது. மற்ற மாநிலங்களின் தேவைகளையும் தமிழ் நாடு பெரும் அளவிற்கு நிறைவு செய்து வருகின்றது. இத்தொழிலை ஊக்குவிக்கவும், மூலப் பொருட்களைத் தட்டின்றி வழங்குவதற்கும் அரசு பல்வேறு உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது. வெளிமாநிலங்களில் பயன்படுத்தப்படும் தீப்பெட்டிகள் மீது வரி விதிப்பதற்கு ஏதுவாக, கையால் செய்யப்படும் தீப்பெட்டிகள்




(Hand made Matches) மீது 2 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. இது நாளை முதல் (1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4ஆம் நாள்) செயல்படத் துவங்கும். சிறிய தொழிலதிபர் களுக்கு உதவும் வகையில், ஆண்டு விற்பனை ரூபாய் 25,000க்கு மேற்படாத சிறிய தொழிலதிபர் களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். மேற் கூறிய மூன்று முயற்சிகளின் விளைவாக, மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசு நியமித்த செய்வார் குழு, விற்பனை வரி நிர்வாகம் பற்றி பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றில் பல செயல்படுத்தப்பட்டு விட்டன. இக்குழு செய்துள்ள பரிந்துரை ஒன்றின் அடிப்படையில், தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு தரும் சில மாற்றங்களை பொது விற்பனை வரிச் சட்டத்தில் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. தற் போதுள்ள முறையின்படி, ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது, அதில் வெளிப்படையாக, தனித்துக் காணக்கூடிய உறுப்புப் பகுதிகளுக்கு மட்டும் வரிச் சலுகை தரப்பட்டு வருகின்றது. இதனை விரிவாக்கி, மத்திய விற்பனை வரி விதிதத்தையும் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட தொழில்களுக்கு உதவுவதற் கேற்ற திட்டங்களைத் தயாரிக்கவும், தயாரிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் குறிப்பிடப்படும் மூலப்பொருட் களுக்கும், உறுப்புப் பகுதிகளுக்கும் குறிப்பிடும் அளவுக்கு வரிச் சலுகை தரவும் அரசு திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் வரிச் சலுகை அவசியம் தேவையாக உள்ள தொழில்களுக்கு தக்க அளவுக்கு சலுகை தருவதற்கு முறையான திட்டங்களை அரசு உருவாக்கிச் செயல்படுத்த முடியும்.

செய்வார் குழுவின் இன்னொரு பரிந்துரை இணக்க முறையில் வரி செலுத்துவதைப் பற்றியதாகும். தற்போதுள்ள அமைப்பின்படி, பல முனை வரிவிதிப்பின் கீழ் வரும் பொருட்களின் விற்பனை, ஆண்டுக்கு ரூபாய் 50,000-க்கு மேற்படாமல் இருக்கும்போது, வரி விதிப்பு ஏதும் இல்லை; ரூபாய் 50,000-க்கு மேற்பட்டு ரூபாய் 1,00,000-க்கு மேற்படாமல் இருக்கும்போது இணக்க முறையில் (Compounding) வரி செலுத்த வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இத்தகையவர்கள் இணக்க முறையில் வரி செலுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், வரி செலுத்துவதற்கென உள்ள அமைப்பை, தற்போதுள்ள பத்து மட்டங்களிலிருந்து, வரும் ஆண்டு முதல், அய்ந்து மட்டங்களாகக் குறைத்து இணக்க முறையில் செலுத்த வேண்டிய கட்ட

ணத்தையும் குறைக்க அரசு முடிவு செய்துள்ளதை வணிகப் பெருமக்கள் வரவேற்பர் என நம்புகிறேன்.




மேற்கூறிய நிதி திரட்டும் முயற்சிகளின் வாயிலாகவும், சட்ட மன்றத்தின் முன் இருந்து வரும், வேளாண்மை வருமான வரி, மோட்டார் வாகன வரி பற்றிய மாற்றங்களின் விளைவாகவும், 1979-80ஆம் ஆண்டின் மொத்தப் பற்றாக்குறை ஓரளவுக்கு சரி செய்யப்படும். நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். இவற்றின் மூலம், வரும் ஆண்டில் 343 கோடி ரூபாய்க்கான ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்றக் கருதியுள்ளோம்.

அவைத் தலைவர் அவர்களே,

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நான் அவைமுன் வைக்கும் மூன்றாவது நிதி நிலை அறிக்கை இது.




இன்றைய சமுதாய அமைப்பில் அனைத்துத் துறைகளிலும், புரட்சிகரமான மாற்றம் தேவை. அதற்கு விரைந்து செயல்படுவது தவிர்க்க முடியாத ஒன்று என்ற நோக்கு அரசின் சார்பாக நான் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கைகளில் காணலாம்.

ஆண்டாண்டாக எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் கடைகோடியிலிருக்கும் மக்கள் பொறுமையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையும் ஏமாற்றிவிட முடியாது.

உழைத்திடக் கரங்கள், உற்பத்தியைப் பெருக்கிட இதய பூர்வமான உணர்வுகள், உயிர்த் துடிப்புள்ள நாடாக தமிழகத்தை மாற்றிட நிறைந்து கிடக்கும் அழுத்தமான தீர்மானங்கள், காலத்தின் சவால்களைச் சந்தித்து சோதனைகளிலிருந்து நாட்டைக் காத்திடும் கடமைகள்—இவைகளின் மொத்தத் தொகுப்பாக வாழ்ந்திடும் தமிழ்ச் சமுதாயத்தின் விரைவான முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றும் தமிழக அரசின் தூய எண்ணங்களை நல்ல நோக்கங்களை இந்த நிதி நிலை அறிக்கை வெளிப்படுத்தும் என்பது என் நம்பிக்கை !

செல்லரித்துப் போன சித்தாந்தங்களும், உளுத்து மக்கிப் போன உதவாக்கரைத் திட்டங்களும் நாட்டைக் காப்பாற்றாது.



தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும். அப்போதுதான் தீட்டப்படுகின்ற திட்டங்களில் உண்மைப் படம் தெரியும். இந்த அவைமுன் மாண்புமிகு உறுப்பினர்களின் பரிசீலனைக்கும், ஆக்க பூர்வமான விமர்சனங்களுக்கும், பலனுள்ள யோசனைகளுக்குமாக வைக்கப் பட்டிருக்கும் இந்த நிதி நிலை அறிக்கை அந்த உண்மை நிலையின் படப்பிடிப்பு.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் பிரகடனங்களின் செயல் உருவம்.

இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க எனக்கு உதவியாக இருந்து செயல்பட்ட நிதித் துறைச் செயலர் திரு. வேங்கடேசன் அவர்களுக்கும் உடன் பணியாற்றிய அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1979–80ஆம் ஆண்டிற்கான இந்த நிதி நிலை அறிக்கையை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமைகிறேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு. கி. மனோகரன் அவர்கள் 1979-80 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாளன்று ஆற்றிய உரை.**



**தமிழ்நாடு**

**வரவு-செலவுத்**

**திட்டம்,**

**1979-80**

சுருக்கம்

| விவரம். (1) | 1977–78 கணக்குகள். (2) | 1978–79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1978–79 திருத்த மதிப்பீடு. (4) | 1979-80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடிக்கணக்கில்) | | |
| **I.** தொகு நிதி— | | | | |
| வருவாய்க் கணக்கில் வரவுகள் .. .. .. .. | 6,82·05 | 6,80·08 | 7,33·49 | 8,49·83 |
| வருவாயிலிருந்து செய்யப்பட்ட செலவு (நிகரம்) .. .. | 7,06·12 | 7,26·76 | 7,65·37 | 8,49·25 |
| வருவாய்க் கணக்கில் உபரி அல்லது பற்றாக்குறை .. .. | (—) 24·07 | (—) 46·68 | (—)31·88 | (+) 0·58* |
| மூலதனக் கணக்கில் வரவுகள் .. .. .. .. | 1,81·69 | 2,86·19 | 2,14·47 | 2,76·48 |
| கடன்கள், முன்பணங்கள் உட்பட மூலதனத்திலிருந்து செய்யப்பட்ட செலவு (நிகரம்) .. .. .. .. | 2,24·80 | 2,82·01 | 2,05·74 | 3,15·08 |
| மூலதனக் கணக்கில் உபரி அல்லது பற்றாக்குறை .. .. | (—) 43·11 | (+) 4·18 | (+) 8·73 | (—) 38·60 |
| மொத்தத் தொகு நிதி (நிகரம்) .. .. .. .. | (—) 67·18 | (—) 42·50 | (—) 23·15 | (—) 38·02 |
| **II.** எதிர்பாராச் செலவு நிதி (நிகரம்) .. .. .. .. | .. | .. | .. | .. |
| **III.** பொதுக் கணக்கு (நிகரம்) .. .. .. .. .. | 58·03 | 28·16 | 22·83 | 33·77 |
| நிகர வரவு-செலவுகளின் மொத்தம் (I+II+III) .. .. | (—) 9·15 | (—) 14·34 | (—) 0·32 | (—) 4·25* |
| தொடக்க இருப்பு .. .. .. .. .. .. | (+) 3·74 | (—) 19·71 | (—) 5·41 | (—) 5·73 |
| இறுதி இருப்பு .. .. .. .. .. .. .. | (—) 5·41 | (—) 34·05 | (—) 5·73 | (—) 9·98* |

* நிதி நிலை அறிக்கையின் விளைவுகள் இதில் அடங்கா.

# நெஞ்சு நிமிரச் செய்த விழா

பிப்ரவரி 27ஆம் நாள் திருச்சி 171 பிரதேசப் படையினருக்குப் பொன்நாள்! அவர்களது திறமைக்கும், உழைப்பிற்கும், தியாகத்திற்கும் பரிசாக 1978-79 ஆம் ஆண்டிற்கான, இந்தியாவிலேயே சிறந்த பிரதேசப்படைக்கான பரிசை அவர்கள் பெற்றுள்ளனர். அதற்கான இந்திய இராணுவத் தளபதியின் வெள்ளிக் கேடயத்தை 27.2.'79 அன்று திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் நடைபெற்ற விழாவில் தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடமிருந்து பிரதேசப்படையின் தலைவர் லெப். கர்னல் திரு சுரீந்தர் சிங் பெற்ற விழா பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விழா. ஏனெனில் பிரதேசப்படையின் சரித்திரத்தில் தமிழ்நாடு இந்தச் சிறப்பினைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்த விழா இராணுவ அணி வகுப்புடன் துவங்கியது. அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட முதல்வர், திறந்த ஜீப்பில் அணிவகுப்பைப் பார்வையிட்டார். அவருடன் தென் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.பி. மகாதேவன் அவர்கள், திருச்சி பிரதேசப்படைத் தலைவர் லெப். கர்னல் சுரீந்தர் சிங் அவர்கள் ஆகியோர் சென்றனர். அணி வகுப்பு மரியாதைக்குப் பின்னர் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

இராணுவத் தளபதியின் வெள்ளிக் கேடயத்தைத் தவிர வேறு சில பரிசுகளையும் பெருமைமிகு இந்தப் பிரதேசப்படை பெற்றது. அதில் குறிப்பிடத்தக்க ஒன்று, தென் மாநிலங்களிலேயே சிறந்த பிரதேசப்படைக்கான சிறப்புக் கொடியாகும். இக்கொடியை, முதல்வர், பிரதேசப்படையின் 2வது லெப். கர்னல் திரு. குட்டியிடம் வழங்கினார். அத்துடன் 1977 நவம்பரில் ஏற்பட்ட பயங்கரப் புயல் வெள்ள விபத்துக்களின்போது சிறந்த சேவை செய்த 9 இராணுவத் தளபதியின் பாராட்டுப் பத்திரங்களை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

திருச்சி பிரதேசப் படையின் பணியையும், சேவையையும், பாராட்டிய முதல்வர், அதற்கு முதல்வர் நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்குவதாகவும் அறிவித்தார்.

பரிசுகளை வழங்கிய பின் முதல்வர் அவர்கள் ஆற்றிய தமது கருத்தாழமிக்க உரையில் குறிப்பிட்டதாவது :—

''இராணுவ வீரர்கள் தங்களுடைய பதவிக் காலத்தில் தாய் நாட்டின் நலத்தைக் கருதி, பாடுபட்டு வருவதைவிட வேறு எந்த இலாபமும் அவர்கள் பெறுவதில்லை. ஊதியம் ஒன்றுதான் அவர்களுடைய வருமானம். வேறு வகையில் அவர்கள் பொருள் சேர்க்க மாட்டார்கள். வீரம், தியாகம், உழைப்பு இவைகளையே இவர்கள் சொத்தாக மதிப்பார்கள். இவர்களுக்கு இந்த நாடு என்றென்றும் நன்றி செலுத்தி வணங்க வேண்டும்.

''முன்பெல்லாம் இராணுவம் என்றால் நாட்டை அழிக்கின்ற சக்தி என்றும், மக்களைப் பயமுறுத்துகிற பிரிவு என்றும் நினைக்கின்ற நிலை இருந்தது. நமது நாடு சுதந்தரம் பெற்ற பிறகு இராணுவம் என்றால் நாட்டைக் காத்து, இயற்கை உபாதைகளின்போது மக்களுக்கு உதவி புரிந்து செயல்படுகிற சக்தியாக இயங்கி வருகிறது. இந்தச் சக்தியை நல்கும் இவர்கள் நமது உடன் பிறப்புக்களாகவும் இருக்கிறார்கள்.

''இவர்கள் உற்சாகத்துடன் இருக்கவும், இவர்களுடைய குடும்பம் மகிழ்ச்சியுடன் வாழவும், நாமனைவரும் ஒரு மனதுடன் உதவி செய்து இவர்களுக்குப் பாதுகாப்பை அளிக்க வேண்டும்.

''இன்று இந்தியாவிலேயே சிறந்த பிரதேசப்படையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்காக இவர்கள் பெற்றுள்ள இந்தக் வெள்ளிக் கேடயம் தமிழகத்திற்கு முதல் முறையாகக் கிடைத்துள்ளது என்று அறியும்போது, குனிந்த உடம்பு,— வளைந்த உடம்பு,— நேராக நிமிர்ந்து, மற்றவர்கள் காணுகின்ற அளவு நெஞ்சை உயர்த்துகிறது. குழந்தைகளிலிருந்து, முதியோர்கள் வரையில் அந்த உணர்வை நாம் பெறுகின்றோம்.

''இந்த நேரத்தில் இன்னும் ஒன்றை இங்குக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நாட்டின் எல்லையைக் காப்பது மட்டுமல்ல. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பாதகமில்லாமல் — பொதுநோக்கோடு — மக்களுக்கு ஆபத்து நேரும் போது, தொல்லைகள் நேரும் போது, வெள்ளம், தீ போன்றவைகளால் துன்பங்கள் நேரும் போது மற்றவர்கள் செய்யமுடியாத தொண்டினைத் தாங்களாகவே மேற்கொண்டு, 'எங்கிருந்து வந்தாலும், எந்த மொழி பேசினாலும், இந்தப் பகுதியில் நாம் இருக்கும்போது எங்கே எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறதோ, அங்கே மக்களுக்கு எங்கள் தொண்டைச் செய்வோம் என்று' எடுத்துக் காட்டுகிற விதத்தில், வெள்ளத்தால் சேதம் ஏற்பட்ட நேரத்தில் இவர்கள் உதவியிருக்கிறார்கள்.

''அந்த அளவில் மக்களோடு தொடர்பு கொண்டு மக்களுக்காக சேவை செய்கின்ற மனப் பக்குவத்தைப் பெற்ற இந்த வீரர்கள் எதிர் காலத்தில் மாபெரும் பொறுப்பை ஏற்கவிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

'' எல்லோருக்கும் குறைகள் உண்டு. நிறைகள் உண்டு. வாழ்க்கையிலே உழைத்துக் கொண்டிருக்கின்ற இராணுவ வீரர்களானாலும் சரி, காவல் துறையைச் சார்ந்தவர்களானாலும் சரி, தொழிலாளிகள், விவசாயிகள் வேறு எந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற முத

லாளிகளானாலும் சரி, எல்லோருக்கும் சில குறைகள் உண்டு. நாம் எண்ணிக் கொள்வோம் இவ்வளவு வசதிகள் இருக்கிறது, வேளா வேளைக்கு உணவு, உடை தங்குவதற்கு இடம் அதோடு பயிற்சி சொல்லிக் கொடுக்கின்ற ஆசான்கள், அதில் அனுபவப் பட்ட வீரத் தளபதிகள் இப்படியெல்லாம் இருக்கிறபோது, இராணுவத்திலே இருக்கின்ற வீரர்களுக்கு என்ன கஷ்டம் வந்துவிடப்போகிறது என்று எண்ணுவது இயற்கை என்பதை நான் மறுக்கவில்லை.

''இங்கே என்னிடம் சில கோரிக்கைகளைத் தந்து இருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை நான் படிக்கும்போதுதான் இவ்வளவு வீரத்தை விளை நிலமாக்கிக் கொண்டு தங்களுடைய வேர்வை, ரத்தம் இவற்றைக் கலந்து அந்த உழைப்பை, தியாகம் என்ற மரத்திற்கு ஊற்றி வளர்க்கின்ற இந்த வீரர்களுக்கும் எவ்வளவு பிரச்சனைகள் உள்ளன என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

''பிராந்திய இராணுவப் பட்டாளத்தினர், தெரிவித்துள்ள சில பிரச்சினைகளும், கோரிக்கைகளும் என்னிடம் தரப்பட்டிருக்கின்றன. நான் படித்து, தமிழக அரசு என்ன செய்யவிருக்கிறது என்பதை குறிப்பிடுவது என்னுடைய தலையாய கடமை.

''பிராந்தியப் பட்டாளத்தில் பணியாற்றுபவர்கள் பணி முடிந்து திரும்பவும் சிவில் பணிகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இராணுவப் பணிக்காலம் கணக்கிடப்பட வேண்டும். நடைமுறையில் இது செய்யப் படுவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இது கேள்விக் குறியான நிலைமைதான். இதைப் பற்றி நன்கு சிந்தித்தாக வேண்டியதிருக்கிறது. காவல் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பயிற்சி முகாமிலிருந்து திரும்பி வரும் போது, எந்தப் பணியிலே சேர்க்கப்படுகிறார்களோ, அப்போது அந்தப் பயிற்சி பெற்ற காலத்தைக் கணக்கிடுகிறார்களா என்பது காவல்துறையில் இருப்பவர்களுக்குத் தெரிவதுபோல் இங்கே இருக்கும் அதிகாரிகளுக்கும் தெரியும் என்று நான் நம்புகிறேன்.

''இந்த வகையில் காவல் துறையினருக்கு எந்த எந்த உரிமைகளும் வசதியும் தரப்படுகிறதோ, அதுபோல் தரவேண்டும் என்று இவர்கள் கேட்பார்களேயானால் அதைப்பற்றிச் சிந்தித்துப் பரிசீலனை செய்து நல்லதொரு முடிவு காண்பதற்கு தமிழக அரசு தயங்காது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

''குறிப்பாக இங்கே நீங்கள் பார்ப்பவர்கள் பலர் 'வேண்ட் ஆர்மி' என்று நான் முதலில் சட்டமன்றத்திலே சொன்னேனே, அது போன்ற படையிலே ஈடுபடுகின்ற தகுதி பெற்றவர்களாக இங்கே பழக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை ஏற்றுக்கொண்டு அப்படிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தி நாட்டிற்கு நன்மை செய்பவர்களாக மாற்றுவதற்கு பயன்படுத்திக் கொள்வதற்குப் பின்னால் வாய்ப்புஇருக்கிறதுஎன்பதை எண்ணி உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன்...

''இன்னொன்று, கேரள அரசு பிராந்தியப்படை வீரர்களுக்கு ஊக்கப்பணம் அளிக்கிறது. தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இல்லை. தமிழ்நாட்டில் இந்தச் சலுகை வழங்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது தமிழ்நாட்டிலுள்ள தமிழக மக்களின் எண்ணிக்கையையும், கேரள மாநிலத்தில் உள்ள கேரள மக்களின் எண்ணிக்கையையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், நான்கில் ஒரு பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்கு தான் வரும் என்று நான் கருதுகிறேன்.

''ஆகவே, அவர்கள் ஊக்க போனஸ் கொடுக்கிறார்கள், ஊக்க உதவி தருகிறார்கள் என்றால் எத்தனை பேருக்கு எந்த அளவில் எவ்வளவு தொகை என்பதைப் பற்றி நாம் பரிசீலித்து உண்மையிலேயே இந்த அரசு அப்படிப்பட்ட ஒரு பணியை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற உள்ளம் இருந்தாலும் அதைச் செவ்வனே செய்வதற்கு வசதி இருக்கும் என்ற நிலைமை ஏற்படும் என்றால் தமிழ்நாடு அரசு அந்தப் பணியை, கடமையை நிச்சயமாகச் செய்யும்.

''அதோடு தரிசாகக் கிடக்கும் நிலங்களை பிராந்தியப் படை வீரர்களுக்கு அளித்தால் வீரர்கள் போர் முனையில் இருக்கும் போது அவர்கள் குடும்பத்திற்கு உதவியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று தான் என்பதை நான் மறுக்கவில்லை. அந்த வகையில் தமிழ்நாடு அரசு இதுபற்றி நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

''நாட்டு மக்கள், தமிழ் நாட்டிலுள்ள தமிழக மக்கள் தங்கள் உயிரைக் கொடுத்து, இந்தியத் துணைக்கண்டத்தில் சுதந்தரத்தைக் காக்க முற்பட்டு அங்கே பணியாற்றும்போது அவர்கள் குடும்பம் இங்கே ஏதோ பணம் கொஞ்சம் அங்கிருந்து அனுப்பப் பட்டாலும் கூட கஷ்டப்படும் நிலைமை இல்லாமல், உழைப்பவருக்கும், வேலை செய்பவர்களுக்கும் அந்த குடும்பங்களுக்கு





சொல்லிக் கொள்கிறேன். நிலப் படை, 'லேண்ட் ஆர்மி'க்கு பிராந்தியப் படையினாரைப் பயன்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். நிச்சயமாகத் தகுதி உள்ளவர்களைக் காவல் துறைகளில் உள்ள மேலதிகாரிகள் தேர்ந்தெடுப்ப பார்களானால், அவர்களுக்குக் காவல்துறை மேலதிகாரிகளின் தகுதி முறைத் தீர்ப்புப்படி வேண்டிய வசதிகளை இந்த அரசு நல்கும் என்று கூறி, இந்த நல்ல விழாவிற்கு என்னை அழைத்து இங்கே அந்தப் பதக்கங்களைப் பெறுவதற்கும், மக்களால் கொடுக்கப்பட்ட பொருட்களை லெப். கர்னல் சுரீந்தர் சிங் அவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறும் பொழுது, வீரர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகின்றேன்.

**மனிதன் பிறப்பதும், இறப்பதும் இயற்கை. எத்தனை காலம் வாழ்கிறான் என்ற கேள்வியைப் பின்னால் வைத்துக் கொண்டு வாழ்க்கையை ஒரு சந்தேகப் பாலை வனமாக்கிக் கொள்ளாமல், இன்றைய தினம் நாம் இருக்கின்றோம் என்று நிச்சயிப்பது மட்டுமல்ல, ஆயிரம் ஆண்டுகளுக்கு நாம் இருப்போம் என்று நிச்சயித்துக் கடைப்பிடிப்பது போல நாம் உழைத்து முன் வர வேண்டியது நம்முடைய மாபெரும் கடமை.**

''எங்கேயோ நின்று கொண்டு வாத்தியம் வாசித்தார்கள். ஆனால், எங்கேயோ வருகின்றவர்கள் தாளம் தவறாமல் நடை போட்டு வருவதை நாம் பார்த்தோம். இங்கே இருக்கின்ற பொது மக்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் காணுகின்ற காட்சி உடனடியாக நம் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால், அந்த ஒலி நம்மை வந்து சேருவதற்குக் கொஞ்சம் இடைவெளி ஆகிறது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொண்டால் அங்கே வாசித்த வாத்தியக்காரர்கள் இசைத்த ஒலி, இங்கே வந்து கேட்கும் பொழுது நடை பிசகாமல், நடை நடந்து அங்கே தொடங்கி, அதை அனுசரித்தே வருவதைக் காணும்போது இது தான் ஒழுங்கு என்பது மட்டுமல்ல. மனித வாழ்க்கையிலே இப்படிப்பட்ட ஒழுங்கை நாம் கடைப்பிடித்தாக வேண்டும்.

''எவ்வளவோ பிரச்சினைகள் எழலாம். எங்கேயோ கேள்விகள் நம்முன் வைப்பதற்குத் தயாரிக்கப் படலாம். இவைகளைப் பற்றியெல்லாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருந்தாலும் நம்முடைய கடமை

## தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியிடுதல்



தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்று நூலை உருவாக்க அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் முதல் கூட்டம் சென்னை கலைவாணர் அரங்கில் 27.2.79 அன்று வல்லுநர் குழுவின் தலைவர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் கூடியது. திருவாளர்கள் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், எஸ். வி. சிட்டிபாபு அவர்கள், ஏ. பி. சனார்த்தனம், எம்.பி., அவர்கள், திருவாரூர் கே. தங்கராசு அவர்கள், பேராசிரியர் மா. நன்னன் அவர்கள், இராசகோபால் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெரியாரின் முழு வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கும், பொன் மொழிகள் தொகுப்பினை வெளியிடுவதற்கும், சிறுவர்களும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் வரைகோடு வண்ணப்படங்கள் கொண்ட வாழ்க்கை வரலாற்று நூல் வெளியிடவும், பெருநகரங்களில் பெரியாரின் கொள்கை விளக்கப் பொன்மொழிகளைக் கொண்ட கல்வெட்டுகள் அமைக்கவும் தனித்தனியே துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

பெரியாரின் முழு வாழ்க்கை நூல் உருவாக்கும் குழுவுக்குப் பேராசிரியர் திரு. மா. நன்னன் அவர்கள் தலைவராகவும், சிறுவர்களுக்குரிய வரைபட நூல் தயாரிக்கும் குழுவுக்குத் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைவராகவும், பெரியாரின் பொன்மொழிகளைச் சேகரிக்கும் குழுவுக்குத் திருவாரூர் கே. தங்கராசு அவர்கள் தலைவராகவும், கொள்கை விளக்கப் பொன்மொழிகளைக் கல்வெட்டுகளில் பொறிப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்ய திரு ஏ. பி. சனார்த்தனம் எம். பி, அவர்கள் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

இப்பணிகள் அனைத்தையும், 1979 செப்டம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவுக்கு முன்னர் விரைந்து நிறைவேற்றிட திட்டமிடப்பட்டுள்ளது.

யை நாட்டிற்குச் செய்யும் போது, ஒழுங்கோடு நேர்மையான உள்ளத்தோடு நடை பிசகாமல்; என்று சொன்னேனே அதுபோல தன் வாழ்க்கையில் தடம் புரளாமல், ஓர் இலட்சியக் குறிக்கோளோடு, ஒவ்வொரு மனிதனும் இந்த வீரர்களைப் போல் வாழ வேண்டும்," என்று சொல்லும்போது மக்களைப் பார்க்கின்ற இந்த மக்களுக்கு எதிரில் இருக்கின்ற வீரர்கள் இத்தனை பேர்களை நாங்கள் எப்படிக் காப்பாற்ற விரும்புகிறோமோ, அது போல் ஒழுங்கோடு, தடம் புரளாமல், நடை பிசகாமல், காவல் தவறாமல், கடமையை மீறாமல், உரிமையை விட்டுக் கொடுக்காமல் உத்தரவிற்குக் கீழடங்கிக் கடமையாற்றுகின்ற மாபெரும் வீரர்களாக நீங்கள் எதிர்காலத்தில் புகழ் மிக்க வீரர்களாக விளங்கவேண்டும் என்று வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறோம்

"எத்தனை பேர்கள் பதக்கம் பெற்றார்கள், எத்தனை பேர் பெற முடியவில்லை என்று கணக்கிலே எடுத்துக் கொண்டால், இந்தியத் துணைக்கண்டம் வெற்றி பெற்றது என்று சொல்லும்போது எத்தனை வீரர்கள் முன்னரே இருந்து வெற்றி பெற வாய்ப்புப் பெற்றார்கள் என்று நமக்கு முழுவதும் தெரிவதில்லை. தோல்வியா, வெற்றியா என்றால் இந்த நாடு இந்த மொழியைச் சேர்ந்தவர்கள் இந்த நாட்டின் சுதந்தரத்தின் சொந்தக்காரர்கள் என்றால் நாட்டின் பெயர், ஊரின் பெயர் அல்லது குடும்பத்தின் பெயர் என்றால், நாட்டின் பெயர்,



ஊரின் பெயர் அல்லது குடும்பத்தின் பெயர் வருகிறதே தவிர அதற்குப் பிறகுதான்—விளம்பரம் பெற்ற தலைவர்களாக மாறும் போது தான் ஒரு சிலருடைய பெயர்கள் மக்கள் மனத்தில் நிலைத்திருக்கின்றன.

"அதுபோல் வீரர்கள் பதக்கங்களைப் பெற்றார்கள் என்றால் தமிழகப் பிரிவிற்கு அந்தப் பெருமையைச் சேர்த்துத் தந்திருக்கிறார்கள் என்று சொல்லும் போது மற்றவர்களுக்கும் அந்தப் பங்கு இருக்கிறது. அந்த மற்றவர்களும் இதேபோல் உழைத்து பல வெற்றிகளை ஈட்டுவதற்குத் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள இது அவர்களை ஊக்குவிக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த வாய்ப்பினை அவர்கள் பெற்றாக வேண்டும்.

"மக்களுடைய நம்பிக்கையை பெறுவது பெரிதல்ல, மக்களுடைய அன்பினைப் பெறுவதும் பெரிதல்ல; அதைக் காப்பாற்றிக் கொள்வதுதான் மிகப் பெரிய கஷ்டம் என்பதை நான் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, நீங்கள் வெற்றி பெற்றது பெரிதாக இருக்கலாம். மிகப் பெரியதாக இருந்தாலும் அதை நான் பெரிது என்று சொல்லாமல், அதை நீங்களே பெற்றுக் கொண்டிருக்கின்ற அளவிற்கு அந்த இடத்தை விட்டுக் கொடுக்காமல் எப்போதுமே தமிழகத்தில் தங்கச் செய்யவேண்டும்.

"இந்தப் பிராந்தியத்திலுள்ள இராணுவ வீரர்கள் அரும் பணியாற்றுகின்றனர். பணியாற்றப் பயிற்சி பெற வந்திருப்பவர்கள் அத்தனைபேரும் எச்சரிக்கையோடு தங்கள் கடமையை, ஆற்றலை வெளியிடுவதற்குத் தயாராகி, தங்களை எப்போதுமே தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

"இந்த இராணுவ வீரர்களையும், மற்றவர்களையும் பாராட்டும்போது அவர்களுக்குப் பயிற்சி தந்த தலைவர்களையும் நான் பாராட்டியாக வேண்டும். இவர்களுக்கெல்லாம் காரணமாக இருந்து ஒழுங்குமுறை தவறாது பணியாற்றக் கூடியவர்களாக அவர்களை மாற்றி அவர்களுக்குச் சொல்லித் தந்தவர்கள்—அவர்களுக்குப் பயிற்சி அளித்தவர்கள் மிகக் கண்டிப்பாக நடந்திருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். இராணுவத்திலே இருப்பவர்கள் தவறு செய்தால் என்ன தண்டனை என்றெல்லாம் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒழுங்குமுறை தவறாமல் அவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களை வீரர்களாக மாற்றிய தளபதிகளுக்கு மரியாதை செய்வோமாக! இந்த மரியாதையால் நாடு உயரும், நாமும் உயர்வோம்.!"

இவ்வாறு தமிழக முதல்வர் அவர்கள் பேசினார்கள்.

அதன் பின்னர் அண்ணா விளையாட்டரங்கில் இராணுவ வீரர்களின் வீர விளையாட்டுக்கள் நடைபெற்றன.

மாலையில் பிரதேசப்படை அலுவலகம் அமைந்துள்ள கிளைவ் லயன்ஸ் திடலில் பல்வேறு பள்ளி மாணவ-மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து அரசு நர்த்தகி செல்வி சுவர்ணமுகியின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. சங்கர், ஐ. ஏ. எஸ்., அவர்கள், லெப்டினன்ட் கர்னல் சுரீந்தர் சிங் அவர்கள், மற்றும் இராணுவப் பிரமுகர்கள், பொது மக்கள் அனைவரும் கண்டுகளித்தனர்.



# வெற்றிக்கு வழி வகுப்போம்!

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**

கிராமக் கூட்டுறவு வங்கிகள் எனப்படும் பலவகைப்பட்ட வேளாண்மைக்கடன் சங்கங்களை மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அவற்றின் கிளைகள், மற்றும் நிலவள வங்கிகளும் கிராமங்களிலுள்ள நிதிவளத்தை, மிகுதியாகப் பங்குத்தொகை மற்றும் இட்டு வைப்புகளாகத் திரட்டுவதில் தீவிரமாக முனைந்துள்ளது. இயல்பாகச் செயல்படும் அமைப்பும், தற்சார்புமே கூட்டுறவு நிறுவனங்கள் நிதி வளத்தைப் பெருக்கவும் சமூகத்துக்குப் பணியாற்றவும் முடியும். இந்த இயக்கம் இந்த மண்ணில் அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டது.

இயக்கம் தோன்றி 75 ஆண்டுகள் கடந்தும் நிதி உதவிக்கு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கும் நிலைமை இன்னும் தொடர்கிறது. நிறைந்த வசதிகளோடும் நிறுவனக் கட்டமைப்போடும் வணிக வங்கிகள் வேளாண்மைக்கடன் வசதிகளை வழங்க முனைந்துள்ள வேளையில், நிதிவளம் திரட்டுவதில் கண்டுள்ள முன்னேற்றம் பற்றிக் கணிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்தப் போட்டியில் நிலைபெற வேண்டுமானால் கூட்டுறவு நிறுவனங்கள் தமது சொந்த வளத்தையும் வலிமையையும் நம்பி, பிற நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டும்.

**ஒருவழிப்பாதை**

மத்திய, மாநில அரசுகள் கிராமப்புற வளர்ச்சிக்கான ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாக, குறிப்பாக வேளாண்மை வளர்ச்சிக்காக, ஏராளமாக முதலீடு செய்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இத்தகைய முதலீடுகள் ''பசுமைப் புரட்சி''க்கு வழி வகுத்தன. வசதியான பாசன வசதிகள் உள்ள பகுதிகளிலாவது உழவர் பெருமக்களின் வருமானம் பெருகி, வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பது இந்தப் பசுமைப்புரட்சியினால்தான் என்று நாம் காண முடிகிறது. பஞ்சாப் போன்ற மாநிலங்களிலும் கோவை மாவட்டங்களிலும் உழவர்கள் கடுமையாக உழைத்து விவசாயத்தை ஒரு தொழிலாக மாற்றியுள்ளார்கள். இது, வரவேற்கத்தக்க நிலைமையாகும். ஆனால், வருமானம் பெருகுவதால் மட்டுமே குறித்த பயனை வழங்காது.



வேளாண்மைக்காகப் போடும் மிகுதியான முதலீடுகள், மீண்டும் முதலீடு செய்வதற்கு வசதியாக அமைவதற்கு இட்டுவைப்புக்களாகத் திரும்பப் பெற வழிவகை செய்ய வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற நிறுவனங்களால் இந்த முறை வெற்றிகரமாகச் செய்யப்படுவதில்லை. உழவர்களுக்குக் கடன் வழங்கும் ஒரே பணியை மட்டும் அவை செய்து வருகின்றன. மாறாக வணிக வங்கிகள் உழவர்களுக்குக் கடனும் வழங்கி இட்டு வைப்புக்களையும் திரட்ட முயல்கின்றன. அனைத்திந்திய கிராமக் கடன் ஆய்வுக்குழு இது பற்றிக் கீழ்க்கண்டவாறு பொருத்தமாகக் குறிப்பிட்டிருந்தது.

எந்தவொரு வங்கி அமைப்பு முறையிலும், நிதி திரட்டுவதும், உற்பத்தி மற்றும் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிதி உதவி செய்வதும் மிக முக்கியமான அம்சமாகும். கிராமப்புறங்களில் செயல்முறைகளைப் பொறுத்த வரையில் இந்திய வங்கி முறைகளில் ஓர் அங்கமான கூட்டுறவு வங்கிகளின் செயலாக்கும் மற்றொரு அங்கமான வணிக வங்கிகளைவிட முற்றிலும் மாறுபட்டே உள்ளது.

கூட்டுறவு நிறுவனங்கள் கிராமங்களில் வழங்கிய தொகையின் அளவு, அவைகளால் திரட்ட முடிந்த பங்குத்தொகை மற்றும் இட்டுவைப்புத் தொகைளைவிட மிகவும் அதிகமாகும். ஆனால், வணிக வங்கிகள் சிற்றூர் மற்றும் பேரூர்களில் வழங்கிய கடன் தொகைகளைவிட, திரட்டிய இட்டுவைப்புகள் அதிகமாகும். இதைச் சமநிலைப்படுத்துவது மட்டுமின்றி, இந்த இரு வகைப்பட்ட வங்கிகளும், கிராமங்களிலுள்ள நிதி வளத்தை ஒருங்கு திரட்டுவதில், கடந்த காலத்தைவிட, தற்போது ஈடுபடுவது மிகவும் தேவையாகும். கிராமங்களில் கடன் வசதியை விரிவாக்குதற்காக மட்டும் இல்லாமல் விரிந்த அளவில் செயல்புரியவும் இந்தப் பொறுப்பை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கு, வளர்ச்சிக்கேற்ற வாய்ப்பாக, சமூகத்தின் சேமிப்பை மிகுதியாக வளர்ப்பதும், வளர்ச்சிப்பணிகளுக்கு நிறுவன வாயிலாகப் பயன்படுத்துவதும் மிகவும் தேவையானதாகும்.

## பொருத்தமான திட்டம்

கிராம மக்களிடம் சேமிக்கும் அளவுக்கு உபரித்தொகை உள்ளதா என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. கிராமங்களில் சீட்டுக் கம்பெனிகள், தவணை முறை நிறுவனங்கள் போன்றவை ஏற்படுத்தியுள்ள நிலைமைகளிலிருந்து, தொடர்வைப்புகள், சீட்டு நிதிகள் போன்ற சிறு தொகைகளைத் திரட்டமுடியும் என்று தெளிவாக அறியலாம். கிராம மக்களின் தேவைக்குப் பொருத்தமான இட்டுவைப்புத் திட்டத்தை நாம் வகுக்க வேண் வேண்டும்.

## தற்சார்பு முக்கியம்

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, கூட்டுறவு நிறுவனங்களின் தற்போது சார்புடைமையான சொந்த நிதி வலிமையைச் சார்ந்ததாகும். அதனால், அவற்றின் நிதிவசதிக்கு அரசிடமிருந்தும், ரிசர்வ் வங்கியிடமிருந்தும் குறைந்த அளவே சார்ந்திருக்கும் நிலை ஏற்படுகிறது. ரிசர்வ் வங்கி மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து அவை கடன் பெறும்போது கடன் தருவோருடைய நிபந்தனைக்குக் கட்டுண்டிருப்பது மட்டுமின்றி தற்சார்பு அடையும் ஆற்றலைக் குறைத்து விடுகிறது. ''கூட்டுறவு நிறுவனங்களின் தன்னாட்சிப் பண்பு காப்பாற்றப்பட வேண்டுமானால், மேம்படுத்தப்பட்ட வேண்டுமானால் கூட்டுறவியக்கம் நிதிவளத்திலும் தற்சார்புடையதாக இருக்க வேண்டும்''. என்று ஐந்தாவது கூட்டுறவு மாநாட்டில் மிகப் பொருத்தமாகக் குறிப்பிடப்பட்டது. ''கீழ் மட்டத்தில் எந்த அளவுக்குத் தற்சார்பை வளர்க்கிறதோ அதைப் பொறுத்தே நமது நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் வெற்றி அமையும்'' என்று கூட்டுறவுக் கடன் பற்றியமேத்தா குழு வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளது.



## முதல்வரின் முத்துக்கள்

நாகரிகம் என்ற பெயரால் சமுதாயச் சீரழிவுக்கு வழி வகுக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். முன்னேறுகிறோம் என்று எண்ணிப் பின்னோக்கித் தள்ளப்படுகிற நிலைமையை அனுமதிக்கக்கூடாது.

## தமிழகத்தின் சிறப்பு

இனி பல்வேறுபட்ட கூட்டுறவு வங்கிகள் கிராமப்புற நிதிவளம் திரட்டுவதில் மேற்கொண்ட பங்கு பற்றியும் அவற்றின் சாதனைகளையும் பார்ப்போம். மாநிலக் கூட்டுறவு வங்கியின் நிதி திரட்டும் வசதி தலைநகரில் மட்டுமே இருப்பதால், அதை இங்கே குறிப்பிட வேண்டியதில்லை. கடன் வழங்கும் இயக்கத்துக்குத் தேவையான நிதிவளத்தைத் திரட்டுவதற்கு முக்கியம் இடம் வகிப்பவை மத்தியக் கூட்டுறவு வங்கிதான். அவை மாவட்டம் முழுதும் வசதியான செயல் எல்லையாகக் கொண்டு இயங்குகின்றன. ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியின்றிக் கிளைகள் துவக்கிச் செயல்படச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. வேறு எந்தக் கூட்டுறவு வங்கிக்கும் இத்தகைய வசதியில்லை. அவைகள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொண்டு கிராமப்புறங்களில் வாய்ப்புள்ள இடங்களில் கிளைகள் திறந்து இட்டு வைப்புகள் திரட்ட முற்பட வேண்டும். கிராம மக்களிடம் வங்கிப் பழக்கத்தைப்பரப்பவகை செய்ய வேண்டும். தற்போதுள்ள மூன்றடுக்கு முறையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நிறைய இட்டு வைப்புத்தொகைகளைத் திரட்டுகின்றன. அனைத்திந்திய அளவில் 1951-52ல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 38 கோடி ரூபாயும், மாநில வங்கிகள் 21 கோடி ரூபாயும், பிரதம வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் 4 கோடி ரூபாயும் இட்டு வைப்பு தொகைகள் திரட்டியிருந்தன. இதே காலத்தில் மத்திய வங்கிகளில் இட்டு வைப்புத் தொகையானது செயல் மூலதனத்தின் விகிதாசாரத்தில் 63.6 சதவிகிதமாக இருந்தது; மாநில வங்கிகளில் 57.7சதம் பிரதம வேளாண்மைக்கடன் சங்கங்களில் 9.5 சதம் ஆகவும் இருந்தது. 1975-76ல் மாநிலக் கூட்டுறவு வங்கி திரட்டிய இட்டுவைப்புத் தொகை ரூ.724 கோடியும் மத்திய வங்கிகள் ரூ.985 கோடியும் பிரதம சங்கங்கள் ரூ. 113 கோடியுமாகும். செயல் மூலதனத்துடன் ஒப்பிடும்போது அவற்றின் இட்டு வைப்புத் தொகைகளின் விகிதாசாரம் முறையே 56.2 சதம், 48.1 சதம் மற்றும் 6 சதம் ஆக இருந்தது. 1975-76 தமிழகத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ரூ.80 கோடியளவுக்கு இட்டு வைப்புத் தொகை திரட்டின. இது அவைகளின் செயல் மூலதனத்தின் பாதியளவாகும். சேலம், கோவை, சென்னை, மதுரையிலுள்ள மத்திய கூட்டுறவு வங்கிகள் இட்டுவைப்புத் திரட்டுவதில் முதலிடம் வகித்தன. 1977-78ல் பிரதம சங்கங்கள் திரட்டிய இட்டு வைப்புத் தொகை ரூ.12 கோடி அளவுக்கு இருந்தது. இது 1970-71ல் ரூ.5 கோடியாக இருந்தது. சேலம் தர்மபுரியில் உள்ள பிரதம சங்கங்கள் இட்டு வைப்புகள் திரட்டுவதில் சிறப்பிடம் வகித்தன.

## பிரதம சங்கங்களின் பங்கு

நிதிவளம் பெருக்குவதில் கீழ் மட்டத்திலுள்ள பிரதம வேளாண்மைக்கடன் சங்கங்களுக்கு வருங்காலத்தில் மிகத்தீவிரமான பங்கு உண்டு. உழவர்களுக்குக் கடன் கொடுப்பதோடு அவைகள் திருப்தியடைந்து விடக்கூடாது. தமிழகத்தில் பெரும்பாலும் எல்லாப் பிரதம சங்கங்களும் தன்னிறைவு பெற்றவையாக உள்ளன. தமது விவசாய உறுப்பினர்களிடம் மட்டுமின்றி உறுப்பினரல்லாதகிராமத்தொழிலாளர்கள் கைவினைஞர்கள் சிறு வணிகர்களிடமிருந்து இட்டு வைப்புகளைத் திரட்டவேண்டும்.

வளரும் தமிழகம்




# குடிசை வாழ் மக்களின் நல் வாழ்வுக்கு....

**திரு பி. இராமபத்திரன்**
**குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர்**

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். சென்னை நகர மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் ஏழைகளாகக் குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள்.

கிராமங்களில் வேலை வாய்ப்புக்கள் இல்லாத சூழ்நிலையில் சென்னை நகரத்தில் அவர்களுக்குப் பணிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பல மக்கள் சென்னையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வரக்கூடிய மக்கள் தங்குவதற்கு இடமின்றி காலியாக உள்ள இடங்களில் குடிசைகளை அமைத்து வாழத் தலைப்படுகின்றனர். இப்படிப் பட்ட குடிசைகளில் சென்னை நகரில் சுமார் 1,75,000 குடும்பங்களில் கிட்டத்தட்ட பத்து இலட்சம் மக்கள் 1202 குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தகுந்த சுகாதார வசதிகள் இல்லாது மழைக் காலங்களில் மழையினால் பாதிக்கப்பட்டும் வெயில் காலங்களில் தீயினால் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் அவர்களில் குடியிருப்புக்களின் பக்கத்தில் வாழக்கூடிய மக்களுக்குத் தொந்தரவுகள் கொடுக்கக்கூடியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய குடிசைப் பகுதிகளைச் சீரமைத்து அவர்களுக்கு நல்ல வீடுகளாகக் கட்டிக் கொடுத்து அவர்கள் சுத்தமாக, சுகாதாரமாக வாழ வேண்டுமென்ற எண்ணம் அப்போதிருந்த அரசாங்கத்திற்கேற்பட்டது. அதன்படி, 1956-57-ஆம் ஆண்டு



களில் சென்னை நகரைப பொறுத்த வரையில் குடிசைகள் சீரமைப்புப் பணியை வட சென்னையில் மாநகராட்சி மன்றமும், தென் சென்னையில் வீட்டு வசதிவாரியமும் மேற்கொண்டன. 1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்றவுடன் குடிசைகளுக்குப் பதில் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுத்தார். அவர் காலத்தில் சுமார் 5,222 தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்பட்டன. அதன் பின்னர் இந்தப் பணியைத் தனியாகச் செய்வதற்கு ஒரு வாரியம் "குடிசை மாற்று வாரியம்" என்ற பெயரில் 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப் பட்டது.

இந்தப் பணிகளைச் செம்மை செய்து சீர்திருத்துவதற்கு, 1971 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரிய அபிவிருத்திச் சீரமைப்பு சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டம் உருவாக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின் நோக்கம் புதிய குடிசைகள் தோன்றாமல் தடுப்பதும், குடிசைகளை அமைத்துக் கொண்டுள்ள குடிசைவாசிகளை நிலச் சொந்தக்காரர்கள் அவர்களின் இடத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடுப்பது, குடிசைவாசிகளுக்கு மாற்றிடம் கொடுக்கும் வரையில் நிலச் சொந்தக்காரர்கள் எந்த வித தொல்லைகளையும் கொடுக்காமல் பாதுகாப்பு அளிப்பதுமாகும்.

சென்னை நகரைப் பொறுத்த வரையில் புதிய குடியிருப்புக்களைக் கட்டுவதற்கு இடங்களை தேர்ந்தெடுப்பது சிரமமான காரியமாக இருந்து வருகிறது. அந்தந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் அந்தந்த இடங்களிலேயே தங்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்று



கேட்டுக் கொள்கின்றார்கள். ஆக, அத்தகைய இடங்களைத் தேர்ந்தெடுத்து, அங்குள்ள மக்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுக்க அவசியம் ஏற்படுகின்றது.

சென்னை நகரைப் பொறுத்த வரையில் இங்கு குடியிருப்புக்களைக் கட்டுவதற்கு உள்ள நிலங்கள் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமானவைகளாகும் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களும், துறைமுகப் பகுதிக்குச் சொந்தமான நிலங்களும், இந்து அறநிலையத்திற்குச் சொந்தமான நிலங்களும், தனியார் நிலங்களுமாக இருந்து வருகின்றன. இவைகளில் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களிலும், அரசு நிலங்களிலும், துறைமுகப்பகுதிக்குச் சொந்தமான நிலங்களிலும் குடியிருப்புக்களைக் கட்டுவது சிரமமில்லாத பிரச்சினையாக இருந்து வருகிறது. மீதமுள்ள நிலங்களை ஆக்கிரமித்து குடியிருப்புக்கள் கட்டுவதற்கு முனையும் பொழுது பல சிக்கல்கள் தோன்றி விடுவதுடன். அவர்கள் வழக்கு மன்றங்களுக்கும் சென்று தடையுத்தரவும் பெற்று விடுவதனால் பணிகள் தடைப்பட்டுவிடுகின்றன. அத்தகைய பணிகள் தடைபடாமல் நடைபெறுவதற்கு உள்ள வழிகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

தமிழக அரசைப் பொறுத்த வரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன், ஏழை எளிய மக்கள் மனநிறைவான வாழ்க்கை வாழ்வதற்குப் புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருப்பதுடன், குடிசை வாழ் மக்களின் நல்வாழ்விற்காக நல்ல பணிகளை ஆற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் குடிசை மாற்று வாரியம் பணியாற்ற வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

குடிசைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக அவர்கள் நல்ல பல உதவிகளைச் செய்து வருவதுடன், குடிசை வாழ் மக்கள் சுத்தமாக, சுகாதாரமாக நல்ல நிலையில் வாழ வேண்டுமென்பதற்காகப் பல நல்ல திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள்.

குடிசை மாற்று வாரியம், தற்பொழுது குடிசைகளை மாற்றி, தமிழக அரசு செலவில் மாடிக் குடியிருப்புகளை அமைத்துத் தருதல், குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், தெருவிளக்கு, மின்வசதி, கழிவிடங்கள் கட்டித்தருதல், தண்ணீர் தேங்காமலிருக்க வசதி செய்தல், உலக வங்கி உதவியுடன் அடிப்படை வசதிகளைச் செய்து தருதல், மத்திய அரசுக்கு உட்பட்ட ''ஹட்கோ'' கடன் உதவியுடன் புதிய குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

புதிய குடிசைகள் போடுவதையும் குடிசை மாற்று வாரியம் தடை செய்து வருகின்றது. அவசர கால ஆட்சியின்போது சுமார் இரண்டாண்டுகள் செயல்படாமலிருந்த இவ்வாரியம், தற்பொழுது புதுப்பொலிவுடன் செயல்படத் துவங்கியுள்ளது. 915 இலட்சம் ரூபாய் செலவில் 10,500 குடியிருப்புகள் கட்டவும் 395 இலட்சம் செலவில் 48,342 குடிசைவாழ் குடும்பங்கள் அடிப்படை வசதிகள் பெற்று பயனடையவும் திட்டங்கள் தீட்டி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதுவரை சுமார் 250 குடிசைப் பகுதிகள் அகற்றப்பட்டு அங்குப் புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. குடிசை மாற்று வாரியத்தினால் கட்டப்பட்டிருக்கும் மாடிவீடுகளிலுள்ள ஒவ்வொரு குடியிருப்புக்கும் மாத வாடகை ரூபாய் 10, தண்ணீர் வசதியிருந்தால் ரூபாய் 12, தண்ணீரும், மின்விளக்கும் கொடுக்கப்பட்டிருந்தால் மாத வாடகை ரூ. 15. வெளியிடங்

## ஈ. வெ. கி. சம்பத் சாலை

5.3.1979ல் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற திரு. ஈ.வெ.கி. சம்பத் அவர்களின் முதலாண்டு நினைவு நாள் கூட்டத்தில் அவர் நினைவாக, அவர் வாழ்ந்த 'ரண்டால்ஸ் ரோடு' (Rundalls Road) என அழைக்கப்படும் சாலையின் பெயர் 'ஈ.வெ.கி. சம்பத் சாலை' என்று மாற்றியமைக்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

சென்னை வேப்பேரியிலுள்ள ரண்டால்ஸ் சாலையின் பெயரை ஈ.வெ.கி. சம்பத் சாலை என மாற்றியமைக்க, சென்னை மாநகராட்சிக்கு, அரசு, அனுமதி வழங்கியது.

## 'டாக்டர் அம்பேத்கார் கல்லூரிச் சாலை'

சென்னை வியாசர்பாடியில் உள்ள கண்ட்ஸ் சாலையை 'டாக்டர் அம்பேத்கார் கல்லூரிச் சாலை' என்று மாற்றுவதற்குச் சென்னை மாநகராட்சிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

களில் மேற்படி ஒவ்வொரு குடியிருப்புக்கும் மாதவாடகை ரூ. 100-க்கும் மேல் கொடுக்க வேண்டியிருக்கும். இத்தகைய குறைந்த வாடகையில் கொடுக்கப்படும் வீடுகளைப் பெற்றிருக்கக்கூடிய மக்கள் பல இடங்களில் அவைகளைச் சுத்தமாக, சுகாதாரமாக வைத்துக் கொள்ளாமல் அசுத்தமாகவும் ஆரோக்கியக் குறைவாகவும் வைத்துக் கொண்டுள்ளனர். பல இடங்களில் மாத வாடகை ரூ. 10 ஐயும் கொடுக்காமல் பல ஆண்டுகளாக நிலுவை வைத்துள்ளனர். இருந்தாலும்கூட வாரியம் அத்தகைய இடங்களையும் சுத்தம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்து வருகின்றது.

தமிழக குடிசை மாற்று வாரியம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்மாதிரியாக இருந்து வருகின்றது. 1971-ஆம் ஆண்டிலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை சுமார் 34 கோடி ரூபாய் செலவில், 34,500 குடியிருப்புகளைக் குடிசை மாற்று வாரியம் கட்டியிருக்கிறது.

நடப்பு ஆண்டிற்கும் அடுத்த ஆண்டிற்கும் சுமார் 15,000 குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குடியிருப்புகளில் வசிக்கக்கூடிய மக்கள் கல்வி அறிவு பெறவும், கைத்தொழில் செய்து பொருளீட்டிக் கொள்வதற்கும் வழி வகைகள் செய்து கொள்ளவும், அவர்கள் நல்ல முறையில் பொழுதைப் போக்குவதற்கும் வழி வகைகள் செய்யவும் சில சமூக ஸ்தாபனங்கள் முன் வந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றன.

'புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை' என்ற சமூக ஸ்தாபனம் பல நல்ல பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நனவாக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பல சீரிய உதவிகளைக் குடிசை மாற்று வாரியத்திற்குச் செய்து கொண்டிருக்கிறார்கள்.



குடிசை மாற்று வாரியத் தலைவர், குடிசை மாற்று வாரியக் கட்டடப் பகுதிகளைப் பார்வையிடுகிறார்.

தமிழக அரசு செய்துவரும் இந்தச் சீரிய பணிக்குக் குடிசை வாழ்மக்களும் உதவிகரமாக இருந்து தங்கள் கடமைகளை உணர்ந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வீடுகளை நல்ல முறையில் பராமரித்து வந்தால் அது அவர்களுக்கும் நல்ல நலனைக் கொடுப்பதாக அமையும்.

சில பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புத்தாரர்கள் குடியேற இயலாமல் ஆக்கிரமிப்புதாரர்கள் குடியிருந்து கொண்டு வீடுகளைக் காலி செய்யாமல் இருந்து வருகின்றார்கள். இன்னும் சில பகுதிகளில் ஒதுக்கீடுதாரர்கள் குடியிருக்காமல், வேறு யாருக்கோ அதிக வாடகைக்கு விட்டு இலாபம் சம்பாதித்து வருகின்றார்கள். சில இடங்களில் ஒருவரே நான்கைந்து இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு அதிக வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் கடமையைஉணர்ந்து தங்களைப் போன்ற பிற ஏழை மக்களும் வாழ வேண்டுமென்று விரும்பி, சட்டத்திற்கு விரோதமாகப் பணிகளில் ஈடுபடமாட்டார்கள் என்று நம்புவதுடன் அவர்களையும் மேற்படி குறைகள் இருந்தால் திருத்திக் கொண்டு சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டிக் கொள்ளுகின்றோம்.

குடிசை மாற்று வாரியத்தில் குடியிருப்புகள் பெறுவதற்கு மாதம் ரூபாய் 250-க்குக் குறைவாக வருவாய் உள்ளவர்களாகவும் தற்பொழுது குடிசைப் பகுதியில் வாழ்பவர்களாவும் இருக்க வேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகளையும் சிலர் மீறி வருகின்றார்கள்.

ஏழை எளிய மக்கள் மனநிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கு வழிவகைகள் செய்து கொள்ள வேண்டும். சுற்றுப்புறங்களைச் சுகாதாரமாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

''வாழு, வாழவிடு'' என்ற கொள்கையைக் கடைபிடித்து எல்லோரும் நல்ல வாழ்க்கை வாழ்வதற்கு வழி வகைகள் செய்து கொடுக்க வேண்டும். குடிசை மாற்று வாரியம், தனது நல்ல பணியினைத் தொடர்ந்து அமைதியாக ஆற்றிக் கொண்டிருக்கும்.

[அகில இந்திய வானொலியில் 4—3—1979 மாலை ஒலி பரப்பாகியது.]

**முன்பக்க அட்டையில்**

மாண்புமிகு முதல்வரும் மாண்புமிகு நிதி அமைச்சரும் (நிதிநிலை அறிக்கை வெளியிடுவதற்கு முன்னர்)

**பின்பக்க அட்டையில்**

சிறந்த பிரதேசப் படைக்குரிய சிறப்புக் கொடியை திருச்சியில் 27.2.'79ல், 171 பிரதேசப் படைக்கு மாண்புமிகு முதல்வர் வழங்குதல்.

வெண்பாப் போட்டி

விவரம்

**அடுத்த இதழில்**


குழந்தைகளுக்குத் தேவை
சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
விஜய்
குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.
இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.
தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.
உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017
VIJAY
MADRAS FERTILIZERS
VIJAY
விஜய் विजय
COMPLEX 17-17-17
VIJAY
விஜய் विजय
COMPLEX 14-28-14
VIJAY
விஜய் विजय
UREA-N46
MADRAS FERTILIZERS LTD.
MFL-1517



# மக்காச்சோளம் சாகுபடி அனுபவம்

திரு. எம். எஸ். கலியபெருமாள்

எங்கள் பகுதியில் சித்திரைப் பட்டத்தில் மக்காச்சோளம் போடுவது வழக்கம். நாங்கள் எப்பொழுதும் நாட்டு மக்காச் சோளம் சாகுபடி செய்வோம். ஏனெனில் அது கங்கா 5 மக்காச் சோளத்தைவிட வறட்சியைத் தாங்கக்கூடியது. சாப்பாட்டிற்குச் சுவையாக இருக்கும். திரும்ப விதையாகப் பயன்படுத்தலாம்.

கரம்பக்குடி துணை வேளாண் அலுவலர் என்னை அணுகி, 'இம் முறை நீங்கள் கே.1 என்ற புதிய ரக மக்காச் சோளத்தைப் பயிரிடுங்கள் இந்த ரகம் நாட்டு மக்காச்சோளத்தில் இருந்து தெரிவு படுத்தப்பட்டது. தரத்தில் நாட்டுச்சோளம் போன்றும், மகசூல் அதைவிட அதிகமும் கொடுக்கும், என அதன் சாகுபடி குறிப்புகளை வலியுறுத்திச் சொன்னதால் நான் கே.1 மக்காச்சோளம் ஒரு ஏக்கரில் சாகுபடி செய்தேன். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கிணங்க என் அனுபவத்தை உங்களுக்கும் எடுத்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உழவு: முதலில் 4 முறை நன்கு உழவு செய்து நிலத்தை நன்கு பண்படுத்தி அதில் 10 வண்டி மக்கிய குப்பைபோட்டேன்

அடிஉரம்: அடியுரமாக தழைசத்து 27 சதம் மணிச்சத்து, 27 சதம் சாம்பல் சத்து, 18 சதம் கொடுக்கக்கூடிய 17.17. 17 கூட்டுரம் 100கிலோ யூரியா 22 கிலோ, சூப்பர் 62 கிலோவும் ஒரு ஏக்கருக்கு இடுமாறு துணை வேளாண்மை அலுவலர் கூறினார்கள். ஆனால் எனக்கு நிலைமை இடம் அளிக்காததால் நான் 17.17.17 கூட்டுரம் மட்டும் அடியுரமாக 100 கிலோ போட்டேன்.

## விதையும் விதைப்பும்

ஒரு ஏக்கருக்குத் தேவையான 6 கிலோ கே.1. விதையை கிலோவுக்கு 2 கிராம் அக்ரசான் மருந்து வீதம் கலந்து 12 மணி நேரம் கழித்து விதைப்புக்கு எடுத்துக் கொண்டேன். விதையும் நமது நாட்டுச் சோளத்தைப் போன்று தான் இருந்தது. நாங்கள் எப்பொழுதும் மக்காச்சோளத்தை நாற்றுவிட்டு 5வது நாள் நடுவது வழக்கம். அதன்படியே உழவு செய்த வயலில் நல்ல மக்கிய குப்பை இட்டு, 6' 3'க்கு கேட்டுப்பாத்திகள் அமைத்து நாற்றங்கால் தயார் செய்தேன். அந்தப் பாத்திகளில் நெருக்கமாக ஒரு விதையை அடுத்தவிதை தொட்டுக்கொண்டிருக்கும் வண்ணம் விதையை விதைத்து மக்கிய குப்பை மணி முதலியவற்றை இட்டு மூடிவிட்டேன். பின்பு பூவாளியால் விதைகள் பாதிக்கா வண்ணம் பாத்தி கட்டி தண்ணீர் விட்டேன். பின்பு நாற்றங்காலில் வைக்கோல் போட்டு மூடி நிழல் இருக்கும்படி செய்தேன். இந்த நாற்றுகளை 5வது நாள் வேர் அறுந்துவிடாவண்ணம் எடுத்து நடவு வயலில் நடத்தக்க ஏற்பாடுகள் செய்தேன்.



நீர்ப் பாய்ச்ச வாய்க்கால் போட்டு நிலத்தின் சரிவுக்கு ஏற்ப பாத்திகள் அமைத்துக் கொண்டு 45 செ. மீ. வரிசைக்கு வரிசையும், 30 செ.மீ. செடிகளுக்குச் செடியும் இருக்கும் வண்ணம் சிறிய 4 அங்குல குழிகள் பறித்து அக் குழியைச் சுற்றி உரமிட்டு இந்த நாற்றுக்களை குழிகளில் வைத்து மண்ணால் மூடி நடவு செய்தேன். நாற்றினை நட்டவுடன் தண்ணீர் பாய்ச்சினேன். 3வது நாள் எடுப்புத் தண்ணீர் என்று சொல்லக்கூடிய உயிர்த் தண்ணீர் விட்டேன். பிறகு நாட்டுச் சோளத்திற்குப் போல முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை பருவத்திற்கு ஏற்றாற் போலற் நீர் பாய்ச்சினேன்.

## பின்செய் நேர்த்தி

ஒரு முறை களை கொத்தி விட்டு பின்பு 20 கிலோ யூரியா 20வது நாள் மேலுரமாகக் கொடுத்தேன். நட்ட 35வது நாளில் பூ வெளிவந்துவிட்டது. 2 வது முறை மேலுரம் கொடுக்க வில்லை. பூச்சிநோய் தாக்குதல் இல்லாததால் எந்தவிதப் பயிர்ப் பாதுகாப்பு முறையினையும் பின்பற்றவில்லை.

## அறுவடை மகசூல்

விதைத்த 100 வது நாள் பயிர் அறுவடைக்குத் தயாராகிவிட்டது சோளக் கருதுகள் நாட்டுச் சோளத்தைவிட சற்று பெரிதாகவே இருந்தன. பயிரும் நாட்டுச் சோளத்தைப் போலவே வறட்சியைத் தாங்கி நல்ல மகசூல் கொடுத்தது. ஒரு ஏக்கரில் இருந்து 22 மூட்டை தானியம் கிடைத்தது. அதை எடை போட்டுப் பார்த்ததில் 1400 கிலோ இருந்தது. சோளக் கருதுகளை ஒடித்து வெயிலில் காயவைத்து அதன் மேலுள்ள இதழ்களைப் பிரித்து வெயிலில் நன்கு காய வைத்து குச்சியினால் அடித்து அம் மணிகளைப் பிரித்து எடுத்தேன். ஒரு ஏக்கரில் இருந்து 1400 கிலோ கிடைத்தது. அதை விதையாகவே விநியோகிக்க கிலோ ரூ.130 வீதம் வேளாண்மைத் துறையினருக்கு சப்ளை செய்ததில் ரூ. 182 கிடைத்தது. அதற்கு நாம் செய்த செலவு ரூ. 700 கிட்டத்தட்ட 3டன் தட்டை கிடைத்திருக்கும். அதன் மதிப்பு ரூ. 90 ஆக எனக்கு இந்த கே.1 சாகுபடி செய்ததில் ஒரு ஏக்கருக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 1260. இது வேளாண்மைத் துறையினர் கூறியது போலவே நாட்டுச் சோளத்தைப் போன்று ருசியாகவும், இரண்டு நாட்களுக்குக் கூட கெட்டுப் போகாமலும் இருக்கிறது. மேலும் நாம் இதையே விதையாகப் பயன் படுத்தலாம். இது வறட்சியை நன்கு தாங்கக் கூடியதாக இருப்பதோடு மகசூலும் அதிகம் கொடுப்பதால் நிச்சயமாக நமது மாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும்!



# அதிக வருமானம் தரும் திராட்சை

—திரு அ. மெ. தியாகராசன் செட்டியார்,
கொப்பனாபட்டி.

எனக்கு பொன்னமராவதி வட்டாரம் சாத்தூர் கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் நிலமிருக்கிறது. அதில் ஒரு ஏக்கரில் 1973ம் ஆண்டு பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய விவசாய அலுவலராக இருந்த திரு ஹென்றி தேவதாஸ் அவர்களின் தூண்டுதலினாலும், பெருமுயற்சியினாலும் திராட்சை சாகுபடி செய்ய 4.3.'73ல் எனக்கு ரூ.3,000 அரசு பழ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, கடன் வழங்கப்பட்டது. நான் இப்பகுதியில் முதன் முதலாக 1974ஆம் ஆண்டு திராட்சை சாகுபடியை ஆரம்பித்தேன். வெளியூர்களிலிருந்து திராட்சைக் குச்சிகளை வாங்கி வந்து, அந்தக் குச்சிகளில் 5 அங்குலம் நீளமுள்ள நல்ல முத்துக்கள் கொண்டவைகளைத் தேர்ந்தெடுத்து சுமார் 1000 குச்சிகள் பதியன்செய்தேன்.

இதற்கிடையில் ஒரு ஏக்கர் நிலத்தை சீர்செய்து மூன்று சம பகுதிகளாகப் பிரித்து வரப்புகள் கட்டினேன். 10 அடிக்கு 10 அடி இடைவெளியில் 2X2X1 அளவுள்ள குழிகள் வெட்டப்பட்டன. குழி ஒவ்வொன்றிலும் மக்கிய தொழுஉரம் 10 கிலோவுடன் பசுந்தழை, கள்ளி, சப்பாத்தி செடிகள் ஆகியவைகளைப் போட்டு குழியை மூடி, தண்ணீர் விட்டு மக்கவைத்தேன். தழைகள் மக்கியவுடன் ஒரு குழிக்கு 5 திராட்சைக் குச்சிகளை நட்டேன். குச்சிகளிலிருந்து இலைகள் வரும் பொழுது சிறிய வண்டுகள் தாக்காவண்ணம் மெட்டாசிட் 50 சதம் மருந்து 15 தினங்களுக்கு ஒருமுறை அடிக்கப்பட்டது. செவ்வட்டை என்ற நோய் தாக்காமல் இருக்க இலைகளின் மேல் போர்டோ கலவை மருந்தைத் தெளித்தேன். இவ்வாறு 10 மாதம் வரை கொடிய பூச்சி பூஞ்சாளம் தாக்காமல் நன்கு வளர்த்து, பந்தல்அமைத்து கொடியை வளர்த்து, படர வைக்கப்பட்டது. பந்தல் கால்களுக்கு கிளுவை மரங்கள் நடப்பட்டன. மேல் பந்தல் மூங்கில் மரத்தினால் போடப் பட்டது.

பத்தாம் மாதம் படர்ந்து வளர்ந்த கொடியை பருத்த மொட்டுகளில் 5 முதல் 7 கணு விட்டு வெட்டப்பட்டது. கொடி வெட்டுவதற்கு ஒரு வாரம் முன்பு தண்ணீர் பாய்ச்சுவது நிறுத்தப் பட்டது. கொடி வெட்டி 10 தினங்கள் சென்ற பின் மொட்டுக்களில் பூ வரும். அப்பொழுது மெட்டாசிட் 50 சதம் மருந்து அடித்து, உருண்டை வண்டு, பூக்களைத் தின்று விடாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. பூ தழைத்து வந்த பின், செவ்வட்டை வராமல் 15 தினங்களுக்கு ஒருமுறை போர்டோ கலவை மருந்து அடித்தேன். பிஞ்சு, மிளகுப் பருவம் வரும் சமயம் வரை 5 சதம் கந்தகத்தூள் அடித்தேன். கொடி வெட்டி 100வது நாள் பழம் அறுவடைக்கு வந்தது. முதல் அறுவடையில் ஒரு ஏக்கரில் 7500 கிலோ பழம் கிடைத்தது.

நிலத்தைப் பண்படுத்தி குழிகள் வெட்டி, செடிகள் நட்டு, பந்தல் அமைத்தல் ஆகியவைகளுக்கு முதல் 10 மாதம் வரை ஏக்கருக்கு ஆன செலவு ரூ.6500. இரண்டாவது ஆண்டு ஏக்கருக்குச் சாகுபடி செலவு ரூ.5,400 ஆகியது. முதல் ஆண்டில் அறுவடையான திராட்சைப் பழங்களிலிருந்து மொத்த வருமானம் ஏக்கருக்கு ரூ.27,066 கிடைத்தது. சாகுபடிச் செலவு போக நிகர லாபம் எனக்கு ஏக்கருக்கு ரூ.21,666 கிடைத்தது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்க கொப்பனாம் பட்டி கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு திராட்சை சாகுபடிக் கருத்தரங்கு நடத்தப் பட்டது. கருத்தரங்கில் திராட்சை சாகுபடி செய்ய கூட்டுறவு வங்கியின் மூலம் ஏக்கருக்கு ரூ.8000 கடனுதவி செய்து சிறு விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். அதன் பயனாக கிராம கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் திராட்சை சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.8000 கடன் வழங்கப்பட்டு பொன்னமராவதி வட்டாரத்தில் இதுவரை சுமார் 40 ஏக்கர் திராட்சை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது.

ஊக்கமுள்ள விவசாயிக்கு, திறமைக்கு ஏற்ற அதிக வருமானம் பெற ஒரு சிறந்த வழி காட்டி திராட்சை சாகுபடி என்பது மிகையாகாது. வாய்ப்புள்ள விவசாயிகள் அனைவரும் இதன் பயனை நன்கு உணர்ந்து திராட்சை சாகுபடி செய்து லாபம் அடைந்து முன்னேற்றமடைய கேட்டுக் கொள்கிறேன்.

# தருமபுரி மாவட்டத்தில்....

தருமபுரி மாவட்டத்தில் தற்போது அமலில் உள்ள வறட்சி மீட்புத் திட்டத்தில் சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களது வாழ்க்கைத்தரம் உயரவும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவும், ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வாங்கக் கடன் அளிக்கப்படுகின்றது. இதனால் இவர்கள் பெரிதும் பலனடைந்து வருகின்றார்கள்.

வறட்சி மீட்புத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் ஆகியவைகளின் மூலம் இக்கோட்டத்தில் இதுவரை 945 சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ. 28.35 இலட்சம் கடனாகவும், இதில் அரசு மானியமாக மொத்தம் 7.29 இலட்சமும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தில் சிறு விவசாயிகள் கறவை மாடுகள் வாங்க 919 பேர்களுக்கு ரூ.13.97 இலட்சம் மொத்தம் கடனாகவும் இதில் அரசு மானியமாக ரூ.4.45 இலட்சம் கொடுக்கப்பட்டு, விவசாயிகள் பலனடைந்து வருகின்றார்கள்.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 60 சிறு விவசாயிகளுக்கு ஆடுகள் வாங்க ஒரு நபருக்கு ரூ.1500 வீதம் கடனளிக்கப்பட்டுள்ளது. இதில் பாதியை, அரசு, மானியமாகக் கொடுத்து விடுகின்றது. இன்னும் இரண்டு மாதக் காலத்திற்குள் மேலும் 100 விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படவிருக்கின்றது. இதனால், இம்மாவட்டத்தில் அரசு மானியமாக ரூ.1.20 இலட்சம் செலவிடப்படுகின்றது.

வேளாண்மையைப் பெருக்கிட...

உணவு உற்பத்தியைப் பெருக்க மண் நிலங்களில் மண் மிகவும் வளமுள்ளதாக இருக்கவேண்டும். மண்வளம் இல்லாத நிலங்களில் எவ்வளவுதான் பாடுபட்டா'லும் அதிகமான மகசூல் கிடைக்காது. உணவு உற்பத்தி அதிகமாகக் கிடைக்க வேண்டுமானால் மண்வளம் மிகமிகத் தேவை.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சமஉயர வரப்பு அமைத்தல், நிலத்தைச் சமப்படுத்தல், சமஉயர கற்சுவர் கட்டுதல், கசிவுநீர்க் குட்டை அமைத்தல் போன்ற பல முக்கியமான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1977-78ஆம் ஆண்டில் 2044.05 எக்டேர் நிலத்தில் சமஉயர வரப்பு அமைக்கப்பட்டு இருக்கிறது. இதற்காக ரூ. 7,74,072 செலவிடப்பட்டு இருக்கிறது. 1978-79ஆம் ஆண்டில் இதுவரை இப்பணியில் 1209.18 எக்டேர் நிலத்தில் சமஉயர வரப்பு அமைக்கப்பட்டு இருக்கிறது. இதற்காக இதுகாறும் ஆன செலவு ரூ.2,78,126 ஆகும். இவ்வாறு சம உயர வரப்பு அமைத்ததன் மூலம் மழைக் காலங்களில் மண் அரிப்பைத் தடுப்பதோடு, அந்நிலத்தில் போடப்பட்ட உரம், வேறு நிலங்களுக்குச் சென்றுவிடாமல் தடுக்க முடிகிறது.

நிலத்தைச் சமப்படுத்துகின்ற திட்டத்தின் மூலம் 1977-78ஆம் ஆண்டில் 1.89 எக்டேர் நிலம் சமப்படுத்தப்பட்டு இருக்கின்றது. 1978-79ஆம் ஆண்டில் 25 எக்டேர் நிலம் சமப்படுத்தப்பட்டு விடும். இவ்வாறு நிலத்தைச் சமப்படுத்துவதனால் உரச் சத்துக்கள் பரவலாக்கப்பட்டு நிறைந்த மகசூல் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கின்றது.

சமஉயரக் கற்சுவர்கள் கட்டப்படுவதால் மண் அரிப்பு தடுக்கப்படுவதோடு நிலத்தில் போடப்பட்டு இருக்கும் உரமும் வெளியேறிவிடாமல் தடுக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒரு கசிவு நீர்க்குட்டை அமைப்பதற்குச் ஏறத்தாழ 25,000 ரூபாய் செலவாகிறது. கசிவு நீர்க்குட்டை அமைக்கப்படுவதால், 200 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறுவதோடு அந்நிலத்தில் உள்ள கிணறுகளும் பயன் பெறுகின்றன. 77-78 ஆம் ஆண்டில் 8 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.1,83,541 செலவு செய்யப்பட்டிருக்கிறது.

1978-79ஆம் ஆண்டில் மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்காகச் சமஉயரக் கற்சுவர் கட்டுதலில் 50 ஏக்கரும் நிலத்தைச் சமப்படுத்துவதில் 20 ஏக்கரும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இந்நிதியாண்டு இறுதிக்குள் நிலத்தில் சம உயர வரப்பு எழுப்பும் பணியின்கீழ் 25 ஏக்கர் நிலம் ரூ.25,000 செலவில் சமப்படுத்தப்படும். ரூ.50,000 செலவில் சமஉயரக் கற்சுவர் 50 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும்.

* * *

தருமபுரி மாவட்டத்தில் பால்வளப் பெருக்கம் மற்ற மாவட்டங்களைவிட அதிகமாகும்.

இந்த மாவட்டத்தில் 1500 கிராமத்தைச் சேர்ந்த 50,000 விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச நாள் வருமானம் ரூ./2- கிடைக்கவும், நேரடிவேலைவாய்ப்பின் மூலம் 1500 பேருக்கு ரூ./5- லிருந்து ரூ.25/- வரை, நாள் வருமானம் கிடைக்க பால்வள பெருக்கத்தின் மூலம் வழி வகை செய்யப்பட்டு இருக்கின்றது.

இம்மாவட்டத்தில் 1500 கிராமங்களில் பால்வளப் பெருக்கத்தால் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கின்றது. 1974 லிருந்து '76 வரை 75 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாக்கப்பட்டது. 1977-'78ம் ஆண்டிற்கு வறட்சி மீட்புப்பணித் திட்டத்தின் கீழ் ரூ.16.28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பால்வளப் பெருக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டது.



## வறட்சி நிவாரணப்பணி நடைபெறுகிறது

1978-'79ம் ஆண்டிற்கு ரூ. 32.87 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கிராமநல ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், பால்கேன்கள் வாங்கவும் பயன்படுத்தப்பட்டது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித்திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் பால்வளத்தைப் பெருக்க கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பினை நல்க 1977-'78ம் ஆண்டிற்கு ரூ.48.925 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதிக அளவில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இந்தத் தொகையிலிருந்து வறட்சி மீட்புப்பணித் திட்டத்தின்கீழ் 75 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 50-க்கும் மேலான சங்கங்களுக்கும் நாளொன்றுக்கு 80,000 கொள்ளளவு உள்ள பாலைபதப்படுத்தும் திட்டம் துவக்கப்படுவதற்கும் செலவிடப்பட்டு வருகிறது.

இதுகாறும் 250 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டு இருக்கிறன. பாலினைக்குளிரூட்டி, பதப்படுதும் திட்டம் தருமபுரியிலும், கிருஷ்ணகிரியிலும் நடைபெற்று வருகிறது. இதன்மூலம் நாளொன்றுக்கு 80,000 லிட்டர் பால் குளிரூட்டிப்பதப்படுத்தப்பட்டு வருகின்றது.

1978-'79ம் ஆண்டிற்கு வறட்சி மீட்புப்பணித் திட்டத்தின்கீழ் 50க்கும் அதிகமான பால்உற்பத்தியாளர் சங்கங்கள் துவக்கப்பட இருக்கின்றது. 1978-'79க்குள் 50,000 விவசாயிகள் பங்குபெறும் 250 சங்கங்கள் மூலம் 60,000 லிட்டர் பால் வழங்கும் நிலமை இந்த மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு விடும். தமிழ்நாடு பால்வள நிறுவனம் ஏற்கனவே அரூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, தருமபுரி, பாலக்கோடு ஆகிய ஐந்து வட்டங்களில் இயங்கி வருகின்றது.

தருமபுரியில் 2.25 ஏக்கர் நிலத்தில் பால்குளிரூட்டும் நிலையம் உருவாக்கப்பட்டு 10,000 லிட்டர் பால் நாள் ஒன்றுக்குக் குளிரூட்டப்பட்டு வருகின்றது. வறட்சி மீட்புப்பணித்திட்டத்தின் கீழ் 40,000 லிட்டர்ப் பாலை குளிரூட்டும் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டது. கிருஷ்ணகிரியில் 1977-ல் நாளொன்றுக்கு 8.000 லிட்டர் பால் குளிரூட்டும் தற்காலிகப் பால் குளிரூட்டும் நிலையம் துவக்கப்பட்டு இருக்கின்றது. ஒருங்கிணைந்த கிராம முன்னேற்றப் பணித்திட்டத்தின்கீழ் 40,000 லிட்டர் பாலை குளிரூட்டக்கூடிய அளவிற்கு பணி துவக்கப்பட்டு இருக்கின்றது.

பால்வளத்தை பெருக்கக் கால்நடைப்பராமரிப்பு மிகவும் தேவைப்படுகிற ஒன்றாகும். கால்நடைப்பராமரிக்கும் விதம் குறித்து, விவசாயிகட்கு இரவு காலங்களில் கூட்டங்கள் நடத்தி விளக்கப்பட்டு வருகிறது. கால்நடை வழித் தடங்களைஅமைத்து மூன்று கால்நடை வைத்தியர்கள் மூலம் பிரசாரங்கள் பயன் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

அவசரக் கால கால்நடை மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டு, கால்நடைகட்கு, அவசரச் சிகிச்சை செய்யப்பட்டுவருகிறது. இலாபநோக்கம் கருதாமல், கால்நடைத்தீவனங்கள் தயாரிக்கப்பட்டு, குறைந்த விலையில் விவசாயிகட்கு வழங்கப்பட்டு வருகிறது. ரோப்பியர் பனரா, குதிரைமசால் ஆகிய புல்வகைகள் 140.80 ஏக்கரில் பயிரிட வழி வகை செய்யப்பட்டுள்ளது. 88 விவசாயிகட்கு ஏக்கருக்கு ரூ. 200/- வீதம் மானியமும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வறட்சி மீட்புப்பணித் திட்டத்தின்கீழ் பல சங்கங்களின் செயலர்கட்கு பெங்களூர், சென்னை, மாதவரத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

# வெற்றிலை வாடல் நோய்!



வெற்றிலையில் தோன்றும் வாடல் நோயை ஃபைட்டோ ஃப்தோரா பாரசிட்டிகா வகை பைப்ரினு, ஃபைட்டோஃப்தோரா பால்மிவோரா ஆகிய இரண்டு பூசணங்களும் தோற்றுவிக்கின்றன. இது வெற்றிலையில் காணப்படும் நோய்களில் மிகவும் முக்கியமானதொன்ருகும். இந்த நோயினுல் 30 முதல் 100 விழுக்காடு வரை மகசூல் இழப்பு உண்டாகிறது.

இந்தியாவில் வெற்றிலை பயிராகும் பெரும்பாலான பகுதிகளிலும் இந்நோய் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் வெற்றிலைச் சாகுபடி செய்யப்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த வாடல் நோயைக் காணலாம். இந்த நோயினுல் சேலம், திருச்சி, மதுரை மாவட்டங்களில் வெற்றிலையில் மிகுந்த இழப்பு ஏற்படுகின்றது. இது பெரும்பாலும் வெற்றிலைப் பயிரின் வயது 6 மாதம் அல்லது அதற்குச் சற்று அதிகமான வயதுப் பருவத்திலிருந்தே அதிகமாகக் காணப்படுகிறது. அதாவது வெற்றிலைப் பயிரின் கிள்ளுப்பருவத்திலிருந்தே இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. இந்நோயின் தீவிரத்திஞல் ஏற்பட்ட இழப்பினுல் சில வெற்றிலைச் சாகுபடியாளர்கள் சாகுபடியைக் கைவிட நேர்ந்துள்ளது.

**அறிகுறிகள்:** வாடல் நோய் பெரும்பாலும் அக்டோபர் மாதத்திலிருந்து பிப்ரவரி மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் மிகுதியாகத் தோன்றுகிறது. இப்பூசணம் வெற்றிலைக் கொடியின் எல்லா வளர்ச்சிப் பருவத்திலும் காணப்படுகிறது. இந்நோயின் முதல் அறிகுறியாகப் பட்டம் பட்டமாக வெற்றிலைக்கொடிகள் திடீரென்று காய்ந்து விடுவதைக் காணலாம். நோயினால் பாதிக்கப்பட்ட கொடிகளில் இலைகள் மஞ்சளாகிக் கீழ் நோக்கித் தொங்கி விடுகின்றன. இந்த இலைகள் தங்களது பசுமையான நிறத்தையும் பளபளப்புத் தன்மையையும் இழந்து மங்கலாகி விடுகின்றன. நோயுற்ற கொடிகள் விரைவில் இரண்டு அல்லது மூன்று நாட்களில் முழுவதுமாகக் காய்ந்துவிடுகின்றன. சாறு நிரம்பிய பசுமையான தண்டுகள் பழுப்பு நிறமாக மாறி உடையும் தன்மைகொண்ட உலர்ந்த குச்சி போல மாறிவிடுகின்றது. நோயுற்ற தண்டின் அடிப்பகுதியில் நிலத்திற்கருகில் தண்ணீர் நனைந்தது போன்ற ஒழுங்கற்ற வடிவமுடைய புள்ளிகள் தோன்றும். இப்பூசணங்கள் மண்ணில் இருக்கும் வேர்களையும் தண்டுப் பகுதியையும் தாக்குகின்றன. நோயுற்ற கொடியைப் பிடுங்கிப் பார்த்தால் கணுப்பகுதி கருமை நிறமாக மாறி அழுகியிருப்பதைக் காணலாம். மண்ணுக்குள் புதைந்து காணப்படும் தண்டுப்பகுதிஅழுகி, கணுப்பகுதியில் இற்றுவிடுகிறது. நோயுற்ற கொடியில் இடைக் கணுப்பகுதிகளில் ஈர அழுகல் அறிகுறிகளைக் காணலாம். ஈர அழுகலில் திசுக்கள் மென்மையடைந்து அழுகி எஞ்சியுள்ள நார் போன்ற திசுக்களை வெளியே காட்டுகின்றன. இந்நோயைத் தண்டழுகல் என்று அழைக்கலாம். நோயுற்ற செடிகளில் மண்ணினுள் புதைந்துள்ள தண்டுப் பகுதியிலும் தரை மேலே காணும் கணுப் பகுதியிலும் மட்டுமே அழுகல் அறிகுறிகளைக் காணலாம். விதைக் கொடிகளைப் பருவத்திற்குப் பின்பு நடுவது, நோயிற்குச் சாதகமான குளிர்ச்சிக் காலமாக இருந்தால் பூசணத்தின் தாக்குதலினுல் கொடி தழைக்கும் அளவு குறைந்துவிடுகிறது. விதைக் கொடிகளின் கணுப்பகுதி அழுகி இறந்துவிடுகின்றது. இதனால் ஆரம்பத்தில் கொடியின் முளைப்புத் திறன் குறைந்து, பட்டங்களில் ஆங்காங்கே கொடி எடுபடாமல் சொட்டையாகக் காணப்படும்.

பயிரின் இளம் பருவத்தில் பூசணங்கள் இலை அழுகல் அறிகுறியைத் தோற்றுவிக்கின்றன. நோயுற்ற கொடியில் தரைப் பகுதிக்கு அருகிலுள்ள இலைகளில் வட்டமான அல்லது ஒழுங்கற்ற வடிவமுடைய தண்ணீர் நனைந்தது போன்ற புள்ளிகள் உண்டாகின்றது. நோயின் ஆரம்ப காலத்தில் இலைகளின் மேல் மஞ்சள் திட்டுகளைக் காணலாம். இம்மஞ்சள் திட்டுக்களுக்கு நேர் கீழே கூர்ந்து நோக்கினால் பூசணத்தின் வளர்ச்சியைக் காணலாம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட இலைப்பகுதி நாளடைவில் பழுப்பு நிறமாக மாறி முதிர்வதற்கு முன்பே கீழே விழுந்துவிடுகின்றன. சில சமயங்களில் நோயுற்ற இலைப்பகுதி அழுகிச் சிதைந்துவிடுகின்றது. இளம் பயிர்களில் தோன்றும் இலையழுகல் அறிகுறிக்கு நீர்ப்பாசனம் அல்லது மழை பெய்யும்பொழுது உண்டாகும் மழைத்துளி சிதறலினால் பரவும் பூசணங்களில் வித்துக் கூடுகளே காரணமாக அமைகின்றன. பெரும்பாலும் தரைமேலுள்ள இடைக் கணுப் பகுதியில் நேரடியாக நோய் ஏற்படுவது இல்லை. வாடல்நோயின் இலை அழுகலினால் 10 முதல் 30 விழுக்காடு வரை வெற்றிலை இழப்பு ஏற்படுவதாகக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

**நோய் பரவுதலும் அதற்கு உரிய காரணக் கூறுகளும் :**

வெற்றிலை வாடல் நோயிற்குரிய பூசணங்கள் மண்ணில் உயிர் வாழும் தன்மை கொண்டவை. இவை ஒரு தோட்டத்திலிருந்து மற்ற தோட்டங்களுக்குப் பாசன நீர் மூலமாகப் பரவுகிறது. ஒரு பட்டத்திலிருந்து மற்ற பட்டங்களுக்குத் தண்ணீரை, பட்டையினால் இறைக்கும் பொழுது இப்பூசணங்கள் பரவி நோயினை ஏற்படுத்துகின்றன. இந்தப் பூசணங்கள் வாய்க்கால் ஓரங்களில் வளரும் **கொலோகேசியா** எனப்படும் காட்டுச் சேப்பங்கிழங்கு செடிகளிலும் சாதாரணமாகக் காணப்படுகின்றன. இச்செடி பூசணங்களுக்கு உடனொத்த ஊண் வழங்கியாக இருக்கின்றது. நோயுற்ற இலைகளில் மட்டுமே இனக்கலப்பு வித்துக்கள் மண்ணுடன் கலந்து, நீண்ட நாட்களுக்கு

உயிரோடு இருந்து தொற்று நோயை ஏற்படுத்தும் தன்மையைக் கொண்டிருக்கின்றன.

டிசம்பர்-ஜனவரி மாதங்களில் ஏறக்குறைய எல்லா நாட்களிலும் இரவு நேர வெப்பம் 23° செ. குறைவாகவே காணப்படுகிறது. தமிழ்நாட்டில், மழையின் அளவுக்கும் வெற்றிலையில் ஏற்படும் நோயின் அளவிற்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை. ஏன் என்றால் அதிக மழையளவு இருக்கும் அக்டோபர் மாதத்தில் மிகக்குறைவான அளவே நோய் உண்டாகின்றது. ஆனால், பெரும்பாலும் மழையில்லாத ஜனவரி மாதத்தில் நோயின் தீவிரம் உச்சக் கட்டத்தில் உள்ளது.

ஆண்டின் குளிர் காலமான நவம்பர் முதல் பிப்ரவரி மாதங்களில் இரவில் 23° செ. அல்லது அதற்குக் குறைந்தும் வெப்பநிலை காணப்படுவதால் பூசணங்கள் நன்கு வளர்ச்சியடைகின்றன. இரவு வெப்பம் 23° செ. குறைவாக உள்ள நாட்கள் அதிகமானால் நோய் ஏற்படும் அளவும் அதிகமாவதாகத் தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்திலுள்ள பொத்தனூர் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வெற்றிலை பயிரிடப்படும் முறையில் தண்ணீர், மகசூலைக் கட்டுப்படுத்தும் ஒரு காரணக்கூறாக இருப்பதில்லை. ஏனென்றால் தண்ணீர் எப்பொழுதும் பட்டங்களுக்கிடையே உள்ள கிடங்குகளில் தேக்கி வைக்கப்படுகின்றது. மேலும், தண்ணீர் தினந்தோறும் வெற்றிலைக் கொடிகளுக்குச் சிதறல் இறைவைப் பாசனமாக இடப்படுகிறது.

எனவேதான் தமிழ்நாட்டில் வாடல் நோய் தோன்றுவதற்கு முன் காரணக் கூறாக அமைவதில்லை எனக் கருதப்படுகிறது. வெப்பநிலையினால் வெற்றிலைக் கொடியும் பூசணமும் பாதிக்கப்படுகின்றன. நோய்க்காரணியின் வளர்சிக்கும் நோயுண்டாவதற்கும் குறைந்த வெப்ப நிலையாக 23° தேவைப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**தடுப்பு முறைகள் :** அதிக அளவு வாடல் நோய் தோன்றும் நிலங்களில் குறிப்பிட்ட காலங்களில் நோய்க்கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றாவிட்டால் மகசூல் இழப்பு, பெருத்த அளவில் இருக்கும். வெற்றிலைக் கொடிக்கால் மண்ணில் 1 சதவீதம் போர்டோக்கலவை மருந்துக் கரைசலை இளம் பருவம் முதற்கொண்டு ஒருமாத இடைவெளியில் ஊற்றி வந்தால் வாடல் நோயைக் கட்டுப்படுத்துவதுடன் மகசூலையும் அதிகப்படுத்தலாம்.

மேற்குறிப்பிட்ட மருந்துக் கரைசலை நோய் அதிகம் உண்டாகும் செப்டம்பர் முதல் பிப்ரவரி வரையிலான காலங்களில் ஊற்றுவது சாலச் சிறந்ததாகும்.

போர்டோக் கலவை ½ விழுக்காடு மற்றும் தாமிரம் கலந்த பூசணக் கொல்லியான ஃபைட்டோலான், புளூகாப்பர் ¼ விழுக்காடு (500 கிராம் மருந்தை 200 லிட்டர் நீரில் கரைக்கவும்) மருந்துக் கரைசலை ஊற்றுவதனாலும் நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. சூப்பர் பாஸ்பேட்டை ஏக்கருக்கு 600 கிலோ வீதம் நிலத்தில் மண்ணுடன் கலப்பதால் நோய் ஏற்படுவது குறைவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சூப்பர் பாஸ்பேட்டை நிலக்கடலைப் பிண்ணாக்குடன் கலந்து இடுதல் நல்ல பலனைத் தருகிறது. நோயுற்ற வயலில் தொழு உரத்தை இடுவதால் நோய் ஏற்படும் அளவு அதிகமாவதுடன் நோயின் தீவிரமும் அதிகப்படுத்தப்படுகின்றது.

நோயுற்ற கொடிகளைக் கவனமாக வேருடன் பிடுங்கி வெற்றிலைத் தோட்டத்திலிருந்து அப்புறப்படுத்தி புதைத்தோ அல்லது எரித்தோ அழிக்க வேண்டும். ஒருபோதும் நோயுற்ற வெற்றிலைக் கொடிகளைக் கிடங்குகளில் வீசி எறியக்கூடாது. ஏனென்றால், இக்கொடிகள் நோய் பரவுவதற்குக் காரணமாக அமைகின்றன. இலையழுகல் அறிகுறிகளை உடைய வெற்றிலைகளைச் சேகரித்து வெற்றிலைக் கொடிக்காலில் உள்ள கிடங்குகளிலோ பட்டங்களின் மேலோ சேர்க்காமல் அப்புறப்படுத்தி எரித்துவிடுதல் நலம் பயக்கும். ஏனென்றால், இவ்வழுகல் உள்ள வெற்றிலைகளில்தான் நோய் உண்டாவதற்குக் காரணமான இனக்கலப்பு வித்துக்களான ஊஸ்போர்கள் உற்பத்தியாகின்றன.

தமிழகத்தில் பச்சைக்கொடி, கர்ப்பூரிக்கொடி ஆகிய இரண்டு வெற்றிலை ரகங்கள் பொதுவாகப் பயிரிடப்படுகின்றன. இவற்றைப் பல பகுதிகளில் பல பெயர்களில் அழைக்கிறார்கள். இவ்விரு ரகங்கள் வாடல் நோயினால் மிகவும் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன. வெற்றிலையில் நோய் எதிர்ப்புத்திறன் வாய்ந்த ரகங்கள் இதுவரை காணப்படவில்லை.

—ஆ. வெங்கட்ராமன்,
கோ. அர்ச்சுனன்,
டாக்டர் து.கா. கந்தசாமி,
தாவர நோய் இயல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,

**வீட்டு உபயோக மின்சாரச் சாதனங்கள் தரக்கட்டுப்பாட்டுச் சட்டம்—1978**

தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத்துறை இயக்குநரால் வீட்டு உபயோக மின்சாரச் சாதனங்கள் தரக்கட்டுப்பாட்டுச் சட்டம் 1978 நடைமுறைப் படுத்தப்படுகிறது.

கேபிள்கள் மற்றும் மின்சாரம் உபகரணங்கள் தயாரிப்போரும், விற்பனையாளர்களும் தங்கள் நிறுவனங்களைத் தொழில் வணிகத்துறை இயக்குனர் அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்வதுடன், மற்றய விவரங்களுக்குத் தொழில் வணிகத்துறை இயக்குனர், அலுவலகம் அல்லது, மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர், அல்லது உதவித் தொழில் வணிக இயக்குநர் ஆகியோருக்குக் குறிப்பிட்டுள்ள மனுவில் விண்ணப்பிக்க வேண்டும்.

# பருத்தியின் சத்துத் தேவைகள்



இந்தியாவில் பயிராகும் முக்கியமான பணப்பயிர்களில் பருத்தியும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டுதோறும் 3.5 இலட்சம் எக்டர் நிலத்தில் பருத்தி பயிர் செய்யப்படுகிறது. இது நமது நாட்டில் பயிராகும் மொத்தப் பரப்பில் சுமார் 5 சதமாகும். இதிலிருந்து நான்கு இலட்சம் பேல்கள் பஞ்சு ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகிறது. பஞ்சாப், அரியானா மாநிலங்களுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் அதிக பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கு இடையூறாகவுள்ள காரணங்கள் பல, மண்வளம், நீர்வளம், சாகுபடி முறை, பூச்சி, நோய்ப் பாதுகாப்பு போன்றவை பருத்தி உற்பத்தியை வெகுவாகப் பாதிக்கின்றன. இத்துடன் தேவையான ஊட்டகங்களை சரிவர அளிக்காததும் ஒரு காரணமாக அமைகிறது.

தீவிர சாகுபடி முறைகளால் இக்குறைபாடுகள் பரவலாகக் காணப்படுகிறது. இது சம்பந்தமாகப் பல்வேறு வினாக்களை விவசாயிகள் பல்கலைக்கழகத்திற்கு அனுப்புகிறார்கள். ஆகவே பருத்தியின் சத்துத் தேவைகள் என்ன அவற்றை எவ்வாறு அளிப்பது, குறைபாடுகள் தோன்றினால் எவ்வாறு கண்டறிவது போன்ற விவரங்களை விவசாயப் பெருங்குடி மக்கள் அறிந்து கொள்ளுதல் அவசியம்.

## தழைச்சத்து (Nitrogen):

தழைச்சத்து மற்ற எல்லா சத்துப்பொருள்களையும் விட அதிகமாகப் பருத்திப் பயிருக்குத் தேவைப்படுகிறது. பருத்திச் செடியின் மொத்த காய்ந்த எடையில் 1.68 சதம் தழைச்சத்தாகும். ஒரு எக்டர் பருத்திப் பயிர் சுமார் 185 கிலோ தழைச்சத்தை நிலத்திலிருந்து எடுத்துக் கொள்ளுகிறது. இறைவைப் பயிரில் மொத்த தழைச்சத்தின் தேவையில் 20 சதம் பூக்கும் காலம் வரையிலும், 26 சதம் அடுத்த இரண்டு வாரங்கள் வரையிலும், 43 சதம் காய் பிடிக்கும் காலத்திலும், மீதி 11 சதம் காய் வெடிக்கும் காலத்திலும் தேவைப்படுகிறது.

தழைச்சத்து நிலத்திலிருந்து மிக எளிதாகக் கரைந்து சென்றுவிடுவதால், இச்சத்தின் குறைவுக்கான அறிகுறிகள் பொதுவாக அதிகமாகத் தோன்ற வாய்ப்புண்டு. இது புரதச்சத்தில் ஒரு முக்கியமான பகுதியாகும். இலைகளின் பச்சயத்தில் ஒரு பகுதியாக இருப்பதன் மூலம் மாவுச் சத்துக்களின் உற்பத்திக்கு மிகவும் உதவியாக இருக்கிறது.

எம். தங்கராஜ்





தழைச்சத்துக் குறையினால் இலைகள் சிறுத்தும், இளம் மஞ்சள் கலந்த பச்சை நிறமாகவும் தோன்றும். இலைகளிலுள்ள பச்சயம் குறைவதினால் ஒளிச்சேர்க்கை குறைந்து, செடிகள் வளர்ச்சி குன்றிக் காணப்படும். இக்குறை அறிகுறிகள் முதலில் செடியின் அடிப்பாகத்திலுள்ள இலைகளில் தோன்றி பின் மேல் பாகத்தில் தோன்றும். தழைச்சத்து குறைவு மிகவும் அதிகமாக இருக்கும்போது இலைகள் சிவப்பு நிறமாகத் தோன்றும். முடிவில் இலைகள் காய்ந்து உதிர்ந்து விடும். காய்பிடிக்கும் தருணத்தில் தழைச்சத்துக் குறைவு தோன்றினால், சப்பைகள், பூக்கள், பிஞ்சுகள் அதிகமாக உதிரும். காய்கள் சிறுத்தும், குறைவாகவும் காணப்படும். இதனால் பஞ்சு மகசூல் குறைவதுடன் அவற்றின் தரமும் குறைகிறது.

தழைச்சத்துக் குறைவு பொதுவாக மணற்பாங்கான நிலங்களில் அதிகமாகத் தோன்றும். அதிகமாக மழை பெய்யும் காலத்திலும், இக்குறைபாடு தோன்ற வாய்ப்புண்டு. குறைவு அறிகுறிகள் தோன்றும்போது நிலத்திற்கு மேலுரமாகப் போதிய உரம் அளிப்பதன் மூலமோ அல்லது 1.0—2.0 சதம் யூரியா கரைசலை தெளிப்பதன் மூலமோ கட்டுப்படுத்தலாம். அதிகமான தழைச்சத்து செடியின் வளர்ச்சியை அதிகமாக்கி மகசூலைக் குறைக்கும். மேலும், காய் வெடித்தலைத் தாமதப்படுத்தும். மண்ணின் வளம், தன்மை, ஈரம் முன்பு செய்யப்பட்ட பயிர் ஆகியவற்றை மனத்திற்கொண்டு இட வேண்டிய தழைச்சத்தை முடிவு செய்வது சாலச் சிறந்ததாகும்.

### மணிச்சத்து (Phosphorus):

இது தழைச்சத்தை விட குறைந்த அளவிலேயே தேவைப்பட்டாலும் நல்ல மகசூல் பெருகுவதற்குத் தகுந்த அளவு மணிச்சத்து இடுவது மிக அவசியம். செடியின் மொத்த காய்ந்த எடையில் 0.35 சதம் மணிச்சத்தாகும். ஒரு எக்டர் நிலத்திலிருந்து சுமார் 45 கிலோ மணிச்சத்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. மணிச்சத்து வேர் மண்டலத்தின் வளர்ச்சிக்கு உதவுவதன் மூலம் செடிகளின் வளர்ச்சியை ஊக்குவித்து, அறுவடைக் காலத்தைத் துரிதப்படுத்துகிறது. இது செடிகளின் ஒளிச்சேர்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானது. மேலும், மாவுப்பொருள்களின் தயாரிப்பு, உபயோகம் ஆகிய இரண்டு செயல்களுக்கும் தேவையாகிறது. "சைட்டோபிளாசம்" என்னும் உயிர்ப்



பொருள்களின் ஒரு பகுதியான மணிச்சத்து, திசுக்களின் வளர்ச்சி பாரம்பரிய குணங்களை ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கு எடுத்துச்செல்வது ஆகியவற்றைச் செய்கிறது. செடி பூத்தலையும் விதை உருவாவதையும் தூண்டுகிறது.

மணிச்சத்து தேவையான அளவு கிடைக்காதபோது இலைகள் சிறுத்தும், கரும்பச்சை நிறமாகவும் தோன்றும். இவ்வறிகுறிகள் செடிகளின் அடிப்பாகத்திலுள்ள இலைகளில் முதலில் தோன்றும். பின் மேலே உள்ள இலைகளில் தோன்ற ஆரம்பிக்கும். செடிகளின் கிளைகளின் எண்ணிக்கை குறைந்து செடிகள் குட்டையாகத் தோன்றும். காய்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து மகசூல் குறையும். செடிகள் பூக்கும் காலம் காய் பிடிக்கும் காலம், காய் வெடிக்கும் காலம் ஆகியவை தாமதப்படுத்தப்படும்.

மணிச்சத்துக் குறைபாடு அமிலத்தன்மையுள்ள நிலங்களில் பெரும்பாலும் காணப்படும். நிலத்தில் போதிய அளவு இருந்தபோதிலும், அல்லது எவ்வளவு மணிச்சத்து இட்டாலும் அவை செடிகளுக்குப் போதிய அளவு கிடைப்பதில்லை. அமிலத்தன்மையுள்ள நிலங்களுக்கு ஜிப்சம் இடுவதன் மூலம் இப்பிரச்சினையைப் போக்கலாம்.

### சாம்பல் சத்து (Potassium):

பருத்திக்குச் சாம்பல் சத்து மூன்றாவது முக்கிய இடத்தை வகிக்கிறது. பருத்திச் செடியின் மொத்த காய்ந்த எடையில் 2.07 சதம் சாம்பல் சத்தாகும். ஒரு எக்டேர் பருத்திப் பயிர் சுமார் 215 கிலோ சாம்பல் சத்தை நிலத்திலிருந்து எடுத்துக் கொள்ளுகிறது. சுண்ணாம்புச் சத்துடன் இணைந்து பஞ்சு உற்பத்திக்கு உதவுகிறது. மேலும், சர்க்கரை, மாவு சத்துக்கள் செடியின் ஒரு பகுதியிலிருந்து மற்ற பகுதிகளுக்குச் செல்லப் பெரிதும் உதவுகிறது. திசுக்களின் வளர்ச்சியையும், பெருக்கத்தையும் ஊக்குவிக்கிறது. நச்சுத் தன்மையுள்ள அமிலங்களை மாற்றுகிறது. விதைகளின் எண்ணெய் அளவை அதிகரிக்கிறது.

சாம்பல் சத்துக்குறைவினால் உண்டாகும் நோயிற்குப் 'பருத்தி துரு நோய்' (Cotton Rust) என்று அழைக்கப்படுகிறது. முதிர்ந்த இலைகளில் லேசான மஞ்சள் கலந்த வெண் புள்ளிகள் தோன்றி பின் இலைகள் வெளிர் மஞ்சள் கலந்த பச்சை நிறமாக மாறுகிறது. லேசான மஞ்சள் புள்ளிகள் இலை நரம்புகளிடையே காணப்படும் இப்புள்ளிகளின் மத்தியில் காய்ந்து இலைகளின் ஓரங்களும், நுனியும், காய்ந்து தோன்றும். கடைசியாக சிவப்பு கலந்த பழுப்பு நிறமாக மாறி காய்ந்து விழுந்து விடும். செடியின் தண்டுகள் நன்கு வளர்ச்சியடையாமல் குட்டையாகத் தோன்றும். காய்கள் முழு வளர்ச்சியடையாமல் முழுமையாக நன்கு மலர்ந்து வெடிக்காது. இதனால் மகசூல் குறைவதுடன் பஞ்சின் தரமும் குறையும்.

சாம்பல் சத்துக்குறைவு பொதுவாக நம் தமிழ்நாட்டு நிலங்களில் தோன்றுவதில்லை. சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள நிலங்களில் இக்குறைவு அறிகுறிகள் தோன்றக்கூடும்.

### சுண்ணாம்புச் சத்து (Calcium):

பருத்தியிச் செடியின் மொத்த காய்ந்த எடையில் மிக அதிகமான அளவு அதாவது 2.24 சதம் சுண்ணாம்புச் சத்தாகும். ஒரு எக்டேர் நிலப்பரப்பிலிருந்து பருத்திச் செடிகள் சுமார் 100 கிலோ சுண்ணாம்புச் சத்தை எடுத்துக் கொள்ளுகின்றன. இருந்தபோதிலும், மண்ணிலேயே போதிய அளவு இருப்பதாலும், நாம் நிலத்திற்கு இடும் மற்ற உரங்களில் சுண்ணாம்புச் சத்து இருப்பதாலும் இக்குறைபாடு பொதுவாகத் தோன்றுவதில்லை.

சுண்ணாம்புச் சத்து மண்ணின் அமிலத் தன்மையைக் குறைத்து தழைச்சத்து, மணிச்சத்து, கந்தகம், மக்னீசியம் போன்ற பேரூட்டகங்கள் செடிகளுக்கு எளிதில்

கிடைக்க வகை செய்கிறது. சில வகை நுதிகள் (Enzymes) சரிவர இயங்குவதற்கு உதவுவதுடன், திசுக்களின் சுவர்களுக்கு உறுதி அளிக்கிறது. தண்டு, வேர் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அவசியமாகிறது. சுண்ணாம்புச் சத்து குறைவாக உள்ளபோது இலைக் காம்புகள் காய்ந்து காணப்படும்.

### மக்கினீசியம் (Magnesium):

பருத்திக்கு மக்கினீசியம் ஓர் இன்றியமையாத உணவுப் பொருளாகும். பச்சயத்தின் கருப் பொருளாக இருப்பதன் மூலம் செடிகளின் ஒளிச்சேர்க்கைக்கு இன்றியமையாததாகிறது. மணற்பாங்கான நிலங்களில் மக்கினீசியம் குறைவு காணப்படும். அதிகமான சாம்பல் சத்து மண்ணில் இருப்பின், மக்கினீசியம் பருத்திக்குக் கிடைப்பது தடைபடுகிறது.

மக்கினீசியம் குறைவு ஏற்படும்போது முதலில் செடிகளின் அடிப்பாகத்திலுள்ள இலைகள் சிவப்பு நிறமாக மாறுகின்றன. பின், காய்ந்து உதிர்கின்றன. இது ''இலை சிவப்பு'' நோய் என்று அழைக்கப்படுகிறது. இந்நோய் செடிகளின் ஆரம்ப காலத்தில் தோன்றினால் மகசூல் குறைவுடன் பஞ்சின் தரமும் குறைகிறது. இதைக் கட்டுப்படுத்த ஓர் எக்டருக்கு 20.25 கிலோ மக்கினீசியம் சல்பேட்டை நிலத்திற்கு இடுவதன் மூலமோ அல்லது 5 சதம் மக்கினீசியம் சல்பேட்டு கரைசலை ஒரு சதம் யூரியா கரைசலுடன் நோய் தோன்றியவுடன் செடிகளுக்கு தெளிப்பதன் மூலமோ கட்டுப்படுத்தலாம்.

### கந்தகம் (Sulphur):

பருத்திக்குக் கந்தகம் பெரும் அளவில் தேவைப்படுகிறது. பருத்தி விதைகளில் இது ஒரு முக்கியப் பொருளாகக் காணப்படுகிறது. கந்தகம் பச்சயம் உற்பத்திக்கு அவசியமாவதன் மூலம் ஒளிச்சேர்க்கைக்கு இன்றியமையாததாகிறது.

பொதுவாகக் கந்தகக் குறைவு பருத்திச் செடிகளில் காணப்படுவதில்லை. செடிகளுக்குத் தேவையான அளவு கந்தகம் நாம் இடும் அமோனியம் சல்பேட்டு போன்ற கந்தகம் கலந்த மற்ற உரங்களின் மூலமும், மழை நீரின் வழியாகவும் கிடைக்கிறது. கந்தகம் பற்றுக்குறை தோன்றும்போது துளிர் இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாகவும், அவற்றின் நரம்புகள் பச்சை நிறமாகவும் காணப்படும். முற்றிய இலைகளில் எந்தவிதமான மாறுதலும் தோன்றாது. செடிகளின் பொதுவான வளர்ச்சி குன்றிக் காணப்படும். காய்கள் சிறுத்து மகசூல் குறைய ஏதுவாகும்.

### நுண்ணூட்டகங்கள் (Micro-nutrients):

மற்ற பயிர்களைப் போன்றே பருத்தியின் வளர்ச்சிக்கும். நல்ல மகசூலுக்கும், நுண்ணூட்டச் சத்துக்கள் தேவைப்படுகின்றன. இச்சத்துக்களின் அளவு செடிகளில் மிகவும் குறைந்தால் அல்லது தேவைக்கு மேல் கூடினால் மகசூல் பெரும் அளவில் பாதிக்கப்படுகிறது.

வெண்காரம் (Boron) மாங்கனீஸ் (Manganese) துத்தம் (Zinc) ஆகியவை பருத்திக்குத் தேவையான மிக முக்கியமான நுண்ணூட்டகங்களாகும்.

திசுக்களின் வளர்ச்சிக்கும், செடிகளின் இன விருத்திக்கும் வெண்காரம் தேவையாகிறது. இதன் அளவு குறைந்தால் செடிகள் வளர்ச்சி குன்றி சப்பைகள், பூக்கள், பிஞ்சுகள் அதிக அளவில் உதிரும். நுனி இலைகள் சிறுத்து மஞ்சள் கலந்த பச்சை நிறம் அடைகின்றன.

செடிகளின் கீழ்ப்பாகத்திலுள்ள முதிர்ந்த இலைகள் தடித்துக் காணப்படும். இலைக்காம்புகள் வளைந்து நடுப்பாகத்தில் அழுகல் தோன்றும். பூவிதழின் கீழ்ப் பாகத்தில் கருமை படரும். வெண்காரத்தின் அளவு மிகவும் குறையும்போது சப்பைகள் மற்றும் பிஞ்சுகளின் அடிப்பாகத்திலுள்ள திசுச்சுவர்கள் உடைந்து தேன் போன்ற திரவம் வெளிப்படுகிறது. இதனால் சப்பைகளும் பிஞ்சுகளும் காய்ந்து உதிர்கின்றன. மேலும், காய்கள் சிறுத்தும் வளைந்து காணப்படும். காய்களின் நடுவில் அழுகல் தோன்றும். இதனால் மகசூல் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. பொதுவாக போரான் குறைவு உவர்ப்பு நிலங்களில் பரவலாகத் தோன்றும். ஓர் எக்டருக்கு 2.4 கிலோ வீதம் போரக்ஸ் இடுவதன் மூலமோ அல்லது 0.02—0.05 சதம் போரிக் அமிலக் கரைசலைத் தெளிப்பதன் மூலமோ இக்குறையை நீக்கலாம்.

### மாங்கனீஸ் (Manganese):

மாங்கனீஸ் இலைகளின் பச்சயம் தயாரித்தலில் முக்கிய பங்கு வகிக்கிறது. பருத்தியில் மாங்கனீஸ், அளவு குறைந்தால் இலைகள் மஞ்சள் அல்லது சிவப்பு கலந்த பழுப்பு நிறமாக மாறுகிறது. இலை நரம்புகள் பச்சை நிறத்தில் இருக்கும். மாங்கனீஸ் அளவு அதிகமாகும். இலைகள் சுருண்டு காணப்படும்.

பொதுவாக மாங்கனீஸ் சத்துக் குறைவு உவர்ப்பு நிலங்களில் காணப்படும். ஒரு எக்டருக்கு 16.22 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டை அடியுரமாக இடுவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என்று அறியப்பட்டுள்ளது.

### துத்தம் (Zinc):

அதிகமான மணிச்சத்து மற்றும் சுண்ணாம்புச் சத்து உள்ள நிலங்களில் துத்தம் பற்றாக்குறை ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், கோயமுத்தூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் துத்தநாகம் குறைவாக உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

துத்தம் குறைவு ஏற்படும்போது இலைகள் மஞ்சளாகவும், மிருதுத் தன்மையை இழந்து தடித்துத் தோன்றும், இலைகளின் ஓரங்கள் மேற்பக்கமாகச் சுருண்டு காணப்படும். இக்குறைபாட்டை நீக்க துத்தநாக சல்பேட்டை நிலத்திற்கு இடுவதன் மூலமோ அல்லது 0.01—0.05 சதம் துத்தநாக சல்பேட்டு உப்பு கரைசலை தெளிப்பதன் மூலம் மேற்கூறிய சத்துப்பொருட்கள் அல்லாமல் செம்பு, இரும்பு, மாலிபுடீனம், குளோரின் ஆகிய நுண்ணூட்டகங்களும் பருத்தியின் வளர்ச்சிக்குத் தேவை என்று அறியப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் பருத்தியின் வளர்ச்சியில் இவற்றின் முழுமையான பங்கு சரியாக அறியப்படவில்லை மேலும், இவ்வூட்டகங்களில் குறைபாடு பொதுவாகக் காணப்படுவதில்லை.

இதுவரை பருத்தியின் பொதுவான சத்துத் தேவைகள் பயிரிடும் ரகம், மண்வளம், சீதோஷ்ண நிலை ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும். இவற்றைக் கருத்திற் கொண்டு பரிந்துரைகளுக்குத் தக்கவாறு உரமிடல் வேண்டும்.

நுண்ணூட்டக உரமிடுதலில் அதிக கவனம் எடுத்துக் கொள்ளுதல் அவசியம். குறைவு அறிகுறிகளை அல்லது மண் மாதிரி முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு தேவையான நுண்ணூட்டகத்தை தேவையான அளவு தகுந்த முறையில் போட வேண்டும். தேவையான நுண்ணூட்டகங்களை அதிக அளவில் இடுதல் தீமை விளைவிக்கும். எவ்வகை நுண்ணூட்டகத்தை, எவ்வகை மண்ணிற்கு, எப்போது இட வேண்டும் போன்ற அய்யங்களுக்கும் மற்றும் பருத்தியின் சத்து தேவைகள் பற்றி எல்லாவிதமான அய்யப்பாடுகளுக்கும் பல்கலைக் கழகத்தின் ஆலோசனையைப் பெறலாம்.

# ஆலயம் ஆற்றும் அரும்பணிகள்



# இறவாப் பனை மறவாப் புலி

தமிழ்நாட்டில் எண்ணற்ற திருக்கோயில்கள் உள்ளன. அவை சிற்பக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாய் மட்டுமல்லாமல், பண்டைய கலை, நாகரிகம், பண்பாடு முதலானவற்றைப் பறைசாற்றுவதாகவும் அமைந்துள்ளன. அதோடு ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதிலும் அவை தம்மை ஈடுபடுத்தி வருகின்றன.

அவை நூலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள், கருணை இல்லங்கள், திருமண மண்டபங்கள், விடுதிகள் முதலானவற்றை நடத்தி மக்கள் பணியை மனமுவந்து செய்து வருகின்றன.

ஆண்டவன் அருளை வேண்டி ஆலயம் செல்லும் அன்பர்கள், அங்கே காணக்கிடைக்கும் கல்வெட்டுகள், சிற்பச் சிறப்புகள், ஆலயப் பெருமைகள் முதலானவற்றையும் அறிந்து கொள்வதில் பயன் உண்டு; சுவையும் உண்டு.

அந்த வகையில், கோயம்பத்தூர் மாவட்டத்தில் பேரூரில் அமைந்துள்ள அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில் பற்றிச் சற்றுத் தெரிந்துகொள்வோமா?

கோவை நகரிலிருந்து மேற்கே 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இத்திருக்கோயில். உள்ளே நுழைந்ததுமே அங்குள்ள சிற்ப அழகில் மயங்கி விடுகிறோம்.

கலை வேலைப்பாடுமிக்க அழகிய கல் தூண்களைக் காணக் காணக் கண்கோடி வேண்டும்! சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழும், கனகசபையின் விமானமும், அங்கே உள்ள தாமரை மலரும், கல்லாலான சங்கிலிகளும் நம்மை மெய்மறக்கவைக்கின்றன. புகழ்மிக்க இக்கனகசபை 17ஆம் நூற்றாண்டில் மதுரை அழகாத்திரி நாயக்கரால் கட்டப்பட்டதாகும்.

இராசேந்திரன் மன்னர் காலம் முதல் பல மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டது இத்திருக்கோயில். முன்மண்டபம், இராயகோபுரம், கனகசபை ஆகியவை 14ஆம் நூற்றாண்டில் அழகாத்திரி நாயக்கர் என்பவரால் கட்டப்பட்டது. காஞ்சிமாநதி என்னும் நொய்யல் நதிக் கரையில் அமைந்துள்ள இவ்வாலயத்தின் இறைவன் சுயம்பு மூர்த்தி.



சோழர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் சுவாமி கோவில் பிரகாரத்தில் உள்ளன. இதனைத் தொல்பொருள் துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

தொன்மை வாய்ந்த திருக்கோயிலின் கற்பகிருகத்தைக் கரிகால்சோழன் அமைத்ததாய்க் கூறுவர். ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் இவ்வாலயத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். எட்டாம் நூற்றாண்டில் ஒரு பாண்டிய மன்னன் வைணவ ஆலயம் ஒன்றை நிறுவியதாகத் தேவாரம் எடுத்துக் காட்டுகிறது. அருணகிரி நாதரும் இத்திருத்தலத்தை பாடியுள்ளார். பதினொன்று முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுகள் வரை வாழ்ந்த கொங்குச் சோழர்கள் அர்த்த மண்டபத்தையும், மகாமண்டபத்தையும் கட்டினர். பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் ஹொய்சாலர்களும் விஜயநகர மன்னர்களும் இவ்வாலயத்திற்கு மானியங்கள் வழங்கியுள்ளார்கள்.

பேரூர், ரோமானியர் காலத்திலேயே அந்நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தது என்பதை அக்காலத்திய நாணயங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து அறிகின்றோம்,. சில நூற்றாண்டுகட்கு முன்னர் வடிக்கப்பட்ட

சிற்பங்கள், ஆயிரம் ஆண்டுகட்கு முன் இங்கு வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்களைப் படம் பிடித்துக் காட்டுவனவாக உள்ளன. 'பேரூர்ப் புராணம்' என்னும் நூல் அக்காலத்தில் இங்கு வாழ்ந்த கச்சியப்ப முனிவரால் இயற்றப்பட்ட அருமையான தலவரலாற்று நூலாகும்.

இவ்வூரின் வடக்கிலும் தெற்கிலும் வடகைலாயம், தென்கைலாயம் எனும் ஆலயங்கள் உள்ளன என்றும், அழிவே இல்லாத 'இறவாப் பனையும், பிறப்பேயில்லாத 'பிறவாப் புளி'யும், புண்ணிய தீர்த்தம் சுரக்கும் பிரம்ம தீர்த்தக் கிணறும் இத்தலத்தின் சிறப்பினை எடுத்துக் கூறும்.



இவ்வாலயத்தின் அழகிய தெப்பக்குளம் பதினாறு வளைவுகளையுடையது. சிறியதும், பெரியதுமான இரதங்கள் சிற்ப வேலைப்பாடுகள் மிக்கதாகும்.

மார்ச்-ஏப்ரலில் வரும் பங்குனி உத்திரமும், டிசம்பர்-ஜனவரியில் வரும் ஆருத்ரா தரிசனமும் இங்குக் கொண்டாடப்படும் மிக முக்கியமான திருவிழாக்களாகும். இங்கு நடைபெறும் இந்திர விமானத் தெப்பத் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாகும்.

இத்திருக்கோயிலில் பெண் குழந்தைகளுக்கான ''கருணை இல்லம்'' ஒன்று 3.6.1975 முதல் நடைபெற்று வருகிறது. இவ்வில்லத்தில் 41 சிறுமிகள் உள்ளனர். கௌமாரமடாலயத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இது உள்ளது. ஓராண்டில் கருணை இல்லத்திற்கு ஆகும் செலவு ரூ.25,730 ஆகும். ஆலயத்திற்கு உபயமாக வந்துள்ள உபரி புடவைகளை, கருணை இல்லச் சிறுமிகளுக்குப் பாவாடை, சட்டையாகத் தைத்துக் கொடுக்கப்படுகிறது.

—பி.வி.ஜி.

# வலிப்பு நோய் வரும்போது..

—டாக்டர் என். தெய்வநாயகம்

வலிப்புநோய் குழந்தைகளைப் பாதிக்கும் மூளை நோய்களுள் முக்கியமான தொன்று. சுமாராக நூற்றுக்கு ஆறு குழந்தைகள் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர். இது குணப்படுத்த முடியாத நோய் அல்ல. மருத்துவரின் ஆலோசனைகளைக் கேட்டு, தொடர்ந்து இடைவிடாது மருந்துகளைக் கொடுத்து வந்தால் இந்நோயைக் குணப்படுத்த முடியும்.

வலிப்பு நோய் அதிகரிக்க முக்கியமான காரணம் திடீரென மருந்துகளை நிறுத்துவதுதான். எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் மருந்துகளை மருத்துவரின் அனுமதி இன்றி நிறுத்தக் கூடாது. மருந்துகளை முன்னதாகவே வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

**வலிப்புநோய் வரும்போது......**

1. அடிபடாமல் இருக்க முடிந்தால் தரையில் படுக்க வேண்டும்.

2. தலையை ஒருபுறம் சாய்த்து வைத்து வாயிலிருந்து வரும் உமிழ் நீரைத் துடைக்க வேண்டும்.

3. கழுத்தை இறுக்கும் ஆடைகளைத் தளர்த்தி நன்கு சுவாசிக்க வழி செய்ய வேண்டும்.

4. மயக்கநிலையில் இருக்கும்போது எந்தவிதமான ஆகாரமோ தண்ணீரோ கொடுக்கக்கூடாது.

**கவனிக்க வேண்டியவை:**

இந்நோய் மற்ற நோய்களைப் போன்றதே! இந்நோய் உள்ள குழந்தையை அதிகமாகக் கவனிப்பதோ, வீட்டில் உள்ள மற்ற குழந்தைகளைவிட அதிகமான தனிக்கவனம் செலுத்துவதோ கூடாது. இந்நோயினால் மூளை வளர்ச்சியோ, படிப்போ உடல் நலமோ குன்றாது.

இந்நோய் உள்ள குழந்தைகளுக்குக் கடினமான தலையணையை உபயோகிக்க வேண்டும். இலவம் பஞ்சு அல்லது நுரை மெத்தையை உபயோகித்தால், வலிப்பு வரும்போது முகம் அதில் புதைய நேரிட்டால் மூச்சு விடமுடியாமல் திணறி இறந்து போக வாய்ப்பு உள்ளது.

மற்ற குழந்தைகளைப் போல் இக் குழந்தைகளையும் எல்லோரும் படிக்கும் பள்ளியில்தான் படிக்க வைக்க வேண்டும். தனக்கோ அல்லது பிறருக்கோ ஆபத்து விளைவிக்கும் செயல்களில் ஈடுபடக்கூடாது.

உதாரணமாக சைக்கிள் விடுவது, நீந்துவது போன்றவை.

பொதுவாக இந்நோய்களுக்குத் தரப்படும் மருந்து, தூக்க மருந்து மூளையைக் கெடுத்துவிடும், அறிவு மழுங்கிவிடும் என்ற கருத்து பரவலாக உள்ளது. இது உண்மையன்று. முற்றிலும் தவறான கருத்தாகும். மருந்தை நீண்ட நாட்களுக்கு, அதாவது 3 அல்லது 4 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து தரவேண்டி இருக்கும்.

இந்நோய்க்குப் பல காரணங்கள் உண்டு.

இவைகளுள் ஒன்று காய்ச்சலினால் வரும் (மூளை நோய்க் காய்ச்சல் அல்லாத) வலிப்பு நோயாகும்.

இது ஆறு மாதத்திலிருந்து மூன்று வயது வரை உள்ள குழந்தைகளைப் பெரும்பான்மையாகப் பாதிக்கிறது.

**தடுப்பது எப்படி?**

காய்ச்சலுக்கு வேண்டிய மருந்தை மருத்துவரின் முன் அனுமதியோடு வாங்கிக் கையிருப்பாக வைத்திருக்க வேண்டும்.

காய்ச்சல் வந்ததும் தேவையான அளவு கொடுக்க வேண்டும்.

அரைமணி அல்லது ஒரு மணி நேரத்திற்குள் காய்ச்சல் இறங்காவிட்டால் துணியைக் குளிர்ந்த நீரில் நனைத்துப் பிழிந்து உடல் முழுவதும் போட வேண்டும். இது காய்ச்சலைத் தணிக்கும்.

காய்ச்சலுக்குக் காரணமான நோயைக் குணப்படுத்த மருத்துவரை உடனே அணுக வேண்டும்.

# படமும் செய்தியும்



28.2.79 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் கால்நடைக் கண்காட்சியினைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பார்வையிடுகிறார்கள்.



28.2.79 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இலப் பட்டாக்களை வழங்கினார்கள். சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் உடன் உள்ளார்கள்.

28.2.79 அன்று
புதுக்கோட்டை மாவட்டத்தில்
மாண்புமிகு வருவாய்த்துறை
அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள்
கன்றுகள் வாங்கிட உதவித் தொகை வழங்குகிறார்.





28.2.79 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற கல்வி நிலையத்திற்கு மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பரிசு வழங்குகிறாம்.



சென்னை சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் மார்ச் 3, 4 ஆகிய நாட்களில் நடை பெற்ற உணவு வகைக் கண்காட்சிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்
திரு எஸ். இராகவானந்தம்
பரிசுகளை வழங்குகிறார்.

4.3.79 அன்று சென்னை நேரு விளையாட்டு அரங்கில்—மாநில அளவில் நடைபெற்ற இளநிலையாளர் கேரம் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன், பரிசு வழங்குகிறார்.



அமெரிக்காவில் இருந்துவந்த இளம் அரசியல் தலைவர்கள் 19-2-1979 அன்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன் அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்கள்.



## (16-2-79 முதல் 26-2-79 முடிய)

### 16—2—'79

* சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு அதிகம் வழங்க, சட்டமன்றத்தில் மசோதா ஒன்றை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோம சுந்தரம் அவர்கள் தாக்கல் செய்தார்.

* தமிழ்நாடு சட்டமன்ற நுழைவுச் சீட்டு தமிழில் அச்சடிக்கப் பட்டுள்ளது. பார்வையாளர்கள் சட்டசபை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கான அனுமதிச் சீட்டு இதுவரை ஆங்கிலத்தில் இருந்து வந்தது. அந்த முறையை அரசு மாற்றித் தமிழில் அனுமதிச் சீட்டுக்களை அச்சடித்துள்ளது.

### 17—2—79

* தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழு ஏனைய பரிந்துரைகளுடன் கீழ்க்கண்ட பரிந்துரைகளையும் செய்துள்ளது.

பெரியாரின் முழு வாழ்க்கை வரலாறு, வல்லுநர் குழு ஒன்றின் மூலம் உருவாக்கப்பெற்று, நிறைவு விழாவின் போது வெளியிடப்பட வேண்டும்.

சிறுவர்களும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில், பெரியாரின் வாழ்க்கை வரலாற்றினை, வரைகோடு படங்கள் மூலம் விளக்கிக் காட்டும் சிறு நூல் ஒன்று வெளியிடப்படவேண்டும்.

பெரியாரின் சீரிய கருத்துக்களைப் பல்வேறு தலைப்புக்களில் தொகுத்துப் ''பெரியாரின் பொன்மொழிகள்'' என்ற பெயரில் பெரியதொரு நூலாக வெளியிட வேண்டும்.

பெரியாருடைய வாழ்க்கையில் காணப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளையும் அவரது பொன்மொழிகளையும் கல்வெட்டுக்களாகச் செதுக்கி அவற்றை நினைவு மண்டபத்திலும், பொது இடங்களிலும் வைக்க வேண்டும்.

இந்த நான்கு பரிந்துரைகளையும் நிறைவேற்ற வல்லுநர் குழுவொன்றினை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அந்தக் குழுவில் உறுப்பினர்களாகப் பணியாற்ற நியமிக்கப்பட்டுள்ளவர்கள் விவரம் வருமாறு:

1. டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்-தலைவர்
2. திரு நெ.து. சுந்தரவடிவேலு-துணைத் தலைவர்
3. திரு எஸ்.வி. சிட்டிபாபு-உறுப்பினர்.
4. திரு ஏ. பி. சனார்த்தனம், எம்.பி. உறுப்பினர்.
5. டாக்டர் இரா. சனார்த்தனம், உறுப்பினர்.
6. பேராசிரியர் மா. நன்னன் - உறுப்பினர்
7. திருவாரூர் திரு கே. தங்கராசு-உறுப்பினர்
8. திரு இராசகோபாலன் - உறுப்பினர் (ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளர்)
9. திரு எஸ். நல்லரசு-செயலாளர். [ஆய்வு அலுவலர், பொது (செய்தி மக்கள் தொடர்பு) துறை.]



# அரசின் அறிவிப்புகள் - ஆக்கப்பணிகள்

குழு உறுப்பினர்கள் முதலில் அக்குழுவில் ஆறு மாதக் காலம் பணியாற்றுவர். குழுவின் தலைமையிடம் சென்னையாகும். இக்குழு, முதல் தரக் குழுவாகக் கருதப்படும்.

* * *

காஞ்சியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து வளர்ந்த இல்லம் தேசியமயமாக்கப்பட்டு, நினைவுச் சின்னமாக்கப்படும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## 18—2—79

அறிஞர் அண்ணாவின் கொள்கைகளை, நமது தேர்தல் வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம். ஒரு இலட்சம் பேருக்கு வேலை கொடுப்போம் என்று கூறிய நாம், ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்துள்ளோம் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 19—2—79

தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் மேலும் இடவசதிக்காக ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவில் கூடுதல் கட்டடம் கட்ட அரசு உத்தேசித்திருக்கிறது என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

## 20—2—79

தமிழ்நாட்டில் 2 ஆயிரம் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை படிக்கும் உடல் ஊனமுற்றக் குழந்தைகளுக்கு 'ஸ்காலர்ஷிப்' தருவது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது என் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி.டி சரசுவதி அவர்கள் தெரிவித்தார்.

விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பாபநாசம் பகுதி விவசாயிகளுக்கு ரூ. 18 இலட்சத்துக்கான உதவிகளை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வழங்கினார்.

## 21—2—79

திருச்சி மாவட்டம் கரூர் வட்டம் சின்ன முத்தூர் அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கே ரூ. 6 கோடி செலவில் அணை கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தினால், 10,000 ஏக்கர் நிலம் பாசன வசதியடையும். தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சேத்தியாத்தோப்பில் வெள்ளாற்றின் குறுக்கே 41 இலட்சம் செலவில் ஒரு புதிய பாலம் கட்டுவது பற்றிய திட்டம் இப்போது ஆய்வில் இருந்து வருகிறது என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

## 22—2—79

1977-78 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளும் 4 ஐ.பி.எஸ்., அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்துள்ளார்.

## 23—2—79

அரசு கொண்டு வந்துள்ள நில உச்ச வரம்பு திருத்தச் சட்டத்தின் மூலம் 80 ஆயிரம் ஏக்கர் உபரி நிலம் கிடைக்கும். அதை 40 ஆயிரம் பேருக்குக் கொடுக்கவிருக்கிறோம் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்துள்ளார்கள்.

## 24—2—79

தமிழ்நாட்டில் 70 கோடி ரூபாய் செலவில் 3200 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு திட்டம் தீட்டியுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ப.குழந்தைவேலு அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 25—2—79

தமிழ்நாட்டில் கடந்த அக்டோபர் மாதம் முதல் இந்தத் தேதி வரை (25.2.79) 30 ஆயிரத்து 839 மனைப் பட்டாக்களும் 29 ஆயிரத்து 707 நிலப் பட்டாக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்துள்ளார்.

## 26—2—79

ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கிராமங்களில் ஒரு இலட்சம் வீடுகளை ஏழைகளுக்காகக் கட்டுவதற்கான திட்டம் ஒன்றைத்தமிழக அரசு அனுமதித்துள்ளது. முதலில் நடப்பாண்டில் 10,000 வீடுகள் கட்டப்படும். திட்டம் முழுவதும் கூட்டுறவுகள் மூலமாக அமலாகும்.

சென்னையிலுள்ள சுற்றுலாப் பொருட்காட்சித் திடலை நிரந்தரப் பொருட்காட்சி இடமாக மாற்ற 'மாஸ்டர் பிளான்' ஒன்றை அரசு தயாரித்து வருகிறது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம் வீரப்பன் அவர்கள் கூறியுள்ளார்.

# விடுதலைக் கீதம் இசைத்த
# கவிக் குயில்



*(1979 பிப்ரவரி 13ஆம் நாள், கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் நூற்றாண்டு விழா அதையொட்டி இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.)*

**அ**ந்தப் பெண்ணுக்கு அப்போது 11 வயது! எண் கணிதத்தில் ஒரு கணக்கைப் போட முடியாமல் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தாள் அவள். அந்தக் கணக்கு சரியாக வரவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக ஒரு கவிதை மலர்ந்துவிட்டது. அவள் கவியுலகப் பாதையில் முதலடி எடுத்து வைத்தாள். 11 வயதில் கவிதை எழுதத் தொடங்கிய அந்தப் பெண் பின்னாளில் உலகம் புகழும் கவிஞராக, கவியரசியாக விளங்கினார். பள்ளிப் படிப்பு அதிகம் இல்லாமல் வீட்டிலேயே படித்து நிறைந்த ஆங்கில அறிவு பெற்று, 'ராயல் சொசைட்டி ஆஃப் லிட்டர்ரேச்சர்' என்னும் இங்கிலாந்து நாட்டின் இலக்கியக் கழகமே பாராட்டும் அளவிற்கு ஆங்கிலக் கவிதைகள் புனைந்து, இந்தியாவின் 'கவிக் குயிலாக' விளங்கிய அந்தப் பெண்தான் திருமதி சரோஜினி தேவி.

### இளமைக் காலம்

அகோரநாத் சட்டோபாத்யாயா சிறந்த விஞ்ஞானி; சிறந்த அறிஞர். அதுமட்டுமல்ல; பல மொழி கற்ற விற்பன்னர். கிரேக்கம், ஹிப்ரு, பிரெஞ்சு, ஜெர்மன், ருஷ்யம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற அகோரநாத் சட்டோபாத்யாயாவின் ஆங்கில அறிவு பரந்து விரிந்தது. அவர் மனைவி வரதசுந்தரி தேவி எளிமையே உருவானவர். வங்காள மொழிப் பாடல்களில் உள்ளத்தைப் பறிகொடுத்தவர். ஐதராபாத்தில் நிஜாம் நடத்திய கல்லூரியில் பணியாற்றிய அகோரநாத் சட்டோபாத்யாயா வரதசுந்தரி தேவி ஆகியோரின் திருமகளாக 1879ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி சரோஜினி தேவி பிறந்தார்.

### இலட்சியக் குடும்பம்

அவர் பிறந்த குடும்பமோ ஓர் இலட்சியக் குடும்பம்; கலைக் குடும்பம். தந்தை விஞ்ஞானி. சிறந்த அறிஞர். தாயோ வங்க மொழிப் பாடல்களில் ஆர்வம் உள்ளவர். ஒரு தம்பி முன்னாள் ஐதராபாத் சமஸ்தானத்தில் உயர் பதவியில் இருந்தவர். ஒரு தங்கை, மகளிர் கல்லூரி முதல்வராக லாகூரில் பணியாற்றிப் பெண் கல்விக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் மற்றொரு தங்கை நாட்டியத்தில் தேர்ச்சி பெற்ற சிறந்த கலைஞர். கடைசித் தம்பியும் தங்கையும் நாடு புகழ் நல்லுணர்வு பெற்றவர்கள். அரீந்திர நாத் என்னும் கடைசித் தம்பியே இன்று புகழ் பெற்று விளங்கும் அரீந்திரநாத் சட்டோபாத்யாயா. அரீந்திரநாத் சிறந்த கவிஞர்; கலைஞர்; நாடக ஆசிரியர். சுகாஸினி என்னும் கடைசித் தங்கையோ ஆழ்ந்த பொதுவுடைமைவாதி. அகோரநாத் வரத சுந்தரிதேவியின் எட்டுக் குழந்தைகளும் ஒவ்வொரு துறையில் புகழ் பெற்றவர்களாகப் பிறகு விளங்கினர்.

### பெண் கல்வி

சரோஜினிதேவியின் இளமைக் காலம் வீட்டிலேயே கழிந்தது; அன்று பெண் கல்வி முக்கியத்துவம் பெறாத காலம். 'பெண்ணடிமை தீரும் மட்டும் மண்ணடிமை தீராது' என்பதை உணர்ந்தவர் அகோரநாத் என்றாலும், அன்றைய சூழ்நிலையில் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. எனவே, தம் மக்களுக்குக் கல்வி போதிக்க வீட்டிலேயே ஏற்பாடு செய்தார்: வீட்டிலேயே சரோஜினிதேவி கல்வி பயின்றார். ஆங்கிலமும் பிரெஞ்சும் அவர் படிக்கத் தொடங்கினார். பின்னர் பாரசீகம் கற்றுக் கொண்டார்.

மகளை மெட்ரிகுலேஷன் தேர்வுக்கு அனுப்ப விரும்பினார் அகோரநாத். அதற்கு அப்போது ஐதராபாத்தில் வசதி இல்லை. **அதன் காரணமாக சரோஜினி தேவி சென்னைக்கு வந்தார். 12வது வயதில் அவர் மெட்ரிக் எழுதினார். முதல் வகுப்புப் பெற்றுச் சிறப்பாகத் தேறினார்.** தேர்வு எழுதியதோடு அவர் நின்றுவிட வில்லை. அவர் உள்ளத்தில் மறைந்திருந்த கவித் திறமை காரணமாக, ஆங்கிலக் கவிஞர்களின் அனைத்துக் கவிதைகளையும் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. படித்து முடித்தார். அப்போது அவருக்கு வயது 14. குறிப்பாக பிரௌனிங், ஷெல்லி, டென்னிஸன் ஆகிய ஆங்கிலக் கவிஞர்கள் அவரை மிகவும் கவர்ந்தவர்கள்.

### கவிதை மலர்

கவிதையில் உள்ளம் பறி கொடுத்த சரோஜினி தேவி கவிஞராக பரிணமித்து விட்டார். கணக்கிற்குப் பதிலாகக் கவிதை எழுதியவர் அல்லவா? அவருடைய 13ஆம் வயதில் மலர்ந்த கவிதை ''ஏரி மங்கை'' (தி லேடி ஆப் தி லேக்). இந்த ஆங்கிலக் கவிதை 1300 அடிகள் கொண்டது. சரோஜினிதேவி ஆறே நாட்களில் இதை எழுதி முடித்தார்.

அகோரநாத் சட்டோபாத்யாயா தம் மகள் அறிவிற் சிறந்தவளாக வளர்வதைக் கண்டார். மேற்படிப்பிற்கு இங்கிலாந்துக்கு அனுப்பினால் நல்ல பயன் கிடைக்கும் என்று அவர் நினைத்தார். காலம் கனிந்து வந்தது. இங்கிலாந்து செல்லப் போக்குவரத்துச் செலவுக்கு மன்னரின் உபகாரச் சம்பளமும் அவர் வழங்கினார். அன்னி பெசன்ட்டின் துணையோடு சரோஜினி தேவி இங்கிலாந்துக்குப் பயணமானார். இங்கிலாந்தில் மிஸ். மானிங் என்னும் அம்மையாரின் இல்லத்தில் தங்கி, வந்த பணியை சரோஜினி மேற்கொண்டார். சரோஜினியின் கவித்துவத்தைக் கண்டறிந்த எட்மண்ட் கோஸ் இங்குதான் அவருக்கு அறிமுகம் ஆனார்.

**மேனாட்டில் தேவி**

மேற்படிப்பிற்காக லண்டன் போய்ச் சேர்ந்த சரோஜினிக்கு, அவருடைய வயதுக்குறைவு காரணமாக உடனே கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. 'கிங்ஸ் காலேஜ்' என்னும் கல்லூரியில் நடைபெறும் வகுப்புக்களுக்குச் சென்று வந்தார். இரண்டு ஆண்டுகள் கழித்து கிர்ட்டன் கல்லூரியில் அவருக்கு இடம் கிடைத்துச் சேர்ந்தார். சரோஜினிதேவி லண்டனில் பட்டங்கள் பெறாமல் போயிருக்கலாம்; ஆனால் அங்கு அவர் சிறந்த கவிஞராக ஏற்றுக் கொள்ளப் பட்டு விட்டார். இங்கிலாந்தில் அவர் வாழ்ந்த மூன்று ஆண்டுகாலத்தில் மிகச் சிறந்த கவிதைகளை அவர் எழுதினார். 1896 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மூன்றாம் தேதி கையெழுத்துக் 'கொண்ட நீலத் தாமரை' (நீலாம்புஜம்) என்னும் கவிதைத் தொகுதி இவற்றுள் ஒன்று. இது ஒரு கையெழுத்துப் பிரதியாகும். அங்கு சரோஜினி தேவியின் கவிதை வளர்ச்சிக்கு உதவியவர்கள் ஆர்தர் சைமன்ஸ், எட்மண்ட் கோஸ் ஆகியோர்.

**கலப்புத் திருமணம்**

1898ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சரோஜினிதேவி தாயகம் திரும்பினார். கல்விப் பட்டங்களைப் பெறாத போதிலும், கவிஞர் என்னும் சிறப்புப் பட்டத்தோடு அவர் ஐதராபாத் வந்து சேர்ந்தார். டாக்டர் கோவிந்தராஜுலு நாயுடு மருத்துவத்தில் மேனாட்டுப் பட்டம் பெற்றவர். அந்நாளைய ஐதராபாத் சமஸ்தானத்தில் மருத்துவராகப் பணி புரிந்தவர். சரோஜினிதேவிக்கு டாக்டர் நாயுடுவை முன்னரே தெரியும். எனவே இருவருக்கும் திருமணம் நிச்சயமாயிற்று.

சரோஜினிதேவி பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; டாக்டர் கோவிந்தராஜுலு, நாயுடு வகுப்பு. இது கலப்புத் திருமணம். **இது பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது என்றாலும், திருமணம் தடைப்படவில்லை. கல்விக்குக் கைகொடுத்த சென்னையே கடிமணம் புரிந்து கொள்ளவும் உதவியது.** இந்தக் கலப்புத் திருமணம் 'பிரம்ம சமாஜ' முறைப்படி சென்னையில் 1898ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. பண்டிட் வீரேசலிங்கம் பந்துலு குருவாக இருந்து இந்தத் திருமணத்தை நடத்தி வைத்தது சிறப்பாக அமைந்தது.

**கவிதை உலகில்...**

இல்லற வாழ்வும் இனிதே நடந்தது. சரோஜினி நாயுடுவின் உடல் நலம் அப்போது சற்று நலமற்று இருந்தது என லாம். நான்கு மக்களைப் பெற்றெடுத்தார். கவியரசி. என்றாலும் அவருடைய 'மூன்று கவி மக்கள்' பெரும் புகழை அவருக்கு சேர்த்தார்கள்.

'பொன்வாயில்' என்ற கவிதை 1905ஆம் ஆண்டில் வெளியாயிற்று. 'காலப்பறவை' 1912 ஆம் ஆண்டில் வெளி வந்தது. 'முறிந்த சிறகு' 1917ஆம் ஆண்டில் புத்தகமாயிற்று. இவை, உலகெங்கும் கவியரசியின் புகழைப் பரப்பின. அவருடைய பாடல்கள் தன்னுணர்ச்சி மிக்கவை. அவருடைய பாடல்களில் எழில் தானே தவழும்; அவராகவே பாடலை அழகுபடுத்துவது இல்லை. 'உள்ளத்து உள்ளது கவிதை' என்பது அவரைப் பொறுத்தவரை முற்றிலும் பொருந்தும். இதயத்தில் இருந்து எழுவது அவருடைய பாடல்கள். 'உன்னைப் போன்ற ஒரு கவிக் குயிலுக்கு 'முறிந்த சிறகு' எதற்காக?' என்று அப்போதே திரு. கோகலே கூறியது நினைக்கத் தகுந்த ஒன்று.

**அரசியலில்...**

சரோஜினிநாயுடு 22 வயதிலேயே பெரும் பேச்சாளராகத் திகழ்ந்தார். வெளியார் ஆதிக்கத்திற்கு எதிராகவும், இந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் காக்கவும், அவர் அரசியல் வாழ்வில் நுழைந்தார். மாணவர் மாநாடுகளில் எல்லாம் சரோஜினிதேவிக்கும் ஒரு முக்கிய இடம் உண்டு. கோகலே, திலகர், நௌரோஜி, மாளவியா போன்ற பெருந்தலைவர்களுடன் ஒரே மேடையில் பேசியவர் அவர்.

1905ஆம் ஆண்டிலேயே அரசியல் வாழ்வில் நுழைந்த சரோஜினிதேவி திரு. கோபால கிருஷ்ண கோகலேயைக் குருவாகக் கொண்டிருந்தார். 1915 ஆம் ஆண்டில் ஓர் அரிய சந்திப்பு நிகழ்ந்தது. லண்டனில் காந்தியடிகளைச் சந்தித்தார் கவியரசி. இந்தச் சந்திப்பு கவிக்குயிலின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. காந்தியடிகளின் பாதையில் செல்லத் தொடங்கினார், சரோஜினிதேவி. ஜாலியன்வாலாபாக் படுகொலை அவர் மனத்தை மிகவும் பாதித்தது. முன்னொரு சமயம் சமூகப் பணிக்காகத் தமக்குக் கிடைத்த 'கேசரி-இ-ஹிந்த்' என்னும் தங்க பதக்கத்தை அரசிடம் கவியரசி திருப்பிக் கொடுத்துவிட்டார்.

**அன்னை இந்தியா**

விடுதலை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார். அவர் இசைத்த உரிமைக் கவிதைகளில் 'எழுக அன்னையே' என்ற ஆங்கிலக் கவிதை ஒரு சிறந்த கவிதையாக விளங்கியது.

எழுக! அன்னையே! எழுக!
இருள் நீக்கிப் புதுவாழ்வு
பெறுக!
விண்ணில் பிறந்த மணப்பெண்
போல்
உன்
காலங்கடந்த கருப்பையிலி-
ருந்து
புதிய புகழ்கள் பெறுக!
மதிப்புகள் வழங்க,
ஒளி பரவ,
வெற்றிகள் பரவ,
பலவித ஒலிகளால்
உன்னை அழைக்கிறது
வருங்காலம்!
கடந்த காலத்தில்
முடி சூடிய பேரரசியே!
உறங்கும் அன்னையே!
எழுக!

துயில் நீங்கி முடி சூடுக என்னும் இந்தக் கவிதையில் சரோஜினிதேவியின் உள்ளத்து உணர்வு வெளிப்படுகிறது. கவியரசி நேரடியாகவும் அரசியலில் பங்கேற்றார்.

**விடுதலைக் கீதம்**

காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகத்தில் அவர் கலந்து கொண்டார். வட்டமேஜை மாநாட்டிற்குக் காந்தியடிகளுடன் அவர் சென்று வந்தார். **சரோஜினிதேவி வாழ்க்கையின் பல திருப்பங்களுக்குத் தமிழகத் தலைநகர் சென்னை தானே கேந்திரம்.! எனவே காஞ்சிபுரத்தில் நடந்த தமிழக அரசியல் மாநாட்டிற்கு சரோஜினிதேவி தலைமை வகித்ததில் வியப்பில்லை.** வெளி நாடுகளில் இந்திய விடுதலையின் இன்றியமையாமையை எடுத்து விளக்கியவர்களில் சரோஜினிதேவி குறிப்பிடத்தக்கவர். 1942ஆம் ஆண்டில் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் சிறை சென்ற அனுபவம் உண்டு.

நாடு விடுதலை பெற்றதும் உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஆளுநராகப் பொறுப்பேற்றார். இந்தப் பொறுப்பில் இருக்கும் போதே 1950ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் நாளில் அவர் இயற்கை எய்தினார்.

''பறவையைப் போன்றது என் உணர்வு: இதைச் சிறைப்படுத்த முடியாது'' என்று கூறிய கவிக்குயில், உடல் சிறையைவிட்டு விடுதலைக் கீதம் இசைக்கப் பறந்துவிட்டது.

**—'சாந்தி'**

**நன்றி: திட்டம்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

அண்ணன் பிறந்த மண்ணில் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழா



சிறப்பு அணிவகுப்பு ஊர்வலம்

